# 1

# பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்


## 1.1 பொதுநோக்கு

**இலங்கையின் பொருளாதாரம் 2011இல் 8.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னைய வரலாற்றில் மிக உயர்வானதாக விளங்கி, தொடர்ந்து இரண்டாண்டுகளாக 8 சதவீதத்திற்கும் மேற்பட்ட வலுவான வளர்ச்சி உத்வேகத்தினை முதற்றடவையாகப் பதிவு செய்திருக்கின்றது.** சமாதானத்தின் நன்மைகளிலிருந்து தோன்றிய மேம்பட்ட நுகர்வோர் மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கை, சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள், அதிகரித்த இலயளவுப் பயன்பாடு, உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்கம் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதுப்பிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் என்பன இவ்வளர்ச்சிக்கு பக்கபலமாக விளங்கின. கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகள் 2011இன் உயர் வளர்ச்சி உத்வேகத்திற்கு தூண்டுதலளிப்பனவாக இருந்தன. ஆண்டின் தொடக்கப் பகுதியில் மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக வெளியீட்டில் இழப்புக்களைப் பதிவு செய்த வேளாண்மைத் துறை அதிலிருந்தும் மீட்சியடைந்திருக்கிறது. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் தொழிலின்மை வீதத்தில் பிரதிபலிக்கப்பட்டது. இவ்வீதம் 2011இல் 4.2 சதவீதம் கொண்ட மிகக் குறைந்த சாதனை மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது.


**மேம்பட்ட உள்நாட்டு நிரம்பல் நிலைமைகள், மத்திய வங்கியின் முன்மதியுடைய திரவத்தன்மை முகாமைத்துவம் மற்றும் சாதகமான பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றின் உதவியுடன் பணவீக்கமானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்படுகின்றது.** ஆண்டுச் சராசரி பணவீக்கம் 6.7 சதவீதமாக இருந்த வேளையில் ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கம் 2011 திசெம்பரில் 4.9 சதவீதமாக காணப்பட்டது. உள்நாட்டு உணவு நிரம்பலை தடங்கலுறச் செய்த மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக ஆண்டின் முதல் ஒரு சில மாதங்களில் ஆண்டிற்கான பணவீக்கம் மேல் நோக்கி நகர்ந்தது. எனினும், உள்நாட்டு உணவு உற்பத்திகள் குறிப்பிடத்தக்களவிற்கு மீட்சியடைந்தமையுடன் மேயில் இப்போக்கு மாற்றமடைந்ததுடன் ஆண்டின் இறுதியில் பணவீக்கமானது நடு ஒற்றை இலக்க மட்டத்தில் பேணப்பட்டது.

**தாழ்ந்த பணவீக்கமும் குறைக்கப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்களும் 2011 சனவரியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையினை தொடர்வதற்கு மத்திய வங்கியை அனுமதித்ததெனினும் கொடுகடனும் நாணயக் கூட்டுக்களும் எறிவு செய்யப்பட்டதிலும் பார்க்க உயர்ந்த வேகத்தில் தொடர்ந்தும் அதிகரித்தமையின் காரணமாக அதன் பின்னர் எச்சரிக்கையுடன் கூடிய படிப்படியாக இறுக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.** சாதகமான பணவீக்க சூழலைக் கருத்திற் கொண்டு வளர்ச்சியடைந்து வரும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதற்காக 2011 சனவரியில் கொள்கை வட்டி வீதங்களான மீள்கொள்வனவு வீதத்தினையும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தினையம் முறையே 25 மற்றும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.00 சதவீதத்திற்கும் 8.50 சதவீதத்திற்கும் குறைத்தமையின் மூலம் சனவரி நடுப்பகுதியில் நாணயக் கொள்கை மேலும் தளர்த்தப்பட்டது. எனினும், உயர்ந்த மிகையான ரூபாத் திரவத்தன்மையும் கேள்வியினால் தூண்டப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் தோன்றக்கூடிய சாத்தியங்களும் வர்த்தக வங்கிகளில் அனைத்து ரூபா வைப்புக்கள் மீதுமான நியதி ஒதுக்கு விகிதத்தினை 2011 ஏப்பிறலில் ஒரு சதவீதப் புள்ளியினால் 8 சதவீதத்திற்கு உயர்த்துவதனை தேவைப்படுத்தியது. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, பணத்திற்கான அதிகரித்த கேள்வியின்

**வரைபடம் 1.1** ஆண்டுக்கான உண்மை மொ.உ.உ. வளர்ச்சி வீதம்




**வரைபடம் 1.2** ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் (கொ.நு.வி.சு. அடிப்படையில், வேறுபட்ட அடிப்படை ஆண்டுகளின் அடிப்படையில்)




காரணமாக ஒதுக்குப் பணம் மற்றும் விரிந்த பணம் ($M_{2b}$) இரண்டும் எறிவு செய்யப்பட்டதிலும் பார்க்க உயர்ந்த அளவில் வளர்ச்சியடைந்தன. இவ்வாண்டுப் பகுதியில் விரிந்த பணத்தின் சராசரி வளர்ச்சி 2011 இற்கான நாணய நிகழ்ச்சித்திட்டத்தில் இலக்கிடப்பட்ட 14.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 19.3 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப் பகுதியில் சராசரியாக 32.4 சதவீதத்தினால் அதிகரித்த வங்கித்தொழில் முறைமையினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் விரிவாக்கமே முக்கிய காரணமாகும். தனியார் துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சியானது கொடுகடனுக்கான அடக்கி வைக்கப்பட்ட கேள்வியையும் சமாதான நன்மைகளின் பெறுபேறாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட கொடுகடனைப் பெறுவதற்கான வழிவகைகள் அதிகரித்தமையையும் பிரதிபலித்தது. இவ்வாண்டுப் பகுதியில் அரசு மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனும் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்து உயர்ந்த நாணய விரிவாக்கத்திற்குப் பங்களித்தது. கொடுகடன் தடையின்றி தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தமையினால் 2012 பெப்புருவரியில் மத்திய வங்கி மீள்கொள்வனவு வீதத்தினையும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தினையும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.50 சதவீதத்திற்கும் 9.00 சதவீதத்திற்கும் உயர்த்தியது. பணவீக்க அழுத்தங்களை அதிகரிக்கக்கூடிய சாத்தியமான கேள்வியைக் கட்டுப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினை பாதுகாக்கும் பொருட்டும் இறக்குமதியுடன் தொடர்பான கொடுகடன்களை மட்டுப்படுத்துவதற்காகவும் மத்திய வங்கி, கொடுகடன் வளர்ச்சியை வெளிநாட்டிலிருந்தான நிதியங்களின் மூலங்களினூடாக நிதியிடப்படும் கொடுகடனுக்கான அனுமதிக்கப்பட்ட மேலதிகமான 5 சதவீதத்துடன் 18 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தும் விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 101(1) இன் கீழ் 2012 மாச்சில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு பணிப்புரையொன்றினையும் விடுத்தது.

2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுடன் ஒத்துச்செல்லும் விதத்தில், முக்கியமான இறைக்குறிகாட்டிகளை பரந்தளவில் பேணுவதன் மூலம் இறைத்திரட்சி செயற்பாடுகளுக்கான அதன் கடப்பாடுகளை **அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியது.** அரசிறைச் சேகரிப்பில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் மீண்டெழும் செலவினம் தொடர்பான முன்மதியுடைய முகாமைத்துவம் இறைப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் 6.9 சதவீதத்தில் பேணுவதற்கு உதவியது. இது, வரவு செலவுத்திட்ட மதிப்பீடான மொ.உ.உற்பத்தியான 6.8 சதவீதத்தினை விட சிறிதளவு உயர்வானதாகும். வரிச் சேகரிப்பினை வலுப்படுத்துகின்ற அதேவேளையில் தனியார் முதலீடுகளைக் கவர்வதற்கான சூழலையும் உருவாக்கும் நோக்குடன் வரி முறைமையினை இலகுபடுத்துவதற்காகவும் வரித் தளத்தினை விரிவுபடுத்துவதற்காகவும் வரி இணங்குவிப்புக்களை மேம்படுத்துவதற்காகவும் 2011 இற்கான வரவு செலவுத்திட்டம் முக்கியமான வரிச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. மேலும், குறிப்பிட்ட துறைகளில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக பல்வேறு வரி ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்ட வேளையில் நிதியியல் துறை போன்ற பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை அபிவிருத்தி செய்வதனை வரி அமைப்பிற்கான மாற்றங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன. வரிச் சீர்திருத்தங்கள் நடுத்தர காலத்தில் அரசிறைத் திரட்டல்களை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்த வேளையில், அநேக வரிகளின் ஒழிப்பும் வரி வீதங்களில் செய்யப்பட்ட குறைப்பும் இவ்வாண்டுப் பகுதியில் வரி அரசிறைச் சேகரிப்புக்களில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தன. மீண்டெழும் செலவினம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமையும் வட்டிச் செலவினத்தில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சி சாதகமான வட்டி வீத சூழ்நிலையினைத் தோற்றுவித்தமையும் மீண்டெழும் செலவினத்தைக் கட்டுப்படுத்த உதவிய வேளையில், அரச உட்கட்டமைப்பின் மீதான முதலீடு உயர் வளர்ச்சி உத்வேகத்திற்கு உதவியளிக்கக் கூடிய மட்டத்தில் பேணப்பட்டது. இறைத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதம் 2010இன் 81.9 சதவீதத்திலிருந்து 78.5 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

2011இன் முதலரைப் பகுதியில் வலுவடைந்திருந்த **வெளிநாட்டுத் துறை, மோசமான உலகளாவிய நிகழ்வுகள் மற்றும் இறக்குமதிகளின் விரைந்த வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக ஆண்டின் பிற்பகுதியில் அழுத்தங்களுக்குட்பட்டது.**

சிறப்புக்குறிப்பு 1

## 2011இல் பொருளாதாரம் ஒரே பார்வையில்

### வளர்ச்சி, பணவீக்கம் மற்றும் தொழிலின்மை

- பொருளாதாரம் 8.3 சதவீதம் கொண்ட உயர் மட்டத்திற்கு வளர்ச்சியடைந்தது - முதற்றடவையாக நாடு தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக 8 சதவீதத்திற்கு மேற்பட்ட வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- தலைக்குரிய வருமானம் முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 2,400 இலிருந்து ஐ.அ.டொலர் 2,836 இற்கு அதிகரித்தது.
- பணவீக்கம் குறைவடைந்து தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்பட்டது.
- தொழிலிலின்மை 4.2 சதவீதத்திற்கு குறைவடைந்து இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த மட்டமாகக் காணப்பட்டது.
- இளைஞர் தொழிலின்மையில் கணிசமான முன்னேற்றம்.

### வெளிநாட்டுத் துறை

- ஏற்றுமதியில் வளர்ச்சி, இது 22.4 சதவீதமாக விளங்கியதுடன் இறக்குமதிகளின் வளர்ச்சி 50.7 சதவீதமாக அமைந்து முன்னையதை விஞ்சிக் காணப்பட்டது.
- வர்த்தகப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 16.4 சதவீதத்திற்கு மிகக் கூடுதலாக விரிவடைந்தது.
- சுற்றுலாப் பயணிகளின் வருகை 850,000 விஞ்சியதுடன் வருவாய்கள் ஐ.அ.டொலர் 830 மில்லியனை பதிவு செய்தன.
- தொழிலாளர் பணவனுப்பல் ஐ.அ.டொலர் 5.1 பில்லியனை எட்டியது.
- நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை கடந்த 10 ஆண்டுகளில் காணப்பட்ட ஏறத்தாழ 3.1 சதவீத சராசரி பற்றாக்குறைகளுடன் ஒப்பிடுகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.8 சதவீதம் கொண்ட கணிசமான உயர்வொன்றில் காணப்பட்டது.
- நாட்டின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் முதல் தடவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சின.
- சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் பற்றாக்குறையை பதிவு செய்தது.
- மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2010 திசெம்பரில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 6.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் இறுதியில் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனாக அமைந்தது.
- ஆண்டின் இறுதியில் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

### இறைத் துறை

- இறைத்திரட்சி மீதான வலியுறுத்தல்கள் 2011இலும் தொடர்ந்தன.
- அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி, 2010இன் மொ.உ.உற்பத்தியின் விகிதமான 14.6 சதவீதத்திலிருந்து 14.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.
- மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும் மொ.உ.உற்பத்தியின் 21.4 சதவீதத்தில் பேணப்பட்டது.
- திரண்ட இறைப் பற்றாக்குறை இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு சிறிது மேலே மொ.உ.உற்பத்தியின் 6.9 சதவீதமாகக் காணப்பட்டது.
- மொ.உ.உற்பத்தி விகிதத்திற்கான அரச படுகடன் 2010இன் 81.9 சதவீதத்திலிருந்து 78.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கடந்த 30 ஆண்டு காலப்பகுதியில் 80 சதவீதத்திற்கு குறைவடைந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.
- அரசாங்கம் ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான நான்காவது பன்னாட்டு முறியினை வழங்கியது.

### நாணய மற்றும் நிதியியல் துறை

- தனியார் துறையின் முதலீடுகளை அதிகரிப்பதற்காக முக்கிய கொள்கை வட்டி வீதங்கள் 2011 சனவரியில் குறைக்கப்பட்டன.
- மிகையான திரவத்தன்மையின் ஒரு பகுதியை நிரந்தரமாக ஈர்த்துக் கொள்ளும் பொருட்டு நியதி ஒதுக்கு விகிதம் ஏப்பிறலில் 8 சதவீதத்திற்கு 1 சதவீதப் புள்ளியால் உயர்த்தப்பட்டது.
- நாணய விரிவாக்கம் சராசரியாக 19.3 சதவீதத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு மேலே தொடர்ச்சியாகப் பேணப்பட்டது.
- ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் சந்தை வட்டி வீதங்கள் பெருமளவிற்கு உறுதியாகக் காணப்பட்டவெனினும் அதன் பின்னர் அதிகரிக்கத் தொடங்கின.
- நிதியியல் முறைமைகளின் உறுதிப்பாடு தொடர்ந்தும் நன்கு பாதுகாக்கப்படும்.
- புதிய நிதித்தொழில் சட்டமொன்று இயற்றப்பட்ட வேளையில் பல புதிய பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.
- செயற்படாக் கடன்களின் விகிதம் இவ்வாண்டுப் பகுதியில் வீழ்ச்சியடைந்தது.
- மூலதனப் போதுமை விகிதத்தில் வீழ்ச்சியொன்று காணப்பட்ட போதும் வங்கித்தொழில் முறைமை நன்கு மூலதனமயப்படுத்தப்பட்டிருந்தது.
- நிதியியல் நிறுவனங்களின் கிளை வலையமைப்பு விரிவடைந்தமையினைத் தொடர்ந்து நிதிகளை பெற்றுக் கொள்ளும் வசதி மேம்பாடடைந்து மேலும் முன்னேற்றங்களைக் காட்டியது.

இவ்வாண்டுப் பகுதியில் ஏற்றுமதிகள் 22.4 சதவீதத்தினால் ஆரோக்கியமான முறையில் வளர்ச்சியடைந்த போதும் உயர்ந்த எண்ணெய் விலைகள் மற்றும் முதலீட்டு மற்றும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 50.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்த இறக்குமதிச் செலவினம் முன்னொருபோதுமில்லாத உயர்ந்த மட்டத்திற்கு வர்த்தகப் பற்றாக்குறை உயர்வடைய வழிவகுத்தது. தனியார் பணவனுப்பல்கள் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் உட்பட பணிகள் கணக்கிற்கான ஏனைய உட்பாய்ச்சல்களூடாக மேம்பட்ட வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் காணப்பட்டு வர்த்தகப் பற்றாக்குறையின் கணிசமான பகுதியை ஈடுசெய்வதற்கு உதவிய போதும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2010இன் 2.2 சனவரியிலிருந்து 2011இல் 7.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உட்பட தனியார் நீண்ட கால முதலீடுகளின் உட்பாய்ச்சல்களும் அரசிற்கான உட்பாய்ச்சல்களும் ஆரோக்கியமானவையாகக் காணப்பட்டன. எனினும், இவ்வுட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையினை

எதிரீடு செய்யப் போதுமானதாக இருக்காமையினால் 2011 ஓகத்தில் மிகையைப் பதிவு செய்த சென்மதி நிலுவை 2011 இறுதியில் ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் கொண்ட பற்றாக்குறைக்கு மாறியது. உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி அதிகரித்தமை உயர்ந்த பற்றாக்குறையினைப் பிரதிபலித்தமையின் காரணமாக செலாவணிச் சந்தையின் அழுத்தத்தினைக் குறைப்பதற்காக மத்திய வங்கி தலையிட்டது. இதன் விளைவாக, 2011 ஓகத்து நடுப்பகுதியில் ஐ.அ.டொலர் 8.2 பில்லியனாக விளங்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2011 இறுதியில் ஐ.அ.டொலர் 6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டு உறுதிப்பாட்டினை மேலும் வலுப்படுத்துவதற்காக, 2012 பெப்புருவரியில், மத்திய வங்கி உள்நாட்டின் செலாவணிச் சந்தையில் அதன் தலையீட்டினை மட்டுப்படுத்திக் கொண்டமையின் மூலம் செலாவணி வீதத்தில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதித்தது. மேலும், செலாவணி வீதத்திலான உயர்ந்த நெகிழ்ச்சித்தன்மையைப் பின்பற்றியமையுடன் மத்திய வங்கி வர்த்தக வங்கிகளின் நாளாந்த தேறிய திறந்த நிலமையினை வெளிநாட்டுச் செலாவணியின் நாளாந்த தொழிற்படும் நிலுவைக்கேற்றவாறு மட்டுப்படுத்துவதன் மூலமும் முன்னோக்கிய ஒப்பந்த காலத்தினை உயர்ந்தபட்சம் 90 நாட்களுக்கு மட்டுப்படுத்துகின்றதன் மூலமும் ஊக நடவடிக்கையினைக் குறைப்பதற்காக வங்கி முன்மதியுடைய வழிமுறைகளைப் பின்பற்றியது. மேலும், நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலை ஊக்குவிப்பதற்காக செலாவணி வீதக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை மேலும் தளர்த்துவது உட்பட பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

**தூண்டுதலளிக்கும் பேரண்டப் பொருளாதார நிலைமைகள், வலுவாக்கப்பட்ட மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதிகள் என்பன நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு மேலும் மேம்பாடடைய உதவின.** நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பாடடைந்த வேளையில் முன்மதியுடைய குறிகாட்டிகள் போதுமான மூலதனம், திரவத்தன்மைத் தாங்கிருப்பு மற்றும் ஆரோக்கியமான இலாபமட்டங்கள் என்பனவற்றுடன் பேணப்பட்டன. செயற்படாக் கடன்களின் சாதகமான அபிவிருத்தியினாலும் குறைவடைந்த கொடுகடன் இடர்நேர்வுகளினாலும் பிரதிபலிக்கப்பட்டவாறு வங்கித்தொழில் துறையின் சொத்துக்களின் தரம் மேம்பட்டது. வங்கித்தொழில், நிதி மற்றும் குத்தகைக்குவிடல் மற்றும் காப்புறுதித் துறைகள் அவற்றின் கிளை வலையமைப்பினை வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட பல இடங்களிலும் விரிவாக்கிக் கொண்டன. இதன் மூலம் நிதிப் பணிளைப் பெற்றுக் கொள்வதற்கான வழி வசதிகள் அதிகரித்தன. இவ்வாண்டுப் பகுதியில், பங்குகளில் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை மேம்படுத்துவதற்காகவும் வாடிக்கையாளர் பாதுகாப்பினை உயர்த்துவதற்காகவும் மத்திய வங்கி அதன் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தியது. அதிகாரமளிக்கப்படாதவர்கள் வைப்புக்களை ஏற்றலையும் நிதி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதனையும் கட்டுப்படுத்தும் பொருட்டு நிதிக் கம்பனிகள் சட்டத்திற்குப் பதிலாக புதிய நிதித்தொழில் சட்டமொன்று இயற்றப்பட்டதுடன் நிதித் திரட்டல் நடவடிக்கைகளின் பரந்தளவு வீச்சினை உள்ளடக்கும் விதத்தில் தொழில் சட்டத்திற்கு இசைவாக புதியதும் திருத்தப்பட்டதுமான பணிப்புரைத் தொடர்கள் வங்கியல்லா நிதியியல் துறைக்கு வழங்கப்பட்டன. வங்கித்தொழில் குழுமங்களின் திரட்சிப்படுத்தப்பட்ட மேற்பார்வையினை இயலச் செய்வதற்கான ஏற்பாடுகளுடன் கூடிய வங்கித்தொழில் சட்டத்திற்கான உத்தேசத் திருத்தங்களும் ஒன்றிணைப்பினை வசதிப்படுத்துவதற்கான வழிமுறைகளும் திரட்சிப்படுத்தல் மற்றும் தீர்வுகளுக்கான பொறுப்பேற்புக்களும் ஒப்புதலுக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டுப் பகுதியில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை மேலும் அபிவிருத்தி செய்யப்பட்ட வேளையில் தோற்றம் பெற்றுவரும் இலத்திரனியல் கொடுப்பனவு பொறிமுறையினை உள்ளடக்கத்தக்க விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு விரிவாக்கப்பட்டது.

**உலகளாவிய பண்ட விலைகளில் குறிப்பாக எண்ணெய் விலைகளைப் பொறுத்தவரை நிச்சயமற்ற தோற்றப்பாட்டினைக் கருத்திற் கொண்டு பணவீக்கத்தினை தாழ்ந்த மற்றும் உறுதியான மட்டத்தில் பேணும் பொருட்டு சவால்மிக்க முன்னோக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.** அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகள் வளர்ச்சியை மிதப்படுத்தி கேள்வி அழுத்தத்தினை ஓரளவிற்குக் குறைக்கின்ற போதும், பணவீக்கத்தினை நடு ஒற்றை இலக்க மட்டத்தில் பேணுவதற்கு கேள்வி அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்துவதற்கு நாணயக் கொள்கையினை தொடர்வது அவசியமான விடயமாகவுள்ளது. போதுமான உள்நாட்டு உணவு நிரம்பலை உறுதிப்படுத்தும் விதத்தில் வழங்கல்பக்க அதிர்வுகளைக் கட்டுப்படுத்துவதும் கேள்வி முகாமைத்துவ உபாயங்களை வசதிப்படுத்துவதற்கு தேவையாக இருக்கும். உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் நியாயமான விலைகள் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்கு, உள்ளூர் நிலைமைகளுக்குப் பொருத்தமான வேறுபட்ட விதைகளை விருத்தி செய்வது, தடங்கலற்ற நிரம்பலை உறுதிப்படுத்தும் விதத்தில் வேறுபட்ட வேளாண்மை காலநிலை வலயங்களுக்குள் பயிர்ச்செய்கையை விரிவாக்குதல், களஞ்சியப்படுத்தல் வசதிகளை அதிகரித்தல், ஆரம்பம் முதல் உற்பத்தி முடிவுவரையான வழங்கல் சங்கிலியை மேம்படுத்தல் என்பன இது தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான விடயங்களாகவுள்ளன.

**இலங்கையின் உறுதியான வளர்ச்சி உத்வேகம் நாட்டின் உயர் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்சென்று உலகின் மத்திய வருமான பொருளாதாரங்களிடையே நிலைப்படுத்தியிருக்கிறது.** இத்தகைய பின்னணியில், உள்ளார்ந்த வளர்ச்சியில் கீழ் நோக்கிய இடர்நேர்வினை கொண்டிருக்கக் கூடிய சவால்கள்

சிறப்புக்குறிப்பு 2

## மத்திய வங்கியினால் கடைப்பிடிக்கப்பட்ட அண்மைக்கால கொள்கை வழிமுறைகள்

### கவர்ச்சிகரமான பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றம்

மோதலுக்குப் பின்னரான காலத்தில் இலங்கையின் பேரண்டப் பொருளாதார செயற்பாடானது கவர்ச்சிகரமானதாகவிருந்தது. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளிலுமான பலமான வளர்ச்சிப் போக்கின் விளைவால் 2011இன் இறுதியில் தொடர்ந்து இரண்டு வருடங்களாக 8 சதவீதம் அல்லது அதற்கு மேலானதோர் ஆண்டு வளர்ச்சி ஏற்பட்டது. பணவீக்கமானது அநேகமாக மூன்று ஆண்டுகள் ஒற்றை இலக்கத்தில் காணப்பட்டது. கணிசமான நீண்ட காலத்திற்கு ஒப்பீட்டளவில் குறைவான வட்டி வீதமும் நிலையான நாணய மாற்று வீதமும் அவதானிக்கப்பட்டது. இறைக் குறிகாட்டிகளான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் விகிதம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை விகிதம் என்பன தொடர்ந்து முன்னேற்றமடைந்த அதேவேளை வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறை விரிவாக்கமடைந்ததுடன் உறுதித்தன்மை வலுவாக்கப்பட்டது. அதிகரித்த ஏற்றுமதி வருவாய், வெளிநாட்டு பணவனுப்பல்கள், சுற்றுலாப் பயணிகளிடமிருந்தான வருவாய்கள் மற்றும் முதலீட்டு உட்பாய்ச்சல்கள் என்பவற்றுக்கிடையில் ரூபா அளவுக்கதிகமாக பெறுமதியில் உயர்வடைவதைத் தடுப்பதற்காக மத்திய வங்கி இவ்வுட்பாய்ச்சல்களின் கணிசமானளவை ஈர்த்துக் கொண்டமையினால் வெளிநாட்டு ஒதுக்குகள் 2011 ஓகத்தில் வரலாற்றில் உயர்வான மட்டத்தினை அடைந்தன. பௌதீக உட்கட்டமைப்பின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அவதானிக்கப்பட்ட அதேவேளை குறிப்பாக வறுமை மற்றும் வேலையின்மை போன்ற சமூக குறிகாட்டிகள் கணிசமானளவில் முன்னேற்றமடைந்து இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேலுயர்த்தியது. இந்தச் சாதகமான அபிவிருத்திகள் எந்தவொரு எதிர்பாராத மோசமான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு இடர்நேர்வுகளிலிருந்தும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதுகாப்பினை வழங்கின.

### 2011இல் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள்

அதேவேளை, இவ்வாண்டின் மூன்றாம் காலாண்டு இறுதியில் பொருளாதாரத்தில் சில சமநிலையின்மைகள் தோற்றம் பெற்றன. உலகப் பொருளாதார நிலைமை 2011இலும் தொடர்ந்து மோசமடைந்ததுடன் பன்னாட்டு வலு மற்றும் பண்டங்களின் விலைகள் தொடர்ந்து உயர்வாகக் காணப்பட்டன. ஏற்றுமதி வருவாய்கள் 2011 காலப்பகுதியில் 22 சதவீதத்திற்கும் அதிகமாக ஓர் ஆரோக்கியமான வளர்ச்சியினைப் பதிவு செய்த போதிலும் தொடர்ச்சியான உள்நாட்டு பொருளாதாரத்தின் பலமான வளர்ச்சியால் திரண்ட இறக்குமதிச் செலவினமானது 50 சதவீதத்திற்கும் அதிகமாக விரைவாக அதிகரித்தது. இறக்குமதிச் செலவில் ஏற்பட்ட 80 சதவீத அதிகரிப்பு பாரியளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக முன்னேற்றமடைந்த பொருளாதார நடவடிக்கை மற்றும் அதிகரித்த முதலீட்டாளர் நம்பகத்தன்மை என்பவற்றை பிரதிபலித்த இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் உயர் ஏற்றுமதிகளால் ஏற்பட்டது. மசகு எண்ணெயின் விலைகள் 2010இன் சராசரி விலையினை விட 2011இல் கணிசமானளவு உயர்வாகக் காணப்பட்டமையுடன் வெப்ப மின் உருவாக்கத்திற்கான உயர் அளவிலான இறக்குமதிகளின் காரணமாக பெற்றோலிய இறக்குமதிச் செலவு கணிசமான அளவிற்கு அதிகரித்தது. அதிகரித்த வீட்டுடைமையாளர் வருமானங்களுடன் மோட்டார் வாகனங்கள் மற்றும் நீண்ட கால நுகர்வோர் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவும் அதிகரித்தது. இதன் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறையானது 2010இல் பதிவான ஐ.அ.டொலர் 4.8 பில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 9.7 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. நாணயத் துறையினைப் பொறுத்தவரையில் முதலீடுகளுக்கான உகந்த சூழல், அதிகரித்த உள்நாட்டுக் கேள்வி, கொடுகடனினைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் முன்னேற்றமடைந்தமை, நிதி நிறுவனங்களின் ஆற்றல்களின் மேம்பாடு மற்றும் முன்னேற்றமடைந்த வியாபார நம்பகத்தன்மை என்பவற்றில் பிரதிபலித்த அதிகரித்த பொருளாதாரச் செயற்பாடானது தனியார் துறையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கொடுகடனில் மீளவும் அதிகரிப்பை ஏற்படுத்தியதுடன் தனியார் துறைக்கான கொடுகடன் 2011 ஆண்டு காலப்பகுதியில் சராசரியாக 32 சதவீதத்திற்கும் அதிகமாக வளர்ச்சியடைந்தது. கொடுகடன் வளர்ச்சியினுள் இறக்குமதியுடன் தொடர்பான கொடுகடனும் கணிசமானளவு வளர்ச்சியடைந்த அதேவேளை இறக்குமதியுடன் தொடர்பான பொருட்களினால் குறிப்பாக உந்து ஊர்திகள், பொறிகள், நீண்டகால நுகர்வுப் பொருட்கள் மற்றும் தங்கம் போன்றவற்றால் உந்தப்பட்ட கொடுகடனின் விரைவான அதிகரிப்பும் இக்காலப்பகுதியில் அவதானிக்கப்பட்டது. முதன்மைப் பணவீக்கம் மற்றும் மையப் பணவீக்கம் என்பன ஒற்றை இலக்கத்தில் காணப்பட்ட போதும் வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட கொடுகடனின் உயர் வளர்ச்சியானது கேள்வித் தூண்டல் பணவீக்கத்தினை உருவாக்குவதற்கும் மேலும் இறக்குமதிக்கான கேள்வியினை அதிகரிப்பதற்குமான சாத்தியப்பாட்டினைக் கொண்டிருப்பதால் இது கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

இந்த அபிவிருத்திகளின் ஒட்டுமொத்தத் தாக்கம் நாணய மாற்று வீதத்திலும் வெளிநாட்டு ஒதுக்குகளிலுமான அழுத்தத்தினை அதிகரித்ததுடன் மத்திய வங்கியானது அதிகரித்த உள்நாட்டுக் கேள்விக்கு உதவுவதற்கும் அதேவேளை உலகளாவிய அதிர்வுகளின் பாதிப்புக்களை சரிப்படுத்துவதற்காகவும் தேவைக்கு அதிகமாக இருக்கும் தனது பன்னாட்டு ஒதுக்கின் ஒரு பகுதியினை சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குவதற்காக விவேகத்துடன் பயன்படுத்தியது. வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குவதனூடாக சந்தையில் மத்திய வங்கியின் தலையீடானது நாணய மாற்று வீதத்தில் அளவுக்கதிகமான தளம்பலினை தடுத்தது.

### தீர்க்கமான கொள்கை வழிமுறைகளூடாக சவால்களைத் தீர்த்தல்

உயர் கொடுகடன் வளர்ச்சி மற்றும் உயர் வர்த்தகப் பற்றாக்குறை என்பன உலகப் பொருளாதாரத்தின் தாமதமான மீட்சி காரணமாக ஆண்டின் இறுதியளவில் குறைவடையுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உள்நாட்டிலான பலமான வியாபார நம்பிக்கையுடன் கடன் வளர்ச்சி மற்றும் விரிவடைந்து செல்லும் வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ந்தும் குறைவடையாது காணப்பட்டது. இதன்படி, மத்திய வங்கியானது 2012இலும் அதற்கப்பாலும் பணவீக்கமானது தொடர்ந்து ஒற்றை இலக்க மட்டத்தில் பராமரிக்கப்படுவதனை பயனுறு வகையில் உறுதிப்படுத்திய அதேவேளை, 2012 பெப்புருவரியிலும் மாச்சிலும் வர்த்தகம் மற்றும் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறைகளை குறைத்தல் மற்றும் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டை பலப்படுத்தும் நாணய மற்றும் வெளிநாட்டுத் துறைக் கொள்கை வழிமுறைகளை அறிவித்தது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

1. மத்திய வங்கியின் பிரதான கொள்கை வட்டி வீதங்களான மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகிய இரண்டும் ஒவ்வொன்றும் 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 7.50 சதவீதத்திற்கும் 9.00 சதவீதத்திற்கும் 2012 பெப்புருவரி 3ஆம் திகதி அதிகரிக்கப்பட்டன.

2. 2012 பெப்புருவரி 03 - 09 வரையான காலப்பகுதியில் மத்திய வங்கியும் நாணய மாற்று வீத மட்டத்தினை மேல் நோக்கி நகர்த்தியதன் மூலம் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபாவின் பெறுமதியினை 87 சதத்தினால் (0.75 சதவீதம்) ரூ.114.94 இற்கு மதிப்பிறக்கம் செய்வதற்கு அனுமதித்தது.

3. 2012 பெப்புருவரி 9ஆம் நாளன்று மத்திய வங்கியானது விலையை அடிப்படையாகக் கொண்ட தலையீட்டு உபாயத்திலிருந்து விலகி இருப்பதற்கும் செலாவணி மாற்று வீதத்தில் அதிகம் தளர்வினை அனுமதிப்பதற்கும் அளவை அடிப்படையாகக் கொண்ட உபாயத்தினூடாக சந்தைத் தலையீட்டினை மட்டுப்படுத்துவதற்கும் தீர்மானித்தது.

4. வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மற்றும்/ அல்லது கொள்வனவுக்கான முன்னோக்கிய ஒப்பந்தங்களை புதுப்பித்தலுக்கான அனுமதியின்றி ஆகக் கூடியது 90 நாட்களுக்குள் மட்டுப்படுத்தும் பணிப்புரை 2012 மாச்சு 1இல் வெளிநாட்டுச் செலாவணியின் அனுமதியளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்டது. இது மேலும், முன்னோக்கிய ஒப்பந்தமானது ஒன்றில் பணிகள் அல்லது பொருட்களின் வர்த்தகத்துடன் தொடர்புபட்டதன் கீழான கொடுக்கல்வாங்கல்களை அல்லது அனுமதியளிக்கப்பட்ட மூலதன கொடுக்கல்வாங்கல்களை பின்புலமாக கொண்டிருத்தல் வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

5. 2012 மாச்சு 2இல் வெளிநாட்டுச் செலாவணியின் நாளாந்த தொழிற்பாட்டு மீதியுடன் தொடர்பான வர்த்தக வங்கிகளின் நாளாந்த தேறிய திறந்தநிலை மீதான வரையறைகள் குறைந்தது ஐ.அ.டொலர் 1 மில்லியன் கொண்ட தொகைக்குட்பட்டு இதுவரை காணப்படும் இடர்காப்பின்மை மட்டத்தின் 1/3 இற்கு குறைக்கப்பட்டது.

6. மாச்சு 12இல் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 101(1)இன் கீழ் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் தமது 2012இன் மொத்த ரூபாவிலான கொடுகடனினை 2011 இறுதியில் அவர்களின் தொடர்பான கடன் ஏட்டில் வெளிநின்ற தொகையின் 18 சதவீதத்தினை அல்லது ரூ.800 மில்லியனில் இதில் எது உயர்வோ அதனை விஞ்சாதவாறு கொடுகடன் வழங்கலினை குறைக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்ட அதேவேளை வெளிநாடுகளிலிருந்து நிதியினைச் சேகரித்து மேலதிக கொடுகடன் வளர்ச்சிக்கு நிதியளிக்கும் வங்கிகள் கொடுகடன் வளர்ச்சியினை 23 சதவீதமாக அல்லது ரூ.1 பில்லியனுக்கு இதில் எது அதிகமோ அதனை மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

இதற்கு இணையாக உள்நாட்டு பெற்றோலிய விலைகள் மற்றும் மின்சார தீர்வை என்பவற்றின் உண்மையான உற்பத்திச் செலவினையும் பன்னாட்டுச் சந்தையில் அதிகரிக்கும் வலுவின் விலைகளையும் பிரதிபலிக்கும் வகையில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் இவை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின் சபை என்பவற்றின் வர்த்தக இயலுமையை உறுதிப்படுத்துவதுடன் வங்கித்தொழில் முறைமையின் மீதான அழுத்தத்தினை குறைக்கும், சென்மதி நிலுவை மீதான அழுத்தங்களை குறைக்கும் வகையில் பொருளாதார முகவர்கள் அதிகம் உண்மைத் தன்மை வாய்ந்த வலுச் செலவின் அடிப்படையில் அவர்களின் நடத்தைகளை மேற்கொள்ளவும் ஊக்கப்படுத்தும். 2012 மாச்சு 31ஆம் நாளன்று அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வைகளின் மேல் நோக்கிய திருத்தமும் இறக்குமதிகளிலான குறைப்புக்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**பேரண்டப் பொருளாதார மாறிகள் மீது அண்மைய கொள்கைகளின் தாக்கம்**

மத்திய வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகள் மற்றும் பொது வசதிகள் என்பன பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய பாதகமான விளைவுகளை குறைப்பதற்கு, கடந்த இரண்டாண்டுகளில் பொருளாதாரத்தினுள் கட்டியெழுப்பப்பட்ட இடைவெளியினை பயன்படுத்திக் கொள்வதற்காக வரிசைப்படுத்தப்பட்டு நேரத்துடன் மேற்கொள்ளப்பட்டது. இப்பின்னணியில், ஆண்டின் தொடக்கத்தில் "வழிகாட்டல்: 2012 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய நிதியியல் கொள்கைகள்" இல் அறிவிக்கப்பட்ட சில பேரண்டப் பொருளாதார மாறிகளுக்கான எறிவுகள், இக்கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினைக் கருத்திற் கொண்டு திருத்தப்பட்டன. இந்த வழிமுறைகளினால் நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் ஆரம்பத்தில் சிறிது அதிகரிப்பினை காட்டினாலும் கூட்டுக் கேள்வியின் குறைவின் விளைவால் பணவீக்கமானது ஆரம்பத்தில் எறிவு செய்யப்பட்ட நடு ஒற்றை இலக்க மட்டங்களிலேயே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை 2012இன் பொருளாதார வளர்ச்சியானது ஆரம்பத்தில் எறிவு செய்யப்பட்ட 8.0 சதவீதத்திலிருந்து 7.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், இந்த திருத்தப்பட்ட எறிவுகள் அடையப்படும் பொழுது அது தற்போதைய உலகளாவிய பொருளாதாரங்களில் காணப்படும் வாய்ப்பற்ற மற்றும் செயலிழந்த பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் ஓர் குறிப்பிடத்தக்க அடைவாகும்.

வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பாக, அண்மைய கொள்கை வழிமுறைகளைத் தொடர்ந்து இறக்குமதிச் செலவினத்தின் மீதான குறைவடைவொன்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐ.அ.டொலர் 23.4 பில்லியனாக ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட 2012 இற்கான இறக்குமதிகள் மீதான செலவினத்துக்கான எறிவு ஐ.அ.டொலர் 20.9 பில்லியனுக்கு கீழ் நோக்கித் திருத்தப்பட்டது. அதேவேளையில், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் தற்போது ஐ.அ.டொலர் 11.7 பில்லியனை அடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 9.2 பில்லியனுக்கு ஒடுங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**முன்னோக்கிய பயணம்**

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதகமான அபிவிருத்திகளை தடுத்து இந்த இடைவெளிகளை மீள ஏற்படுத்துவதன் தேவையினை மத்திய வங்கியும் அங்கீகரித்ததன் மூலம் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைத் தொடர்ந்து பேணியது. இதன்படி, மத்திய வங்கியானது வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை மேம்படுத்துவதற்காக மேலதிக வழிமுறைகளை ஏற்கனவே கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டது. செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகளில் சில தளர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் உள்நாட்டுச் சந்தையில் வளங்களின் கிடைப்பனவின் பற்றாக்குறைக்கு பிரதியீடாக பன்னாட்டுச் சந்தையினைப் பயன்படுத்துவதற்கு உள்ளூர் கம்பனிகள் ஊக்குவிக்கப்பட்டன. அத்துடன் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் மீதான வெளிநாட்டு முதலீடானது வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் இருப்பின் 10 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இதேவேளை, வர்த்தக வங்கிகள் வெளிநாட்டிலிருந்து ஐ.அ.டொலர் 1 பில்லியன் பெறுமதியான அடுக்கு-2 படுகடன் மூலதனத்தைத் திரட்ட அனுமதிக்கப்பட்டதன் மூலம் அவற்றின் மூலதனத் தளத்தை பலமாக்கின. மேலும், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு பங்கு முதலீட்டினை கவரும் நோக்குடன் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தினால் வீதியோர விளம்பரங்கள் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டதுடன் தொலைநோக்குடைய முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் முதலீட்டு வாய்ப்புக்கள் விளங்கப்படுத்தப்பட்டன. மத்திய வங்கியானது இந்த உட்பாய்ச்சல்கள் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு கிரமமான அடிப்படையில் இம்முன்னெடுப்புக்களைக் கண்காணிப்பதன் மூலம் சென்மதி நிலுவையானது 2012இல் ஓர் அதிகரித்த மிகையினை பதிவு செய்வதை இயலச் செய்யும்

இதேவேளை, இவ்வாண்டில் ஏனைய நிறுவனங்களின் ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சிகளும் தேவைப்படுகிறது. வெளிநாட்டு நேரடி முதலீட்டினை 2012இல் கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 2 பில்லியன் பெறுமதியளவில் கவருவதில் தாம் நம்பிக்கையுடன் இருப்பதாக முதலீட்டுச் சபையுடன் நடந்த கலந்துரையாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் இலங்கை மின் சபையும் பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதனூடாக வலுப் பாதுகாப்பினை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தியதுடன் இது 2012இல் பெற்றோலிய இறக்குமதிகளின் தேவையை கணிசமானளவில் குறைக்கும்.

இந்த வழிமுறைகள் கொடுகடனின் வளர்ச்சி, இறக்குமதிச் செலவு, வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை என்பவற்றை மிதமாக்குவதற்கு உதவும் அதேவேளை சென்மதி நிலுவையின் மிகையை மேம்படுத்துவதுடன் வெளிநாட்டு ஒதுக்குகள் அதிகரிப்பதற்கும் அதன் மூலம் வெளிநாட்டுத்துறை உறுதிப்பாட்டினை பலப்படுத்தும் அதேவேளை குறைவான பணவீக்கத்தின் மத்தியில் உயர் பொருளாதார வளர்ச்சியின் உறுதிப்பாட்டிற்கும் உதவும்.

பொருளாதார கொள்கை முகாமைத்துவத்தின் மையப் புள்ளியாக மாறி வருகிறது. உலகளாவிய பொருளாதாரத்தின் மீட்சி மிக பலயீனமாகக் காணப்படுகின்றமை மற்றும் இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிச் சந்தைகளில் காணப்படும் புவிசார் அரசியலின் நிச்சயமற்ற தன்மை என்பன ஏற்றுமதி வளர்ச்சியைப் பாதித்துவிடும் போல் தோன்றுகின்றது. ஏற்றுமதிக்கான கேள்வியை சந்தைகளையும் உற்பத்திகளையும் பன்முகப்படுத்துவதனூடாக மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை குறிப்பாக நீண்ட கால மூலதன உட்பாய்ச்சல்களைக் கவர்வதற்கான முயற்சிகள் வலுவாக்கப்படல் வேண்டும். பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட உயர்ந்த எண்ணெய் விலைகள் இலங்கை போன்ற எண்ணெயில் தங்கியிருக்கும் பொருளாதாரத்தின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்க முடியும். வலுச் சிக்கன உற்பத்தி தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல், புதுப்பிக்கத்தக்க வலு மூலவளங்களை அதிகரித்தல் மற்றும் வலுப் பாதுகாப்பு ஆகிய நடவடிக்கைகளின் மூலம் உயர்ந்த எண்ணெய் விலைகளின் தாக்கத்தினை தணிப்பதற்கு சரியான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் தேவை காணப்படுகின்றது. மேலும், உள்நாட்டு வலு விலைகளில் பாரிய சீராக்கங்களைச் செய்வதற்கான தேவையைத் தவிர்க்க உதவும் எனக் கருதப்படும் பன்னாட்டு வலு விலைகளின் அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற பொறிமுறையொன்று தேவையாகவுள்ள வேளையில் அது அரச தொழில்முயற்சிகள் மீதான சுமையினையும் குறைக்கின்றது. தொழிற்சந்தையில் தொழிலின்மையில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி தொழில் சந்தை நிலைமைகளை இறுக்கமாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் தொழிற்சந்தையில் காணப்படும் நெகிழ்ச்சியற்ற அமைப்பியல் தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கும் கொள்கைகள் அவசியமாகவுள்ள வேளையில் ஏதேனும் மனிதவலுப் பற்றாக்குறைகள் காணப்படுமிடத்து அதனைக் கையாள மூலதனச் செறிவினை அதிகரித்தல் வேண்டும். இவ்வளர்ச்சி உத்வேகத்தினைத் தக்க வைத்துக் கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகளுடன் மனித மூலதனத்தளத்தினை உருவாக்குகின்ற விதத்தில் இலங்கையின் கல்வி முறையினை மீண்டும் சீர்ப்படுத்துவதற்கு கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

## 1.2 2011இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புக்கள்

### உண்மைத் துறை அபிவிருத்திகள்

**இலங்கையின் பொருளாதாரம் 2010இன் 8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைத் தொடர்ந்து 2011இல் 8.3 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்கதொரு வீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** வேளாண்மைத் துறையில் பின்னடைவு காணப்பட்ட போதும் கைத்தொழில் மற்றும் பணிகள் துறையில் காணப்பட்ட வலுவான வளர்ச்சி, உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு பக்கபலமாகக் காணப்பட்டது. 2011இல் கைத்தொழில் மற்றும் பணிகள் துறை முறையே 10.3 சதவீதத்தினாலும் 8.6 சதவீதத்தினாலும் வளர்ச்சி கண்டன. கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கு தொழிற்சாலைக் கைத்தொழிலும் கட்டடவாக்க நடவடிக்கைகளும் தூண்டுதலளித்தன. 2011இல் கைத்தொழில் துறையில் காணப்பட்ட வளர்ச்சி, கூட்டப்பட்ட பெறுமதி நியதிகளில் கடந்த 33 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சிகளில் மிக உயர்வானதாகக் காணப்பட்டது.


**அட்டவணை 1.1** நிலையான விலைகளில் (2002) கைத்தொழில் மூலத்தின்படி மெத்தத் தேசிய உற்பத்தி

| துறை | பெறுமதி (ரூ. மில்லியன்) | | மொ.உ.உ. இன் பங்கு (%) | | மாற்றத்தின் வீதம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 (அ) | 2011 (ஆ) | 2010 (அ) | 2011 (ஆ) | 2010 (அ) | 2011 (ஆ) | 2010 (அ) | 2011 (ஆ) |
| **வேளாண்மை** | 315,610 | 320,346 | 11.9 | 11.2 | 7.0 | 1.5 | 10.4 | 2.2 |
| வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, காட்டுத்தொழில் | 283,203 | 282,916 | 10.7 | 9.9 | 6.4 | -0.1 | 8.7 | -0.1 |
| மீன்பிடித் தொழில் | 32,407 | 37,431 | 1.2 | 1.3 | 12.2 | 15.5 | 1.8 | 2.3 |
| **கைத்தொழில்** | 760,334 | 838,932 | 28.7 | 29.3 | 8.4 | 10.3 | 30.2 | 36.0 |
| சுரங்கமகழ்தல் கல்லுடைத்தலும் | 60,079 | 71,191 | 2.3 | 2.5 | 15.5 | 18.5 | 4.1 | 5.1 |
| தயாரிப்பு | 458,660 | 494,990 | 17.3 | 17.3 | 7.3 | 7.9 | 16.0 | 16.6 |
| மின்வலு, எரிவாயு மற்றும் நீர் | 63,682 | 69,547 | 2.4 | 2.4 | 8.0 | 9.2 | 2.4 | 2.7 |
| கட்டடவாக்கம் | 177,912 | 203,204 | 6.7 | 7.1 | 9.3 | 14.2 | 7.7 | 11.6 |
| **பணிகள்** | 1,569,598 | 1,704,576 | 59.3 | 59.5 | 8.0 | 8.6 | 59.4 | 61.8 |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 613,358 | 676,565 | 23.2 | 23.6 | 7.5 | 10.3 | 21.7 | 29.0 |
| சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் | 13,845 | 17,501 | 0.5 | 0.6 | 39.8 | 26.4 | 2.0 | 1.7 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் | 368,643 | 410,402 | 13.9 | 14.3 | 11.9 | 11.3 | 19.9 | 19.1 |
| வங்கியியல், காப்புறுதி, உண்மைச் சொத்து மற்றும் ஏனையவை | 234,255 | 252,677 | 8.9 | 8.8 | 7.5 | 7.9 | 8.4 | 8.4 |
| வதிவிட உரிமை | 74,692 | 75,607 | 2.8 | 2.6 | 0.9 | 1.2 | 0.3 | 0.4 |
| அரச பணிகள் | 202,187 | 204,704 | 7.6 | 7.1 | 5.4 | 1.2 | 5.3 | 1.2 |
| தனியார் பணிகள் | 62,617 | 67,119 | 2.4 | 2.3 | 5.8 | 7.2 | 1.8 | 2.1 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | 2,645,542 | 2,863,854 | 100.0 | 100.0 | 8.0 | 8.3 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -32,939 | -31,536 | | | -16.6 | 4.3 | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | 2,612,603 | 2,832,318 | | | 7.9 | 8.4 | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

**வரைபடம் 1.3 காலாண்டு வளர்ச்சி மற்றும் தொழிலின்மை**




இதன் விளைவாக, கைத்தொழில் துறை மொ.உ.உற்பத்தியில் அதன் பங்கை முன்னைய ஆண்டின் 28.7 சதவீதத்திலிருந்து 29.3 சதவீதத்திற்கு அதிகரித்துக் கொண்டது. அதேவேளை பணிகள் துறை, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் வங்கித்தொழில் காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துக்கள் ஆகிய துணைத் துறைகளின் குறிப்பிடத்தக்க பங்களிப்புடன் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணியது. வேளாண்மைத் துறை ஆண்டின் முதற் காலாண்டில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக ஏற்பட்ட பாரிய பயிர்ச்சேதங்களின் விளைவாக 1.5 சதவீதமான மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், வேளாண்மைத் துறை ஆண்டின் பின்னரைப் பகுதியில் குறிப்பிடத்தக்க மீட்சியைக் காட்டியது.

**பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளிலும் காணப்பட்ட மேம்பட்ட செயலாற்றம் 2011இல் உயர்ந்தமட்ட தொழில் வாய்ப்பை உருவாக்க உதவின.** இதன்படி, தொழிலின்மை வீதம் இதற்கு முன்னெப்பொழுதுமில்லாத மிகக் குறைந்த மட்டத்திற்கு 2010இன் 4.9 சதவீதத்திலிருந்து 2011இல் 4.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழிலற்றோரின் மொத்த எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 401,000 உடன் ஒப்பிடுகையில் 2011இல் 342,000 என மதிப்பிடப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சிக்கு பாரியளவில் பங்களித்த பணிகள் துறை 2011இலும் தொடர்ந்து கூடியளவு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. 15 - 19 வயது மற்றும் 20 - 29 வயதுத் தொகுதியிலுள்ள இளைஞர்களிடையேயான தொழிலின்மை 2010இன் முறையே 20.3 சதவீதம் மற்றும் 13.8 சதவீதத்திலிருந்து 2011இல் முறையே 15.4 சதவீதத்திற்கும் 12.4 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகக் காணப்பட்டது.

**உள்நாட்டு வேளாண்மை முன்னரைப் பகுதியில் காணப்பட்ட பின்னடைவிலிருந்து பின்னரைப் பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு மீட்சியடைந்த வேளையில் ஏற்றுமதி வேளாண்மை இவ்வாண்டுப் பகுதியில் கலப்பான செயலாற்றத்தினைப் பதிவு செய்தது.** ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் நிலவிய கடுமையான வெள்ளத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பெரும்போக நெல் உற்பத்தியும் ஏனைய களப்பயிர்களின் வெளியீடும் கணிசமான வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. ஆண்டின் பின்னரைப் பகுதியில் ஏற்பட்ட மீட்சிக்கு, வானிலை நிலைமைகளின் தூண்டுதலுடன் சிறுபோக நெற் செய்கையின் சாதகமான செயலாற்றமும் காய்கறிகள் மற்றும் உயர் நிலப் பயிர்களின் அதிகரித்த வெளியீடும் பெருமளவிற்கு காரணங்களாக அமைந்தன. வட மாகாணத்தில் மீட்சியடைந்த மீன்பிடி நடவடிக்கைகளினால் தூண்டப்பட்டு மீன் உற்பத்தி 15.6 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, உள்ளூர் பால் உற்பத்திகளைப் பெருக்குவதற்கான அரசாங்கத்தின் வலுவான கடப்பாட்டின் விளைவாக மொத்தப் பால் உற்பத்தி அதிகரித்தது. ஏற்றுமதி வேளாண்மையினைப் பொறுத்தவரை மோசமான வானிலை நிலைமைகளினால் தேயிலை உற்பத்தி சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தவேளையில், இறப்பர் உற்பத்தி கவர்ச்சிகரமான விலைகள் மற்றும் பாலெடுக்கும் நிலப்பரப்பு அதிகரித்தமை என்பனவற்றின் காரணமாக தொடர்ந்தும் அதிகரித்தது. 2010இல் குறிப்பிடத்தக்களவிற்கு பாதிக்கப்பட்ட தெங்குத் துணைத் துறை, சாதகமான வானிலை நிலைமைகளின் உதவியுடன் 2011இல் வலுவாக மீட்சியடைந்தது. 2011இல் கறுவா, கொக்கோ, ஏலக்காய், வெற்றிலை என்பனவற்றின் உற்பத்தி அதிகரித்த வேளையில் கறுவா மற்றும் கராம்பின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

**2011இல் நிலவிய சாதகமான விலைகளிலிருந்து வேளாண்மைத் துறை நன்மையடைந்தது.** தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களிலிருந்து தோன்றிய இயற்கை இறப்பருக்கான அதிகரித்த கேள்வியின் காரணமாக முதல் மூன்று காலாண்டுகளிலும் இறப்பரின் விலைகள் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த விலைகளை அடைந்தன. அதேவேளை, 2011இன் முதற்காலாண்டில் அதிகரித்த கொழும்பு தேயிலை ஏலங்களின் தேயிலை விலைகள், அதன் பின்னர் மத்திய கிழக்கிலுள்ள முக்கிய தேயிலை இறக்குமதி நாடுகளில் காணப்பட்ட புவிசார் அரசியல் பதற்றங்களின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. அரசாங்கத்தின் நெல் கொள்வனவுத் திட்டத்தின் உதவியுடன் நெல்லின் விலைகள் பெருமளவிற்கு உறுதியாகக் காணப்பட்டன. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக ஆண்டின் முதலரைப் பகுதியில் தெங்கின் விலைகள் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்ததுடன் அதன் பின்னர் குறிப்பாக 2010இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கின.

**வேளாண்மை உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக 2011இல் அரசாங்கத்தினால் கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** ஒரு சில பயிர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டிருந்த வளமாக்கி உதவுதொகை 2011 மேயிலிருந்து அனைத்துப் பயிர்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட்டது. தேயிலை மீள் பயிரிடல் மற்றும் புதிதாகப்

**அட்டவணை 1.2** **கூட்டுக் கேள்வியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும்**

| விடயம் | ரூ.பில்லியன் | | வளர்ச்சி % | | மொ.உ.உ. இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2010 (அ) | 2011 (ஆ) | 2010 (அ) | 2011 (ஆ) | 2010 (அ) | 2011 (ஆ) |
| 1. உள்நாட்டுக் கேள்வி | 6,069.7 | 7,494.9 | 17.9 | 23.5 | 108.3 | 114.6 |
| 1.1 நுகர்வு | 4,524.2 | 5,536.1 | 14.0 | 22.4 | 80.7 | 84.6 |
| தனியார் | 3,651.6 | 4,568.4 | 17.2 | 25.1 | 65.2 | 69.8 |
| அரசு | 872.6 | 967.7 | 2.5 | 10.9 | 15.6 | 14.8 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்) | 1,545.5 | 1,958.8 | 30.8 | 26.7 | 27.6 | 29.9 |
| தனியார் | 1,200.8 | 1,549.6 | 39.1 | 29.0 | 21.4 | 23.7 |
| அரசு | 344.7 | 409.2 | 8.4 | 18.7 | 6.2 | 6.3 |
| 2. தேறிய வெளிநாட்டுக் கேள்வி | -465.6 | -952.3 | -48.3 | -104.5 | -8.3 | -14.6 |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,254.0 | 1,508.6 | 21.6 | 20.3 | 22.4 | 23.1 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,719.6 | 2,460.8 | 27.8 | 43.1 | 30.7 | 37.6 |
| 3. மெத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1 + 2) | 5,604.1 | 6,542.7 | 15.9 | 16.7 | 100.0 | 100.0 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (3 - 1.1) | 1,079.9 | 1,006.6 | 24.5 | -6.8 | 19.3 | 15.4 |
| தனியார் | 1,199.7 | 1,078.4 | 14.5 | -10.1 | 21.4 | 16.5 |
| அரசு | -119.8 | -71.9 | 33.4 | 40.0 | -2.1 | -1.1 |
| 5. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -69.8 | -72.0 | -25.1 | -3.3 | -1.2 | -1.1 |
| 6. தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 413.9 | 513.2 | 23.0 | 24.0 | 7.4 | 7.8 |
| 7. தேசிய சேமிப்புக்கள் (4 + 5 + 6) | 1,424.0 | 1,447.7 | 24.0 | 1.7 | 25.4 | 22.1 |
| 8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி | | | | | | |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீடு (4 - 1.2) | -465.6 | -952.3 | | | -8.3 | -14.6 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7 - 1.2) | -121.5 | -511.1 | | | -2.2 | -7.8 |
| 9. அலுவல்சார் கொடைகளற்ற வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை (2 + 5 + 6) (இ) | -121.5 | -511.1 | | | -2.2 | -7.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளில் காணப்படும் வேறுபாடுகள் கணிப்பீட்டின் கால இடைவெளியினால் ஏற்பட்டதாகும்.


மூலங்கள்: தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

பயரிடலுக்கான உதவுதொகை அதிகரிக்கப்பட்ட வேளையில் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. “கப்புறுக புறவற” என்றழைக்கப்படும் நிகழ்ச்சித்திட்டமொன்று தெங்கு உற்பத்தியின் விளைச்சலை உயர்த்தும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் தெங்கு பயிர்ச்செய்கை நிலப்பரப்பை விரிவாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பாலின் குறைந்தபட்ச பண்ணை விலைகளை லீற்றருக்கு ரூ.50 இற்கு கணிசமானளவிற்கு உயர்த்தியமையானது உள்நாட்டுப் பால் உற்பத்தியை ஊக்குவித்தது. ஏனைய ஏற்றுமதிகள் தொடர்பாகவும் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் மீள்பயிரிடல் மற்றும் புதிதாகப் பயிரிடலை அதிகரிக்கின்ற அதேவேளையில் ஏற்கனவேயுள்ள பயிர்ச்செய்கைகளின் விளைச்சலை மேம்படுத்துவதற்காகவும் அநேக வழிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

**சவால் நிறைந்த பன்னாட்டுச் சூழலுக்கு தாக்குப்பிடிக்கக் கூடியதாக இருந்த கைத்தொழில் துறை 2011இல் 10.3 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** கைத்தொழில் துறையின் வளர்ச்சி தொழிற்சாலைக் கைத்தொழிலினாலும் கட்டுமான நடவடிக்கைகளினாலும் பெருமளவிற்கு உத்வேகமடைந்தது. தாழ்ந்த பணவீக்கம் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் வட்டி வீதங்கள் என்பனவற்றிலிருந்து முக்கியமாகத் தோன்றிய வலுவான கூட்டுக் கேள்வி நிலைமைகள் கைத்தொழில் உற்பத்திகளுக்கான கேள்வியின் வளர்ச்சியைத் தூண்டிய வேளையில் உலகளாவிய பொருளாதாரத்தில் மந்தமான வளர்ச்சி காணப்பட்ட போதும் கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரித்த போட்டித்தன்மை ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழிவகுத்தது. மேம்பட்ட உற்பத்தியாக்கம், உயர்ந்த தரம், பசுமைத் தயாரிப்பில் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் முக்கிய நுகர்வோருடன் வலுவான உபாயம் மிக்க பங்குடமைகளை வலுப்படுத்துதல் என்பன ஏற்றுமதி சந்தை சார்ந்த கைத்தொழில்கள் அவற்றின் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேண உதவின. பெறுமதிகூட்டல்களை அதிகரித்தல், ஏற்றுமதி சார்ந்த தன்மை, இறக்குமதிப் பதிலீடு மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி என்பனவற்றை இலக்காகக் கொண்டு அரசாங்கம் இறைக் கொள்கை வழிமுறைகளூடாகவும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களூடாகவும் கைத்தொழில் அதிபர்களுக்கு அதன் ஆதரவினை வழங்கியது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு இறை ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்ட வேளையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களை ஊக்குவிப்பதனை நோக்காகக் கொண்ட கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொண்டன.

**கட்டடவாக்கத் துறை 2010இன் 9.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2011இல் 14.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீதத்தில் வளர்ச்சியடைந்து அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

**வரைபடம் 1.4 சேமிப்பும் முதலீடும் (மொ.உ.உ. இன் சதவீதமாக)**





நடவடிக்கைகளையும் தனியார் துறையின் அதிகரித்த கட்டுமான நடவடிக்கைகளையும் பிரதிபலித்தது.** அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கியமான உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் துறைமுகம் மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தி, வீதி நிருமாணம் மற்றும் வலு உருவாக்கச் செயற்றிட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. தற்போது நிலவுகின்ற தாழ்ந்த வட்டி வீத சூழலில் வங்கிகளினாலும் மற்றைய நிதியியல் நிறுவனங்களினாலும் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் உதவியுடன் வர்த்தக மற்றும் வதிவிட கட்டடங்கள் இரண்டினதும் கட்டுமானங்கள் காரணமாக தனியார் துறை நடவடிக்கைகள் அதிகரித்தன.

**ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் 61.8 சதவீதத்திற்கு பங்களித்த தனியார் துறை 2011இல் 8.6 சதவீதத்தில் விரிவடைந்தது.** இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் துறைகளின் மேம்பட்ட செயலாற்றம் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தில் காணப்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக மொத்த விற்பனை மற்றும் சில்லறைத் துணைத் துறை வரவேற்கத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துறை மூன்று முக்கிய துணைத் துறைகளான போக்குவரத்து, கப்பற் சரக்கு கையாளல், துறைமுகம் மற்றும் வான் போக்குவரத்து, அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் ஆகிய அனைத்து மூன்று துறைகளிலும் காணப்பட்ட மேம்பட்ட செயலாற்றத்துடன் போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துறை வளர்ச்சி கண்டது. வளர்ச்சியடைந்து வரும் பொருளாதார நடவடிக்கையின் விளைவாக நிதியியல் பணிகளுக்கான அதிகரித்த கேள்வியை பிரதிபலிக்கும் விதத்தில் வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா துறைகள் அதேபோன்று காப்புறுதி துறையின் அதிகரித்த வருமானங்களின் காரணமாக வங்கித்தொழில் காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத் துறைகள் விரிவடைந்தன.

**மொத்த நுகர்வுச் செலவினம் 22.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் சுருக்கமடைந்தமையானது 2011இல் சேமிப்பு முதலீட்டு இடைவெளியினை விரிவாக்கியது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தனியார் நுகர்வு 2010இன் 65.2 சதவீதத்திலிருந்து 2011இல் 69.8 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் அரசாங்க நுகர்வுச் செலவினம் 15.6 சதவீதத்திலிருந்து 14.8 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் முறையே 19.3 சதவீதத்திலிருந்து 15.4 சதவீதத்திற்கும் 25.4 சதவீதத்திலிருந்து 22.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தனியார் முதலீடுகள் 2010இன் 21.4 சதவீதத்திலிருந்து 2011இல் 23.7 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் அரச முதலீடுகள் 2010இன் 6.2 சதவீதத்திலிருந்து 6.3 சதவீதத்திற்கு அதிகரித்தன. இவ்வபிவிருத்திகளின் காரணமாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடுகள் 2010இன் 27.6 சதவீதத்திலிருந்து 2011இல் 29.9 சதவீதத்திற்கு அதிகரித்தன. இதன்படி, தேசிய சேமிப்பிற்கும் முதலீட்டிற்குமிடையிலான இடைவெளி 2010இன் மொ.உ.உற்பத்தியின் -2.2 சதவீதத்திலிருந்து 2011இல் மொ.உ.உற்பத்தியின் -7.8 சதவீதத்திற்கு விரிவடைந்து சென்மதி நிலுவையின் உயர்ந்த பற்றாக்குறையினைப் பிரதிபலித்தது.

**நுகர்வோர் விலைப் பணவீக்கம் இவ்வாண்டுப் பகுதியில் ஒற்றை இலக்க மட்டத்தில் பேணப்பட்டது.** கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு, ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (கொ.நு.வி.சு 2006/2007 = 100) 2010 திசெம்பரின் 6.8 சதவீதத்திலிருந்து 2011 திசெம்பரில் 4.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், பணவீக்கத்தின் ஆண்டுச் சராசரி வீதம் 2010இன் 6.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 6.7 சதவீதமாகக் காணப்பட்டது. தொடர்ந்து மூன்றாண்டுகளாக பணவீக்கம் ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்படுவது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டில் உள்நாட்டு உணவு நிரம்பல் கணிசமாக அதிகரித்தமையினைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. பணவீக்க அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுவதனை தடுக்கும் விதத்தில் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கையினை மிகக் கவனமாக முகாமைப்படுத்திய வேளையில் சில நுகர்வுப் பொருட்களின் மீதான தீர்வைகள் கீழ் நோக்கித் திருத்தப்பட்டமையின் மூலமாக இறைக் கொள்கைகளும் பணவீக்கத்தினை ஒற்றை இலக்க மட்டத்தில் பேண உதவின.

**வரைபடம் 1.5 ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் (கொ.நு.வி.சு. அடிப்படையில்: 2006/07=100)**



**சிறப்புக்குறிப்பு 3**

## சேமிப்புக்கள்/ முதலீட்டு இடைவெளி

பொருளாதாரமொன்றில் கூட்டுக் கேள்வி (Y) அரச மற்றும் தனியார் நுகர்வு (C), முதலீடு (I) மற்றும் பொருட்கள் மற்றும் பணிகளின் தேறிய ஏற்றுமதியை (NX) உள்ளடக்குகிறது. இது பின்வருமாறு விளக்கப்படலாம்:

$$Y=C+I+NX$$

இத்துடன், பங்கு இலாபம் மற்றும் வட்டி வருமானம் ($Y_f$) போன்ற வெளிநாட்டிலிருந்தான தேறிய வருமானம் மற்றும் பணவனுப்பல்கள் போன்ற தேறிய மாற்றல்கள் ($Y_{tr}$) கூட்டப்படும் போது மொத்த தேசிய செலவழிக்கத்தக்க வருமானம் பின்வருமாறு காட்டப்படுகிறது:

$$GNDI = C+I+NX+Y_f+Y_{tr}$$

இச்சமன்பாட்டில் NX+Yf+Ytr என்பது சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவையைப் பிரதிபலிக்கிறது. எனவே,

$$GNDI = C+I+CAB$$

மீள்ஒழுங்குபடுத்தும் போது

$$GNDI - C=I+CAB$$

$$\Rightarrow S=1+CAB$$

$$\Rightarrow S-1=CAB$$

இது, சேமிப்புக்களின் மட்டத்தைப் பாதிக்கின்ற தனியார் மற்றும் அரச நுகர்வை உள்ளடக்கும் நுகர்வின் மட்டத்தைத் தெளிவாக விளக்குகின்றது. தாழ்ந்த மட்டத்திலான நுகர்வு சேமிப்பின் உயர் மட்டங்களுக்கு உதவுவதால் இது உயர் மட்டத்திலான முதலீட்டை ஏற்படுத்துகிறது. தேசிய சேமிப்புகள் (உள்நாட்டுச் சேமிப்புகள் + வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம்) நாட்டின் மொத்த முதலீட்டுத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லாவிடின் இது சென்மதி நிலுவைகளில் நாட்டின் நடைமுறைக் கணக்கின் அதே அளவிலான வெளிநாட்டு சேமிப்புக்களூடாக பூர்த்தி செய்யப்படும்.

இலங்கையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த நுகர்வு அண்மைய ஆண்டுகளில் சராசரியாக 82 சதவீத அளவில் காணப்பட்டது. இதன்படி, மொஉஉற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புகள் 18 சதவீதமளவில் காணப்பட்டன. எனினும், 2011 இற்கான தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தேசிய கணக்குகளின் தரவுப்படி மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தனியார் நுகர்வு 65.2 சதவீதத்திலிருந்து 69.8 சதவீதத்திற்கு அதிகரித்தமையினதும் அரச நுகர்வு 15.6 சதவீதத்திலிருந்து 14.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையினதும் இணைந்த வெளிப்பாடு காரணமாக இலங்கையின் உள்நாட்டு நுகர்வு 2010இன் 80.7 சதவீதத்திலிருந்து 2011இல் 84.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதன் விளைவாக, உள்நாட்டுச் சேமிப்புகள் 2010இன் 19.3 சதவீதத்திலிருந்து 2011இல் 15.4 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

2011இல், நுகர்வுக் கேள்வியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு 2011இல் நிலவிய குறைந்த வட்டி வீதங்களால் ஏற்பட்டு நுகர்வு நோக்கங்களுக்காக சார்பு ரீதியில் மலிந்த வீதங்களில் மக்கள் கடன் பெறுவதை இயலச் செய்ததுடன் உந்து ஊர்திகள் மின் மற்றும் இலத்திரனியற் கருவிகள் போன்ற நீண்ட கால நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வையில் மேற்கொள்ளப்பட்ட கணிசமான குறைப்பு அத்தகைய நீண்ட கால நுகர்வுப் பொருட்களின் கூடுதலான கேள்விக்கு மக்களை ஊக்கப்படுத்தியது. இது நிதியியல் நிறுவனங்களிலிருந்தான கடன் பெறுகைகளில் கூர்மையான அதிகரிப்பையும் 2011இல் நீண்ட கால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளில் முன்னெப்போதுமில்லாத அதிகரிப்பையும் பிரதிபலித்தது. உதாரணமாக 2011இல் தனிப்பட்ட பாவனைக்குரிய உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 881 மில்லியனுக்கு 94 சதவீதத்தால் அதிகரித்தன. குறிப்பாக, கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து அடக்கி வைக்கப்பட்டிருந்த கேள்வியைக் கொண்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியும் அதிகரித்த உள்நாட்டு நுகர்வுக்குப் பங்களித்திருக்கலாம். இதேவேளை, அரச நுகர்வில் ஏற்பட்ட வீழ்ச்சி அரசின் மூலதனச் செலவினத்துக்காக கூடிய மூலவளங்களை விட்டுக்கொடுக்கும் மீண்டெழும் செலவினத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளால் ஏற்பட்டதாகும்.

2011இல் நாட்டின் மொத்த முதலீடுகள், மொ.உ.உற்பத்தியின் 22.1 சதவீதமான தேசிய சேமிப்புகளோடு (உள்நாட்டுச் சேமிப்புகள் + வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் + தேறிய தனியார் நடைமுறைமாற்றல்கள்) ஒப்பிடுகையில் 29.9 சதவீதமாக இருந்தமையால் சேமிப்பு - முதலீடு இடைவெளி வெளிநாட்டுச் சேமிப்புக்களூடாக பூர்த்தி செய்யப்பட்டதுடன் மொ.உ.உற்பத்தியின் 7.8 சதவீதத்திற்கு விரிவடைந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் பிரதிபலித்தது. 2012இன் முதலாம் காலாண்டில், மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளுக்கான கேள்வியை ஊக்கமிழக்கச் செய்யும் உயர் கொடுகடன் கேள்வியைக் குறைப்பதற்கு பல வழிமுறைகளை எடுத்தன. 2011 உடன் ஒப்பிடுகையில் சந்தை வட்டி வீதங்களும் மேல் நோக்கி நகர்ந்து மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளையும் வங்கித்தொழில் முறைமையில் ரூபாவின் திரவத்தன்மையில் வீழ்ச்சியையும் பிரதிபலிக்கிறது. இவற்றுடன், உள்நாட்டுச் சேமிப்புகளை அதிகரிப்பதற்கு உதவுவதற்கான உள்நாட்டு நுகர்வு மெதுவடைந்து எதிர்பார்க்கப்பட்ட உயர் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான முதலீட்டை வசதிப்படுத்துகிறது. இதுவும் நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பில் எறிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைக்கும் (அட்டவணை 1.5).

## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

**சாதகமற்ற உலகளாவிய நிகழ்வுகள் மற்றும் உள்நாட்டு ரீதியாக இறக்குமதிக்கான கேள்வியில் ஏற்பட்ட விரைந்த வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக 2011இல் வெளிநாட்டுத் துறை உயர்ந்தளவு சவால்களை எதிர்நோக்கியது.** உலகளாவிய ரீதியில், யூரோ பிராந்தியத்தில் காணப்பட்ட தீவிரமடைந்த நாட்டிற்கான படுகடன் நெருக்கடி, உலகப் பொருளாதாரத்தில் காணப்படும் மந்தமான மீட்சி, மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் எண்ணெய் உற்பத்தி செய்யும் சில நாடுகளில் காணப்படும் நிச்சயமற்ற புவிசார் அரசியல் தன்மை என்பன எண்ணெய் விலைகளின் மீதும் நிதியியல் உட்பாய்ச்சல்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்தின. உள்நாட்டில், கூட்டுக் கேள்வியில் ஏற்பட்ட விரிவாக்கம் இறக்குமதியின் விரைவான


வளர்ச்சிக்கு வழிவகுத்ததுடன் அதன் விளைவாக ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் வர்த்தகப் பற்றாக்குறை கணிசமாக விரிவடையச் செய்தது. மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல் வலுவானதாகக் காணப்பட்ட போதும் அத்தகைய உட்பாய்ச்சல்கள் உயர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை எதிரீடு செய்யப் போதுமானதாகக் காணப்படவில்லை. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உட்பட தனியார் நீண்ட கால முதலீடுகளின் உட்பாய்ச்சல்களும் அரசிற்கான உட்பாய்ச்சல்களும் ஆரோக்கியமானவைகளாக விளங்கின. எனினும், உயர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை திரண்ட சென்மதி நிலுவையில் 2011 இறுதியளவில் ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் கொண்ட பற்றாக்குறையைப் பதிவு செய்தது.

**ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 22.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இறக்குமதிகள் மீதான செலவினம் 2010இல் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2011இல் 50.7 சதவீதம் கொண்ட விரைந்த வேகத்தில் அதிகரித்தது.** சமூக அரசியல் நிச்சயமற்ற தன்மைகளை எதிர்நோக்குகின்ற ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், வட ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு போன்ற இலங்கையின் பாரம்பரிய சந்தைகளில் காணப்பட்ட உடைந்து விடக்கூடிய உலகளாவிய பொருளாதார மீட்சிக்கிடையிலும் பொருளாதாரம் விரிவடைந்தமையானது இலங்கை ஏற்றுமதிகளின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைப் பிரதிபலித்தது. கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகள் 31.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, 2011இன் மொத்த ஏற்றுமதிகளில் 75.7 சதவீதத்திற்கு வகைகூறியது. புடவைகளும் ஆடைகளும் மிக முக்கியமான கைத்தொழில் ஏற்றுமதிகளாக தொடர்ந்தும் விளங்கியதுடன் அதற்கடுத்ததாக இறப்பர் உற்பத்திகளும் பெற்றோலிய உற்பத்திகளும் விளங்கின இறக்குமதியில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பிற்கு இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளான நுகர்வோர், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான உயர்ந்த கேள்வியும் அதேபோன்று அதிகரித்த பன்னாட்டு பண்ட விலைகளும் காரணங்களாக அமைந்தன. இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 2011இன் மொத்த இறக்குமதிகளில் 60.6 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் இதற்கு பன்னாட்டு எண்ணெய் விலைகள் மற்றும் இறக்குமதிகளின் அளவு இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாக பெற்றோலிய இறக்குமதிகள் மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினம் தூண்டுதலாக அமைந்தது. மொத்த இறக்குமதிகளில் 21.2 சதவீதத்திற்கு வகைகூறிய முதலீட்டுப் பொருட்கள் 2011இல் 55.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அநேக உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் விரைந்து நடைமுறைக்கிடப்பட்டமையே முக்கிய காரணமாகும். அதிகரித்த உண்மை வருமானங்கள், உந்து ஊர்திகள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட இலத்திரனியல் பொருட்களுக்கு ஏற்புடைத்தான காத்திரமான வரி வீதங்கள் குறைக்கப்பட்டமை என்பனவற்றுடன் சேர்ந்து ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டி வீதங்களில் கொடுகடன் வசதிகள் கிடைத்தமை என்பன 2011இல் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 47.5 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பங்களித்தன. ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு, வர்த்தகப் பற்றாக்குறை 2010இன் ஐ.அ.டொலர் 4.8 பில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 9.7 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் விரிவடைய வழிவகுத்தது.

**பணிகள் கணக்கின் மிகை 2011இல் கணிசமாக அதிகரித்தது.** பணிகள் கணக்கின் அனைத்து துணைத் துறைகளும் முக்கியமாக போக்குவரத்து, கணனி மற்றும் தகவல், பயணம், கட்டடவாக்கம், காப்புறுதி என்பன 2011இல் மிகச் சிறப்பாகச் செயலாற்றின. சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 830 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து 44.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அதேவேளை, வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2010இன் ஐ.அ.டொலர் 617 மில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 647 மில்லியனுக்கு விரிவடைந்தமையானது அரசின் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமை மற்றும் அலுவல்சார் ஒதுக்குகளின் முதலீட்டிலிருந்தான வட்டி வருமானத்தின் மீதான பெறுகைகளையும் வெளிநாட்டு நாணயம் மற்றும் பிணையங்களின் வர்த்தப்படுத்தல் மீது உழைக்கப்பட்ட இலாபங்களையும் விஞ்சிக் காணப்பட்ட இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் தாய் நாட்டிற்கு அனுப்பப்பட்டமையின் முக்கிய காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பேரில் ஏற்பட்ட வெளிப்பாய்ச்சல் என்பனவற்றின் பெறுபேறாகும்.

**தனியார் மாற்றல்களில் பெரும் பங்கினைக் கொண்டிருக்கும் தொழிலாளர் பணவனுப்பல்கள், 2011 இலும் மிகப் பெரும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளராக விளங்கி, தொடர்ந்து மூன்றாவதாண்டாக புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களை விஞ்சிக் காணப்பட்டது.** மொத்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2010இன் ஐ.அ.டொலர் 4.1 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 5.1 பில்லியனுக்கு 25 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவிய நிச்சமற்ற தன்மைகளின் காரணமாக புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தமது சேமிப்புக்களை நாட்டிற்குள் அனுப்பியமை, தொழிலாளர்களின் சராசரிக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, கொரியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற உயர் கூலிகளை வழங்கும் நாடுகளுக்கு புலம்பெயர்வில் ஏற்பட்ட அதிகரிப்பு, தொழில்சார் நிபுணத்துவ வகைகளிலுள்ள வேலையாட்கள் அதிகளவில் புலம்பெயர்ந்தமை அதேபோன்று பல்வேறு நாடுகளுடனும் தொழிலாளர் புலம்பெயர்வு தொடர்பாக கூட்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டமை என்பன தொழிலாளர் பணவனுப்பல்களின் வளர்ச்சிக்குப் பங்களித்தன. மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வங்கித்தொழில் வசதிகள் விரிவடைந்தமையின் காரணமாக முறை சார்ந்த வழிப்படுத்தல்களினூடாக இலங்கைக்கு நிதிகளை அனுப்பும்

**வரைபடம் 1.6 சென்மதி நிலுவை**




தன்மை விரிவடைந்தமையும் 2011இல் தொழிலாளர் பணவனுப்பல்கள் அதிகரிப்பதற்கு பங்களித்தன.

**நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2010இன் ஐ.அ.டொலர் 1.1 பில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 4.6 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.** மொ.உ.உற்பத்தி நியதிகளில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2010இன் மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதத்திலிருந்து 2011இல் மொ.உ.உற்பத்தியின் 7.8 சதவீதத்திற்கு அதிகரித்து, சேமிப்பு முதலீட்டு இடைவெளி விரிவடைந்தமையினைப் பிரதிபலித்தது. பாரிய நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையின் முக்கிய பிரதிபலிப்பாக இருந்ததுடன் இதில் ஏறத்தாழ மூன்றிலிரண்டு பங்கு தொழிலாளர் பணவனுப்பல்களில் உயர்ந்த உட்பாய்ச்சலினாலும் பணிகள் கணக்கின் மிகையினாலும் எதிரீடு செய்யப்பட்டது.

**தனியார் துறைக்கும் அதேபோன்று அரச துறைக்குமான உட்பாய்ச்சல்களின் காரணமாக மூலதன மற்றும் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல் அதிகரித்தது.** சாதகமான முதலீட்டாளர் நம்பிக்கையினைப் பிரதிபலிக்கும் விதத்தில், 2011இல் இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீட்டு மொத்த உட்பாய்ச்சலில் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது. கடன்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2010இன் ஐ.அ.டொலர் 516 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011இல் ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் கொண்ட சாதனை மட்டத்தினைப் பதிவு செய்தது. முக்கிய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்காக அரசிற்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. அத்துடன், 2011இல் இலங்கையின் நாட்டிற்கான நான்காவது ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட முறி வெற்றிகரமாக வழங்கப்பட்டது. 2011இல் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் பேரிலான அரசாங்கத்திற்கான குறுங்கால வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2011இல் ஒவ்வொரு சாதனத்தின் மீதுமான வெளிநின்ற தொகையான 10 சதவீதத்தினை அடைந்துவிட்டமையின் காரணமாக அவற்றிற்கான அதிகரித்த கேள்வியைப் பரிசீலனையில் கொண்டு நிதியின் கிடைப்பனவினை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிக்கும் விதத்தில் உச்ச எல்லை 2011 திசெம்பரில் 12.5 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. அதேவேளை, வெளிநாட்டு மூலங்களிலிருந்து கம்பனிகள் கடன் பெறுவதனை இயலச் செய்யும் விதத்தில் மத்திய வங்கியினால் செலாவணிக் கட்டுப்பாட்டு விதிகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டமையும் தனியார் துறைக்கான உட்பாய்ச்சல் அதிகரிக்க உதவியாக அமைந்தது.

**மூலதன மற்றும் நிதியியல் கணக்கின் மிகையினை விஞ்சிய உயர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2011 இறுதியில் சென்மதி நிலுவையில் ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் கொண்ட பற்றாக்குறையினைத் தோற்றுவித்தது.** பணிகள் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள், தொழிலாளர் பணவனுப்பல் மற்றும் அரசிற்கும் தனியார் துறைக்குமான ஏனைய நிதியியல் உட்பாய்ச்சல்களின் உதவியுடன் 2011 ஓகத்தில் சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் கொண்ட ஆரோக்கியமான மிகையினை பதிவு செய்தது. இறக்குமதிச் செலவினத்தில், முக்கியமாக எண்ணெய் இறக்குமதி மற்றும் முதலீட்டுப் பொருட்களில் இறக்குமதியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு 2011இன் பின்னரைப் பகுதியில் வர்த்தக பற்றாக்குறையினைக் கணிசமாக விரிவடையச் செய்து சென்மதி நிலுவையின் திரண்ட மிகையை 2011 இறுதியில் பற்றாக்குறைக்கு மாறிவிட்டது.

**மத்திய வங்கியினதும் அரசாங்கத்தினதும் பன்னாட்டு ஒதுக்குகளை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (ஆ.தீ ஒன்றிய நிலுவைகள் நீங்கலாக) 2010இல் ஐ.அ.டொலர் 6,610 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2011 இறுதியில் ஐ.அ.டொலர் 5,958 மில்லியன்களாகக் காணப்பட்டன.** ஆண்டின் இறுதியில் ஒதுக்கு நிலைமை, 2010இல் பதிவு செய்யப்பட்ட 5.9 மாத இறக்குமதிகளுக்குப் போதுமான அளவுடன் ஒப்பிடுகையில் 3.5 மாத இறக்குமதிகளுக்கே போதுமானதாக இருந்தது. வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலை ஈர்த்துக் கொள்வதற்காக மத்திய வங்கி உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டமை, மத்திய வங்கியின் நாட்டிற்கான முறிகளின் கொள்வனவுப் பெறுகைகள் மற்றும் ப.நா.நிதியத்தின் துணைநில் ஒழுங்குகளின் கீழ் கிடைத்த பெறுகைகள் என்பன ஒன்று சேர்ந்து 2011 ஓகத்து நடுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை ஐ.அ.டொலர் 8.2 பில்லியன் கொண்ட வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டத்திற்கு உயர்வடையச் செய்தன. எனினும், 2011இன் பின்னரைப் பகுதியில் விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையானது, தொழிலாளர் பணவனுப்பல்கள், சுற்றுலா என்பனவற்றின் பேரிலான அதிகரித்த பெறுகைகளும் மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்களும் காணப்பட்டமைக்கிடையிலும் அதிகரித்த கேள்வியின் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குவதற்கு மத்திய வங்கியை தேவைப்படுத்தியது. அதேவேளை, நாட்டிற்குள் கூடுதலான வெளிநாட்டு

உட்பாய்ச்சல்களைக் கவர்வதற்கு மத்திய வங்கியினால் பல்வேறு வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளைத் தளர்த்தியதன் மூலம் உள்ளூர் தொழில்முயற்சிகள் பன்னாட்டு நிதியியல் சந்தைகளிலிருந்து நேரடியாகக் கடன் பெறுவதற்கு ஊக்குவிக்கப்பட்ட வேளையில் அடுக்கு 2 மூலதனத்திற்காக வெளிநாட்டு நிதிகளைத் திரட்ட அனுமதிக்கப்பட்டன. மேலும், திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் மீதான முதலீடுகளின் எல்லையை உயர்த்தியதன் மூலம் அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் ஊக்குவிக்கப்பட்டன.

**நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2010இன் 43.3 சதவீதத்திலிருந்து 2011இல் மொ.உ.உற்பத்தியின் 41.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** ஐ.அ.டொலர் நியதிகளில், மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2010இன் ஐ.அ.டொலர் 21.4 பில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 24.5 பில்லியனுக்கு 14.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2011 யூலையில் இடம்பெற்ற ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் உட்பட அரசிற்கான உயர்ந்த மட்ட பகிர்ந்தளிப்புக்கள் அரசின் படுகடன் இருப்பில் 2011இல் 15 சதவீத அதிகரிப்பினைத் தோற்றுவித்தன. அதேவேளை, மொத்த அரச வெளிநாட்டுப் படுகடனின் சதவீதமாக சலுகை ரீதியான படுகடன்கள் 2010 இறுதியில் காணப்பட்ட 71 சதவீதத்திலிருந்து 2011 இறுதியில் 63 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. குறுங்காலப் படுகடன் ஐ.அ.டொலர் 2.62 பில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 2.58 பில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வெளிநின்ற இருப்பில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு மத்தியிலும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான வர்த்தகக் கொடுகடன்களின் வெளிநின்ற பெறுமதி குறைவடைந்தமையே காரணமாகும். அதேவேளை, மொத்தப் படுகடன் மற்றும் பொறுப்புக்களுக்கான குறுங்காலப் படுகடனின் விகிதமும் 2011 இறுதியில் 9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கடன் தீர்ப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் பெயரளவு நியதிகளில் 2010இன் ஐ.அ.டொலர் 1.8 பில்லியனிலிருந்து 2011இல் ஐ.அ.டொலர் 1.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. மேலும், பொருட்களின் ஏற்றுமதி மற்றும் பணிகளின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2010இன் 15.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 12.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**2011இல் செலாவணி வீதக் கொள்கை, செலாவணி வீதத்தில் நியாயமற்ற தளம்பல்களை தடுப்பதிலும் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அழுத்தங்களைக் குறைப்பதிலும் தொடர்ந்தும் கவனம் செலுத்தியது.**

**அட்டவணை 1.3 வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்**

| விடயம் | ஐ.அ.டொ.மில்லியன் 2010 (அ) | 2011 (ஆ) | மாற்று விகிதம் (%) |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **8,626** | **10,559** | **22.4** |
| வேளாண்மை உற்பத்திகள் | 2,306 | 2,528 | 9.6 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 6,096 | 7,992 | 31.1 |
| கனிப்பொருள் உற்பத்திகள் | 24 | 33 | 35.7 |
| ஏனைய ஏற்றுமதிகள் | 199 | 7 | -96.7 |
| **இறக்குமதிகள்** | **13,451** | **20,269** | **50.7** |
| நுகர்வுப் பொருட்கள் | 2,476 | 3,654 | 47.5 |
| இடைநிலைப் பொருட்கள் | 8,054 | 12,275 | 52.4 |
| முதலீட்டு பொருட்கள் | 2,758 | 4,286 | 55.4 |
| ஏனையவை | 162 | 54 | -66.8 |
| ***வர்த்தக நிலுவை*** | **-4,825** | **-9,710** | **101.2** |
| **பணிகள் (தேறிய)** | **707** | **1,099** | **55.4** |
| பெறுகைகள் | 2,474 | 3,084 | 24.7 |
| கொடுப்பனவுகள் | 1,768 | 1,985 | 12.3 |
| **வருமானம் (தேறிய)** | **-617** | **-647** | **4.9** |
| பெறுகைகள் | 323 | 467 | 44.6 |
| கொடுப்பனவுகள் | 940 | 1,114 | 18.5 |
| **நடைமுறை மாற்றல்கள் (தேறிய)** | **3,660** | **4,643** | **26.9** |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 3,608 | 4,583 | 27.0 |
| பெறுகைகள் | 4,116 | 5,145 | 25.0 |
| கொடுப்பனவுகள் | 508 | 562 | 10.6 |
| உத்தியோகப்பூர்வ மாற்றல்கள், (தேறிய) | 52 | 60 | 15.4 |
| ***நடைமுறைக் கணக்கு*** | **-1,075** | **-4,615** | **329.3** |
| ***மூலதனக் கணக்கு*** | **164** | **164** | **0.0** |
| ***நிதியியல் கணக்கு*** | **2,713** | **4,097** | **51.0** |
| நேரடி முதலீடு (தேறிய) | 435 | 896 | 106.0 |
| உட்பாய்ச்சல்கள் | 478 | 956 | 100.0 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 43 | 60 | 39.5 |
| தனியார், நீண்ட காலம் (தேறிய) | 149 | 153 | 2.7 |
| உட்பாய்ச்சல்கள | 580 | 364 | -37.2 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 431 | 211 | -51.0 |
| அரசு, நீண்ட காலம் (தேறிய) | 1,796 | 2,244 | 24.9 |
| உட்பாய்ச்சல்கள | 2,460 | 3,029 | 23.1 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 665 | 785 | 18.0 |
| தனியார், குறுங்காலம் (தேறிய) | -198 | 572 | -388.8 |
| இதில்: பட்டியலிடப்பட்ட முதலீடு (தேறிய)நவெ (நெவ) | -230 | -171 | -25.7 |
| அரசு, குறுங்காலம் (தேறிய) | 531 | 233 | -56.1 |
| தவறுகளும் விடுபாடுகளும் | -881 | -707 | |
| ***திரண்ட நிலுவை*** | **921** | **-1,061** | |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (இ) | 6,610 | 5,958 | |
| இறக்குமதி மாதங்கள் | 5.9 | 3.5 | |
| மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் (இ) | 8,035 | 7,199 | |
| இறக்குமதி மாதங்கள் | 7.2 | 4.3 | |
| ஏற்றுமதி விலைச் சுட்டெண் | 100.0 | 110.9 | 10.9 |
| இறக்குமதி விலைச் சுட்டெண் | 100.0 | 122.4 | 22.4 |
| வர்த்தகத்தின் போக்கு | 100.0 | 90.7 | -9.3 |
| **செலாவணி வீதங்கள் (சராசரி)** | | | உயர்வு(+)/தேய்வு(-) |
| ரூ./ஐ.வெ.டொலர் | 113.06 | 110.57 | 2.3 |
| ரூ./யென் | 1.29 | 1.39 | -7.2 |
| ரூ./யூரோ | 150.10 | 153.86 | -2.4 |
| ரூ./ஸ்ரேலிங் பவுண் | 174.81 | 177.23 | -1.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ஆ.தி.ஓ. - ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

செலாவணி வீதத்தில் தளம்பல்களைத் தடுக்கும் பொருட்டும் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் போதுமான திரவத்தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டும், இவ்வாண்டுப் பகுதியில், மத்திய வங்கி உள்நாட்டின் செலாவணிச் சந்தையின் இரண்டு பக்கங்களிலும் தலையிட்டது. பணவனுப்பல்கள்,

சுற்றுலா என்பனவற்றின் பேரிலான பெறுகைகள் மற்றும் மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் துணையுடன் முன்னரைப் பகுதியில் ரூபா, ஐ.அ.டொலருக்கெதிராக 1.23 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் 2011இன் மூன்றாம் காலாண்டில் 0.54 சதவீதத்தினால் தேய்வடைந்தமைக்கு பெற்றோலியத்தின் மீதான செலவு உட்பட இறக்குமதிச் செலவினம் கடுமையாக அதிகரித்தமையே காரணமாகும். ஏற்றுமதிப் போட்டித்தன்மையினை மேம்படுத்தும் நோக்குடன் 2011 நவெம்பரில் ரூபா 3 சதவீதத்தினால் மேலும் தேய்வடைந்தது. இதன்படி, 2011 இறுதியில் ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2.59 சதவீதத்தினால் ரூ.113.90 இற்கு தேய்வடைந்தது. 2011இல் ஐ.அ.டொலருக்கெதிரான ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் 2010இன் ரூ.113.06 உடன் ஒப்பிடுகையில் ரூ.110.57 ஆகக் காணப்பட்டது. 2012 பெப்புருவரி மத்திய வங்கி உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அதன் தலையீட்டினை மட்டுப்படுத்தத் தீர்மானித்தது. அதன் பொருட்டு பெற்றோலிய இறக்குமதிச் செலவின் ஒரு பகுதியைத் தீர்ப்பனவு செய்வதற்குத் தேவையான அளவிற்கு செலாவணி வீத நிரம்பலை மட்டுப்படுத்துவதற்கும், வர்த்தக வங்கிகளினால் அடுக்கு 2 இன் பெறுகைகள் உட்பட பல்வேறுபட்ட மூலங்களிலிருந்தும் சந்தைக்குள் வந்த வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையின் மிகையினை ஈர்ப்பதற்கும் மத்திய வங்கி தலையிட்டது. அவ்வாறு தலையிடாவிடின் ரூபாவின் நியாயமற்ற உயர்வுகளுக்கு அது வழிவகுத்துவிடும். இக்கொள்கையின் நோக்கம், இறக்குமதிகளை ஊக்கம் குன்றச் செய்வதாக இருந்த வேளையில் ஏற்றுமதிகளுக்கு ஊக்கமளித்து வர்த்தகப் பற்றாக்குறையினையும் அதேபோன்று நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினையும் குறைவடைவதனை இயலச் செய்வதாக இருந்தது. மேலும், 2012 மாச்சு மத்திய வங்கி, வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான முன்னோக்கிய ஒப்பந்த காலப்பகுதியை உயர்ந்தபட்சம் 90 நாட்களுக்கு மட்டுப்படுத்துமாறும், செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களையும் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் ஊக நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தேறிய திறந்த நிலைமைகள் மீதான நடைமுறை வெளிப்படுத்தல்களின் வரையறையை கீழ் நோக்கி திருத்துமாறும் வர்த்தக வங்கிகளைப் பணித்தது. 2011ஆம் ஆண்டுப் பகுதியில் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் 2010இல் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்தன.


## இறைத்துறை அபிவிருத்திகள்

**2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம், உயர்ந்த பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கு முதலீடுகளை உயர்த்துவதற்கான தூண்டுதலளிக்கக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்குவதன் மீதும் அதேவேளையில் இறைத்திரட்சி செயன்முறையினை தொடர்வதன் மீதும் கவனத்தினைச் செலுத்தியது.** 2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் வரி முறைமைகளை இலகுபடுத்துவதற்கும் நடுத்தர காலத்தில் அரசிறைத் திரட்டல்களை மேம்படுத்தும் விதத்தில் வரித் தளத்தினை விரிவாக்குவதற்குமாக முக்கியமான சீர்திருத்தங்களை அறிவித்தது. மேலும், மீண்டெழும் செலவினத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் இறைத்திரட்சிக்கான அதன் கடப்பாடுகளை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்திய வேளையில் அரச முதலீடுகள் உயர் மட்டத்தில் பேணப்பட்டன. இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2011இல் திரண்ட இறைப் பற்றாக்குறை 2010இன் 8 சதவீதத்திலிருந்து 6.9 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. அரசிறையில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் மீண்டெழும் செலவினத்தின் மீதான கட்டுப்பாடுகளும் மூலதனச் செலவினத்திற்கான முன்னுரிமைப்படுத்தலும் 2011இற்கான மதிப்பீடுகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் இவ்வாண்டுப் பகுதியில் இறை நிலுவைகளைப் பேணுவதற்கு உதவின.

**பல வரிகள் ஒழிக்கப்பட்டமை, வரி வீதங்களில் செய்யப்பட்ட குறைப்பு, வரிக் கீழ் மட்டங்களில் மேல் நோக்கிச் செய்யப்பட்ட திருத்தங்கள் என்பனவற்றின் காரணமாக 2011இல் அரசிறைச் சேகரிப்புக்கள் பின்னடைவினைக் கொண்டிருந்தன.** எனினும், வரி முறைமைகளை இலகுபடுத்துவதற்கும் வரித் தளத்தினை விரிவாக்குவதற்குமாக 2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய சீர்திருத்தங்கள் நடுத்தர காலத்தில் அரசிறைத் திரட்டல்களை உயர்வடையச் செய்யும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், குறுங்காலத்தில் இவ்வழிமுறைகள் வரி/ மொ.உ.உற்பத்தி விகிதத்தில் சில குறைப்புக்களை ஏற்படுத்தியிருக்கும் போல் தோன்றுகிறது. உயர்வடைந்து செல்லும் பன்னாட்டு விலைகளிலிருந்து உள்நாட்டு சந்தை மீதான அழுத்தங்களைத் தணிப்பதற்காக, குறிப்பாக பெற்றோலியம் மற்றும் பால் மா இறக்குமதிகளின் மீது வழங்கப்பட்ட விலக்கல்களும் 2011இல் அரசிறைத் திரட்டல்களை மிக மோசமாகப் பாதித்தன. இதன் விளைவாக, மொ.உ.உற்பத்திக்கான அரசிறை விகிதம் 2010இன் 14.6 சதவீதத்திலிருந்து 2011இல் 14.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**மீண்டெழும் செலவினத்தினைச் சிக்கனப்படுத்துவதற்கு அரசாங்கம் வழிமுறைகளை மேற்கொண்ட வேளையில் உபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு அரச முதலீடுகள் முன்னுரிமையளித்தமையானது மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2010இன் மொ.உ.உற்பத்தியின் 22.9 சதவீதத்திலிருந்து 2011இல் மொ.உ.உற்பத்தியின் 21.4 சதவீதத்திற்கு குறைடைய உதவியது.** மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் மொ.உ.உற்பத்தியின் 1.5 சதவீதத்தினால் குறைவடைந்தமையானது மீண்டெழும் செலவினம் 1.4 சதவீதப் புள்ளியினாலும் மூலதனச்


**வரைபடம் 1.7** அரசிறை, செலவினம் மற்றும் மொத்த இறைப் பற்றாக்குறை (மொ.உ.உ. இன் சதவீதமாக)




செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 0.1 சதவீதத்தினாலும் குறைவடைந்தமையின் இணைந்த விளைவாகும். முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இறைத்திரட்சி வழிமுறைகளும் அதேபோன்று தாழ்ந்த வட்டி வீத சூழலும் வட்டிச் செலவினத்தின் வளர்ச்சியை குறைவடையச் செய்து 2011இல் மீண்டெழும் செலவினம் மிதமடைய பெருமளவிற்கு உதவியது. எனினும், பொருளாதார நடவடிக்கைகளை உயர்த்துவதற்காக வீதிகள், துறைமுகங்கள், வலு மற்றும் சக்தி, புகைவண்டி, நீர்வழங்கல் மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய துறைகளிலுள்ள முக்கிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் மீதான முதலீடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

**தேவையான நிதியத்தின் பெரும் பங்கினை வங்கித்தொழில் துறையிலிருந்து பெற்றுக் கொண்டதன் மூலம் இறைப் பற்றாக்குறை உள்நாட்டு மூலங்களினூடாக முக்கியமாக நிதியிடப்பட்டது.** வங்கியல்லாத் துறையின் நிதியங்களின் ஒரு பகுதி மாற்று முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தமையின் காரணமாக அவற்றின் மூலவளங்களது கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் உள்நாட்டுச் சந்தையில் காணப்பட்ட இறுக்கமான

**வரைபடம் 1.8** அரச படுகடன் (மொ.உ.உ. இன் சதவீதமாக)





ரூபாத் திரவத்தன்மை என்பன முதலாந்தரச் சந்தையிலிருந்தான மத்திய வங்கியின் அரச பிணையங்களின் கொள்வனவினை அதிகரித்தன. வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்தான சாதகமான பதிலிறுப்பு, பன்னாட்டு சந்தைகளில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த வட்டி வீதங்கள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு வரவு செலவுத்திட்ட நிதியிடலுக்கான வளங்கள் இல்லாமல் போவதன் தாக்கத்தினைக் குறைப்பதற்காகவும் உள்நாட்டு வட்டி வீதங்கள் மீதான அழுத்தங்களைக் குறைப்பதற்காகவும் 10 ஆண்டு கால நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டன. இதன் விளைவாக 2011இல் தேறிய உள்நாட்டு நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதமாக விளங்கிய வேளையில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 3.4 சதவீதமாக விளங்கியது.

**அரச படுகடன் உறுதிப்பாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் முன்னைய ஆண்டின் 81.9 சதவீதத்திலிருந்து 78.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த மொ.உ.உற்பத்திக்கான வெளிநின்ற படுகடன் விகிதத்தில் பிரதிபலிக்கப்பட்டது.** உயர்ந்த பொருளாதார வளர்ச்சியுடன் இறைத் திரட்சிக்கான முயற்சிகள் சேர்ந்து படுகடன் சுமையினைக் குறைக்க பங்களித்த போதும் ஆண்டின் இறுதிப் பகுதியில் முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையானது வெளிநின்ற படுகடன் இருப்பில் சில எதிர்மறையான பாதிப்புக்களை ஏற்படுத்தியது.


## நாணயத்துறை அபிவிருத்திகள்

**மத்திய வங்கி 2011 சனவரியில் அதன் நாணயக் கொள்கை நிலையைத் தளர்த்திய போதிலும், கொடுகடன் மற்றும் நாணயக் கூட்டுகளின் விரைந்த வேகத்திலான தொடர்ச்சியான விரிவாக்கத்தைக் கவனத்தில் கொண்டு இவ்வாண்டின் எஞ்சிய பகுதியில் நாணயக் கொள்கையை நடத்துவதில் மத்திய வங்கி கூடியளவு எச்சரிக்கையுடன் கூடிய அணுகுமுறையைக் பின்பற்றியது.** முறையே 7.25 சதவீதம் மற்றும் 9.00 சதவீதத்திலிருந்து 2011 சனவரியில் முறையே 7.00 சதவீதம் மற்றும் 8.50 சதவீதத்துக்குக் குறைக்கப்பட்ட மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் பின்பு இவ்வாண்டில் மாற்றமின்றி வைத்திருக்கப்பட்டன. உள்ளூர் பணச் சந்தையில் ரூபாவின் திரவத்தன்மை தொடர்ந்தும் உயர்ந்து காணப்பட்டமையால் நாணயக் கொள்கையின் போக்கில் மாற்றத்துக்கான சமிக்ஞையைக் காட்டும் அதேவேளை அளவுக்கதிகமான திரவத்தன்மையின் ஒரு பகுதியை நிரந்தரமாக ஈர்த்துக் கொள்வதற்கு வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீது பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்கு வீதம் 2011 ஏப்பிறலில் திருத்தியமைக்கப்பட்டது. வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் விரைவாக விரிவடைந்தமையால் மத்திய வங்கி விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தார்மீக ஒழுங்குகளை மேற்கொண்ட

**வரைபடம் 1.9** கொள்கை வட்டி வீத எல்லை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம்




**வரைபடம் 1.10** உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ரூபாய் வைப்பு பொறுப்புக்கள் மீதான நியதி ஒதுக்கு விகிதம்




வேளையில் வீழ்ச்சியடைந்து செல்லும் அளவுக்கதிகமான திரவத்தன்மைக்கு மத்தியில் விருப்பத்துக்குரிய மட்டத்தில் குறுகிய கால வட்டி வீதங்களைப் பேணுவதற்கு இவ்வாண்டின் பிற்பகுதியில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நாளாந்த ஏலங்களை விதந்துரைத்தது. குறிப்பாக இறக்குமதிகளின் உயர் வளர்ச்சி மற்றும் கொடுகடன் உள்ளிட்ட தோற்றம் பெற்றுவரும் பேரண்டப் பொருளாதார சமநிலையற்ற தன்மையைப் பரிசீலனையில் கொண்டும் பணவீக்கம் ஒற்றை இலக்க மட்டங்களில் தொடர்ந்திருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டும் மத்திய வங்கி 2012 பெப்புருவரியில் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தை ஒவ்வொன்றும் 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 7.50 சதவீதம் மற்றும் 9.00 சதவீதத்துக்கு உயர்த்திய வேளையில் கொடுகடன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துமாறு 2012 மாச்சில் வர்த்தக வங்கிகளைப் பணித்தது.


**உள்நாட்டு பணச் சந்தையில் அளவுக்கதிகமான ரூபாத் திரவத்தன்மையில் கூர்மையான வீழ்ச்சியொன்று 2011இன் பிற்பகுதியில் அவதானிக்கப்பட்டது.** 2010 இறுதியில் ரூ.113.5 பில்லியனாக விளங்கிய அளவுக்கதிகமான திரவத்தன்மை 2011 இறுதியில் ரூ.5.4 பில்லியன் கொண்ட பற்றாக்குறையாக மாறியது. வர்த்தக வங்கிகளால் பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடனிலான விரிவாக்கத்துக்கு மேலதிகமாக 2011 ஏப்பிறலில் நியதி ஒதுக்கு விகிதத்திலான அதிகரிப்பு மற்றும் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை, சந்தையிலிருந்து திரவத்தன்மையின் குறிப்பிடத்தக்க அளவை ஈர்த்துக் கொண்ட போதிலும் யூலையில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டுக்கான பன்னாட்டு முறியின் வழங்கல் மற்றும் இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் முதலாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களை மத்திய வங்கி கொள்வனவு செய்ததைத் தொடர்ந்து திரவத்தன்மையில் கணிசமான உட்செலுத்துகை காணப்பட்டது. மத்திய வங்கி இவ்வாண்டு முழுவதும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் துணைநில் வசதிகளூடான ஓரிரவு அடிப்படையிலும் 2011 செத்தெம்பரில் நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மீள ஆரம்பித்ததூடாகவும் திரவத்தன்மையை முகாமை செய்தது.

**பொதுமக்களின் நிதியியல் நடைமுறைகளிலான மாற்றங்களுடன் இணைந்து பொருளாதாரத்தில் தற்போது இடம்பெற்று வரும் அமைப்பு ரீதியான மாற்றங்கள் உள்வாங்கப்படுவதை இயலச் செய்யும் விதத்தில் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார மற்றும் நாணய பகுப்பாய்வுடன் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது.** மத்திய வங்கி பணப் பெருக்கியினூடாக தொழிற்பாட்டு இலக்கான ஒதுக்குப் பணத்துடன் இணைப்பைக் கொண்டுள்ள நாணயக் கொள்கையின் இடைநிலைக்கான விரிந்த பணத்தில் தொடர்ந்து கவனம் செலுத்தியது. பொருளாதாரத்தின் அனைத்து பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நாணய நிகழ்ச்சித்திட்டம் விரிந்த பணத்தின் 14.5 சதவீதம் கொண்ட சராசரி வளர்ச்சியை எதிர்பார்ப்பதுடன், இது மொ.உ.உற்பத்தியின் பெயரளவு வளர்ச்சியுடன் இணைந்து காணப்பட்டது. உண்மை மொ.உ.உற்பத்திக்கான ஆரம்ப எறிவுகள் 8.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியை எடுத்துக்காட்டியிருக்கையில் இவ்வாண்டுக்கான மொ.உ.உற்பத்தி சுருக்கி 6 சதவீதமாக இருக்குமென எதிர்பார்ப்பதுடன், இது விரிந்த பணத்தின் குறிப்பிடப்பட்ட வளர்ச்சிக்கான அடிப்படையை உருவாக்கியது. எனினும், 2009 இலிருந்து வைப்புக்கான நாணயத்தின் விகிதத்திலேற்பட்ட அதிகரிப்பு காரணமாக ஏற்பட்ட தாழ்ந்த பணப் பெருக்கியால் ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சி 16.4 சதவீதமளவில் உயர்ந்து விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், பணப் பெருக்கியில் ஏற்பட்ட சுருக்கத்தின் தாக்கத்தையும் இதனால் விரிந்த பணத்தில் ஏற்படும் தாக்கத்தையும் எதிரீடு செய்யும் பொருட்டு 2011 ஏப்பிறலில் மேற்கொள்ளப்பட்ட அரச ஒதுக்கு விகிதத்துக்கான மேல் நோக்கிய திருத்தத்தைக் கவனத்தில் கொண்டு ஒதுக்குப் பணத்துக்கான ஆண்டுச் சராசரி வளர்ச்சி இலக்கு 19.5 சதவீதத்துக்கு உயர்த்தப்பட்டது.

**ஒதுக்குப் பணம் மற்றும் விரிந்த பணம் ($M_{2b}$) ஆகிய இரண்டினதும் வளர்ச்சி 2011இல் எறிவு செய்யப்பட்ட பாதையை விஞ்சியது.** இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் ஒதுக்குப் பணத்தின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி 18 சதவீதத்துக்கும் குறைவாக இருந்த வேளையில் பின்பு மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களிலான விரிவாக்கம் காரணமாக 20 சதவீதத்தால் விரிவடைந்ததுடன், இவ்வாண்டில் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன. 2011இல் ரூ.409.2 பில்லியனாக விளங்கிய சராசரி நாளாந்த ஒதுக்குப் பணம் இலக்கிடப்பட்ட 19.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 22.1 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. விரிந்த பணம் ($M_{2b}$) 2011இல் எதிர்பார்க்கப்பட்டதை விட உயர்ந்த வீதத்தில் விரிவடைந்து 2010 இறுதியின் 15.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2011 திசெம்பர் இறுதியில் 19.1 சதவீதம் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் விரிந்த பணத்தின் சராசரி வளர்ச்சி இவ்வாண்டுக்கான நாணய நிகழ்ச்சித்திட்டத்தின் படியான 14.5 சதவீத இலக்குடன் ஒப்பிடுகையில் 2011இல் 19.3 சதவீதத்துக்கு அதிகரித்தது.

**விரிந்த பணத்தின் ($M_{2b}$) விரிவாக்கம் தனியார் துறை மற்றும் அரச துறை இரண்டுக்கும் வழங்கப்பட்ட கொடுகடனால் உந்தப்பட்ட வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பால் முழுமையாக ஏற்பட்டது.** 2010 திசெம்பரில் 24.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2011 ஏப்பிறலிலிருந்து ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 30 சதவீதத்துக்கும் கூடுதலாக வளர்ச்சியடைந்து 2011 திசெம்பரில் 34.5 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. தனியார் துறைக்கான கொடுகடன் 2010இன் ரூ.297 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.515 பில்லியனால் அதிகரித்தது. கொடுகடனுக்கான உயர் கேள்வியானது முதலீடு மற்றும் நுகர்வு இரண்டுக்குமான உகந்த சூழல், குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் கொடுகடனுக்கான மேம்பாடடைந்த அணுகுமுறையைப் பிரதிபலிக்கும் அதிகரித்த பொருளாதாரச் செயற்பாட்டால்

**வரைபடம் 1.11 மொ.உ.உ. மற்றும் மொத்த வைப்புக்களின் விகிதமாக தனியார் துறை கொடுகடன்**




ஏற்பட்டது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் மொத்த வைப்புக்களின் சதவீதமாகவும் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் முறையே 30.7 சதவீதமாகவும் 82.1 சதவீதமாகவும் விளங்கியது. வங்கித்தொழில் முறைமையிலிருந்தான அரச துறைக் கடன்பாடுகளும் அதிகரித்து கொடுகடன் மற்றும் நாணய விரிவாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்தன. வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசாங்கத்துக்கான தேறிய கொடுகடன் இவ்வாண்டில் ரூ.206 பில்லியனால் அதிகரித்து ரூ.42 பில்லியன் கொண்ட அரச வரவு செலவுத்திட்டத்திலான மதிப்பீட்டை விஞ்சியிருக்கையில் அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2010 இறுதியிலான ரூ. 145 பில்லியனிலிருந்து 2011இல் ரூ.198 பில்லியனுக்கு ரூ.54 பில்லியனால் அதிகரித்தது.

**வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட சுருக்கம் விரிந்த பணத்தின் விரிவாக்கத்தை ஓரளவுக்கு ஊக்கமிழக்கச் செய்தது.** 2011இல், வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2010இன் இறுதியின் ரூ.377.4 பில்லியனிலிருந்து ரூ.98.1 பில்லியனுக்கு ரூ.279.4 பில்லியனால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. செலாவணி வீதத்தின் வேண்டப்படாத தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு உள்நாட்டுச் சந்தைக்கு மத்திய வங்கியால் வெளிநாட்டுச் செலாவணி வழங்கப்பட்டமை மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் குறைவை ஏற்படுத்தியிருக்கையில் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரும்பாலும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் இலங்கை அபிவிருத்தி முறிகளிலான அதிகரித்த முதலீடுகள் வடிவில் உள்நாட்டுச் சொத்துக்களை நோக்கி நகர்ந்தமையால் ஏற்பட்டதுடன், வெளிநின்ற எண்ணெய் இறக்குமதிச் செலவைத் தீர்ப்பனவு செய்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை வசதிப்படுத்தியது. இத்துடன், இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவினத்தை நிதியிடுவதற்கு வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல் வர்த்தக வங்கிகளின் தேறிய நிதியியல் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

**உள்நாட்டுப் பணச் சந்தையில் வீழ்ச்சியடைந்து செல்லும் மிகையான ரூபாத் திரவத்தன்மையில் பிரதிபலிக்கப்பட்டவாறு நாணய நிபந்தனைகளை இறுக்கமாக்கியமை இவ்வாண்டின் இறுதியில் வட்டி வீத அமைப்பில் மேல் நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியது.** வங்கிகளுக்கிடையேயான சந்தையில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் இவ்வாண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் காணப்பட்ட கொள்கை வட்டி வீத அமைப்பிற்குள் பெரிதும் மாற்றமின்றி இருந்த போதிலும் இறுதிக் காலாண்டில் மேல் நோக்கி நகர்ந்தது. வைப்பு வீதங்களைப் பொறுத்தமட்டில், 2010 திசெம்பரில்

6.23 சதவீதமாக விளங்கிய சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் இவ்வாண்டில் 101 அடிப்படைப் புள்ளிகள் அதிகரிப்பைப் பதிவு செய்து 2011 திசெம்பரில் 7.24 சதவீதத்தை அடைந்தது. சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் 2011 திசெம்பரில் 8.95 சதவீதத்துக்கு கணிசமானளவில் அதிகரிக்க முன்பு 2011 சனவரி - நவெம்பர் காலப்பகுதியில் 8.11 - 8.24 சதவீத வீச்சில் தொடர்ந்து விளங்கியது. இவ்வாண்டில் வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் இவ்வாண்டின் இறுதி வாரத்தில் கணிசமானளவில் 10.77 சதவீதத்தை அடைய முன்பு, நவெம்பர் முற்பகுதி வரையும் 8.92 - 9.96 சதவீத வீச்சினுள் ஊசலாடியது. முதலாந்தரச் சந்தையில் அரச பிணையங்களுக்கான விளைவு வீதங்களும் இவ்வாண்டின் இறுதியில் அதிகரித்தன. அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையியும் மேல் நோக்கி நகர்ந்த போதிலும் 2011இன் இறுதியில் முன்னைய ஆண்டை விட தட்டையாக விளங்கியது.

## நிதியியல் துறைச் செயலாற்றமும் முறைமை உறுதிப்பாடும்

**உலகளாவிய பேரண்ட நிதியியல் சூழலிலிருந்து தோன்றும் அதிகரித்த இடர்நேர்வுகளுக்கு மத்தியில் நிதியியல் முறைமை தொடர்ந்தும் உறுதியாக விளங்கி பலமான உள்நாட்டு பொருளாதார வளர்ச்சியால் ஆதரவளிக்கப்பட்டு மீளெழுச்சியுடன் காணப்பட்டது.** விரிவடைந்து செல்லும் பொருளாதாரச் செயற்பாட்டுடன் உள்நாட்டு பேரண்டப் பொருளாதார நிலைமைகள் தொடர்ந்து சாதகமாக விளங்கி 2011இல் கொடுகடனுக்கான கேள்வியை விரைவுபடுத்தியிருக்கையில், இவ்வாண்டின் பிற்பகுதியை நோக்கி உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் திரவத்தன்மை அழுத்தம் வெளிப்படத் தொடங்கியது. நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவில் முன்னேறியதுடன் போதுமான மூலதனம், திரவத்தன்மை மற்றும் இலாபகரத்தன்மை இருப்புக்களுடன் முன்மதியுடைய குறிகாட்டிகள் பேணப்பட்டன. இவ்வாண்டின் அநேகமான காலப்பகுதியில் பணம் மற்றும் கொடுகடன் சந்தைகள் தொடர்ந்து திரவத்தன்மை உள்ளதாகவும் வட்டி வீதங்கள் தொடர்ந்தும் உறுதியாகவும் விளங்கின. கொழும்பு பங்குச் சந்தையின் விலைச் சுட்டெண்கள் முன்னைய இரண்டு ஆண்டுகளின் எழுச்சிக்குப் பின்பு வீழ்ச்சியடைந்திருக்கையில் 2011இல் ஆரம்பப் பங்கு வழங்கல் மற்றும் உரிமம் வழங்கல் மூலம் திரட்டப்பட்ட நிதியங்கள் கணிசமானளவில் அதிகரித்தன. முறைமை ரீதியில் முக்கியமான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைத் தொழிற்பாடுகள் வினைத்திறனுடன் தொடர்ந்து இடம்பெற்றிருக்கையில் மேம்பட்ட தடங்கலற்ற வியாபார ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டதுடன் முன்மதியுடைய தேவைப்பாடுகள் அதிகரிக்கப்பட்டன.

**நிதியியல் நிறுவனங்களின் பொதுவான நிதியியல் நிபந்தனைகள் மற்றும் ஆற்றல் முன்னேற்றமடைந்து நிதியியல் கொடுக்கல்வாங்கல்களில் அதிகரிப்பைப் பிரதிபலித்து வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தை வசதிப்படுத்தும்.** வங்கித்தொழில் நிதி மற்றும் குத்தகைக்குவிடல் மற்றும் காப்புறுதித் துறை குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட நாட்டிலுள்ள அவற்றின் கிளை வலையமைப்பை விரிவாக்கியதன் மூலம் நிதியியல் பணிகளைப் பெறும் வசதியை அதிகரித்தது. வங்கித்தொழில் துறையின் செயற்பாடுகள் பலப்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் மூலமான ஆரோக்கியமான கொடுகடன் விரிவாக்கத்தினூடாக மேலும் விரைவுபடுத்தப்பட்டது. வங்கித்தொழில் துறையின் சொத்துக்களின் தரம் முன்னேற்றமடைந்தது. செயலாற்றாக் கடன்களின் சாதகமான அபிவிருத்தியால் பிரதிபலிக்கப்பட்டவாறு கொடுகடன் இடர்நேர்வு வீழ்ச்சியடைந்தது. உயர் கொடுகடன் விரிவாக்கத்தின் காரணமாக மூலதன போதுமாந்தன்மை விகிதங்களில் ஏற்பட்ட சிறு வீழ்ச்சிக்கு மத்தியிலும் வங்கித்தொழில் துறை நன்கு மூலதனப்படுத்தப்பட்டதாக தொடர்ந்து விளங்கியது. வங்கித்தொழில் முறைமையின் இலாபகரத்தன்மை வட்டி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இலாபகரத்தன்மைக் குறிகாட்டிகளில் ஏற்பட்ட சிறு வீழ்ச்சிக்கு மத்தியிலும் வங்கித்தொழில் முறைமையின் இலாபகாரத்தன்மை பேணப்பட்டது. வங்கியல்லா நிதியியல் துறையைப் பொறுத்தமட்டில் நிதி மற்றும் குத்தகைக்கு விடும் நிறுவனங்களின் மூலதன மற்றும் முன்மதியுடைய தேவைப்பாடுகள் விரிந்த பொருளாதாரத்துக்கு கொடுகடன் மற்றும் நிதியியல் பணிகளின் வழங்கலை வசதிப்படுத்துவதற்கு தொடர்ந்து அதிகரிக்கப்படவிருக்கின்றன. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் இலாபகரத்தன்மை மற்றும் சொத்துக்களின் தரம் மேம்பாடடைந்த வேளையில் மூலதன மட்டம் ஆகக் குறைந்த ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டை விட கூடியளவில் பேணப்பட்டது. காப்புறுதிக் கம்பனிகள் கட்டுப்பண வருமானம் மற்றும் சொத்துக்களில் வளர்ச்சியை அனுபவித்தன. எனினும், காப்புறுதிக் கம்பனிகளின் முதலீட்டு வருமானம் தாழ்ந்த வட்டி வீதச் சூழல் மற்றும் கொழும்பு பங்குச் சந்தையில் ஏற்பட்ட விலை வீழ்ச்சி காரணமாக வீழ்ச்சியடைந்தன.

**உள்நாட்டு நிதியியல் சந்தை இவ்வாண்டில் பரந்தளவில் உறுதியாக விளங்கியது.** திரவத்தன்மை இக்கட்டான நிலைக்கு வந்ததுடன் இவ்வாண்டின் பிற்பகுதியில் வட்டி வீதங்கள் மீது மேல் நோக்கிய அழுத்தம் காணப்பட்டது. கொழும்பு பங்குச் சந்தையின் பங்கு விலைச்சுட்டெண்கள் 2009 மற்றும் 2010இல் பங்குச் சந்தை பதிவு செய்த கவர்ச்சியான செயலாற்றதைத் தொடர்ந்து 2011இல் வீழ்ச்சியடைந்தன. தரகர்களால் வழங்கப்பட்ட கொடுகடன் மீதான கட்டுப்பாடுகள், தொடர்ச்சியான தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சல்கள், அநேகமான

முதன்மைப் பங்கு வழங்கல் மற்றும் தனிப்பட்ட பங்குகளுக்கு இடமளித்தல் என்பவற்றின் மீது ஏற்பட்ட திரவத்தன்மை இல்லாமை மற்றும் உலகளாவிய நிதியியல் சந்தைகளினது அபிவிருத்தியின் தாக்கம் பங்குச் சந்தையின் செயலாற்றம் மீது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தின. கொழும்புப் பங்குச் சந்தையின் வருமானங்களுக்கான சந்தை விலை விகிதம் வீழ்ச்சியடைந்ததுடன் வெளிநாட்டவர்கள் சந்தையில் தேறிய விற்பனையாளர்களாக விளங்கி 2009இன் பிற்பகுதியில் ஆரம்பித்த கீழ் நோக்கிய போக்கைத் தொடர்ந்தது. முதன்மைப் பங்கு வழங்கல் செயற்பாடு மற்றும் உரிமங்களின் வழங்கலூடாக சந்தையிலிருந்து திரட்டப்பட்ட நிதியங்களின் தொகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டது.

**நிதியியல் முறைமைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டது.** இவ்வாண்டில் மத்திய வங்கி வங்கிகளில் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு அதன் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை மேலும் பலப்படுத்தியது. அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரம் மற்றும் வைப்புக்களை ஏற்றல் பிரச்சனைகளை இல்லாமல் செய்வதற்காக நிதிக் கம்பனிகள் சட்டத்திற்குப் பதிலான நிதி தொழில் சட்டம் கொண்டு வரப்பட்டது. நிதி தொழில் சட்டத்துடன் இணங்கிச் செல்லும் வகையில் வங்கியல்லா நிதியியல் துறைக்காக புதிய மற்றும் திருத்தப்பட்ட பணிப்புரைகளின் தொடர் வழங்கப்பட்டது. நுண்பாக நிதி நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு புதிய சட்டமொன்று இறுதிப்படுத்தப்பட்டது. வங்கித்தொழில் குழுமங்களின் ஒன்று சேர்ந்த மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைத்தல் மற்றும் தீர்மானங்களுக்கான இணைப்பு மற்றும் கையேற்பினை வசதிப்படுத்தல் என்பவற்றை இயலச் செய்வதற்கான ஏற்பாடுகளுடன் வங்கித்தொழில் சட்டத்துக்கான உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் ஒப்புதலுக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. காப்புறுதித் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு காப்புறுதிக் கைத்தொழிலின் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்துக்கு திருத்தங்களை இயற்றியதன் மூலம் 2011 சனவரியில் பலப்படுத்தப்பட்டது. குறிப்பாக, சொத்துக்களின் பெறுமதியிடல் தொடர்பான கடன் தீராற்றல் அளவு விதிகளை திருத்துவதற்கான பணிப்புரைகளும் வழங்கப்பட்டன. பங்குச் சந்தையைப் பொறுத்தமட்டில் தரகர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கொடுகடன் ஏற்பாடு தொடர்பான ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் செலாவணியில் வர்த்தகப்படுத்தப்படும் நிதியங்களின் ஒழுங்குமுறைப்படுத்தலுக்காக புதிய கூறுநம்பிக்கைக் குறியீடு வழங்கப்பட்டது.

**இவ்வாண்டில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கையில் தோற்றம் பெற்றுவரும் இலத்திரனியல் கொடுப்பனவு பொறிமுறைகளை உள்ளடக்கும் விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு விரிவாக்கப்பட்டது.** இரண்டு புதிய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் ஒரு முதனிலை வணிகர் முறைமையில் உறுப்புரிமையை பெற்றுக் கொண்டதன் மூலம் லங்கா செட்டில் முறைமை பங்கேற்கும் நிறுவனங்களின் நியதிகளில் விரிவடைந்தது. அத்தகைய கொடுப்பனவு பொறிமுறைகளின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டு வங்கியால் வழிநடத்தப்படும் செல்லிடத் தொலைபேசி மூலமான கொடுப்பனவுப் பணிகள் மற்றும் செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவுப் பணிகளின் அடிப்படையிலான கட்டுக்காப்பாளர் கணக்கிற்கான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையின் ஒழுங்குமுறைப்படுத்துநராக மத்திய வங்கி இரண்டு தனித்தனியான அறிவுறுத்தல்களின் தொகுதியை வழங்கியது. இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவுகளின் கொடுத்துத் தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவுக்கான தேசிய மட்டத்திலான தளத்தை வழங்கும் நோக்குடன் மத்திய வங்கி லங்கா கிளியருடன் இணைந்து பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியை நிறுவுவதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தது. மேலும், கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் போன்ற கொடுப்பனவு அட்டைகளின் தகவல் பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொருட்டு இலங்கையில் கொடுப்பனவு அட்டைகளுக்கான குறிமுறையாக்கல் பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்கு மத்திய வங்கி இலங்கை கொடுப்பனவு அட்டைகள் கைத்தொழில் சங்கத்தை ஊக்கப்படுத்தியது.

## 1.3 உலகளாவிய பொருளாதார சூழலும் தோற்றப்பாடும்

**2011இன் புதுப்பிக்கப்பட்ட சவால்களுடன் உலகளாவிய பொருளாதார மீட்சி தொடர்ந்தும் வலுவற்றதாக விளங்கியது.** இவ்வாண்டின் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியை விட குறைந்த மீட்சியைக் காட்டிய முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் இவ்வாண்டின் பிற்பகுதியில் இறை மற்றும் நிதியியல் நிச்சயமற்ற தன்மை காரணமாக இன்னுமொரு அதிர்வுகளின் அலையால் பாதிக்கப்பட்டன. குறிப்பாக, யூரோ பிரதேசத்தில் ஏற்பட்ட தீவிரப்படுத்தப்பட்ட அழுத்தங்களால் உலகளாவிய நிதியியல் நிபந்தனைகள் மோசமடைந்து பன்னாட்டு தரமிடல் முகவர்களால் பல நாடுகளின் நாட்டுக்குரிய தரமிடல்களின் கீழ் நோக்கிய போக்கைப் பிரதிபலித்து உலக பொருளாதாரச் செயற்பாட்டுக்கான கீழ் நோக்கிய இடர்நேர்வுகளை மேலும் தீவிரப்படுத்தின. இதன் விளைவாக, 2010இல் 5.2 சதவீதத்தில் வளர்ச்சியடைந்த உலகப் பொருளாதாரம் 2011இல் 3.8 சதவீதத்தால் மட்டும் விரிவடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது[1]. 2010இன் பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் அநேகமாக அனைத்துப் பொருளாதாப் பிராந்தியங்களும் 2011இல்

1 உலகப் பொருளாதார வெளிப்பாடு ஆகப் பிந்தியது. 2012 சனவரியில் பன்னாட்டு நாணய நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி

**அட்டவணை 1.4 உலகப் பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடுகளும் (அ)**

| விடயம் | உண்மை | | எறிவுகள் | |
|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 |
| **உலக வெளியீடு** | **-0.7** | **5.2** | **3.8** | **3.3** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | -3.7 | 3.2 | 1.6 | 1.2 |
| ஐக்கிய அமெரிக்கா | -3.5 | 3.0 | 1.8 | 1.8 |
| யூரோ பகுதி | -4.3 | 1.9 | 1.6 | -0.5 |
| ஐக்கிய இராச்சியம் | -4.9 | 2.1 | 0.9 | 0.6 |
| யப்பான் | -6.3 | 4.4 | -0.9 | 1.7 |
| தோற்றம்பெற்று வரும், அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 2.8 | 7.3 | 6.2 | 5.4 |
| அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 7.2 | 9.5 | 7.9 | 7.3 |
| சீனா | 9.2 | 10.4 | 9.2 | 8.2 |
| இந்தியா | 6.8 | 9.9 | 7.4 | 7.0 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **-10.7** | **12.7** | **6.9** | **3.8** |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | -12.4 | 11.5 | 4.8 | 2.0 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | -8.0 | 15.0 | 11.3 | 7.1 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | -11.9 | 12.2 | 5.5 | 2.4 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | -7.7 | 13.8 | 9.0 | 6.1 |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 0.1 | 1.6 | 2.7 | 1.6 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 5.2 | 6.1 | 7.2 | 6.2 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொ.) | | | | |
| எண்ணெய் | -36.3 | 27.9 | 31.9 | -4.9 |
| எண்ணெய் அல்லாதவை | -15.7 | 26.3 | 17.7 | -14.0 |
| **ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் (சதவீதம்) ஐ.அ.டொலரில்** | **1.1** | **0.5** | **0.5** | **0.9** |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்.

*மூலம்:* உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (சன 2012 மற்றும் செத் 2011), ப.நா.நிதியம்

குறைவான வளர்ச்சியை அனுபவித்தன. எனினும், கடந்த பல ஆண்டுகளாக காணப்பட்டவாறு, உலகளாவிய பொருளாதாரச் செயற்பாட்டின் குறிப்பிடத்தக்க பண்பாக இருப்பது சமமற்ற தன்மையாக விளங்குகிறது. இங்கு முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் 1.6 சதவீதத்தால் விரிவடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கையில் தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் 2011இல் 6.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் ஆசியாவில் பொருளாதாரங்கள் 2010இன் 9.5 சதவீதம் கொண்ட பலமான மீட்சியுடன் ஒப்பிடுகையில் 2011இல் அவற்றின் சராசரி வளர்ச்சியில் 7.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தன.

**முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களிடையேயான பொருளாதாரச் செயலாற்றத்திலான தொடர்ச்சியான வேறுபாடு பலமான மற்றும் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய வளர்ச்சியை வழங்கும் பொருட்டு குறிப்பிடப்பட்ட 'மீள்சமநிலைப்படுத்தலை' தேவைப்படுத்துகிறது[2].** மீள்சமநிலைப்படுத்தும் தேவைகள் 'உள்நாட்டிலும்' மற்றும் 'வெளிநாட்டிலும்' இடம்பெற வேண்டும். உள்நாட்டில், இறைத் தூண்டலிலிருந்து தனியார் கேள்விக்கான நகர்வு முன்னேற்றமடைந்த பல பொருளாதாரங்களில் இடம்பெற வேண்டும். வெளிநாட்டில், நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையைக் கொண்ட பொருளாதாரங்கள் அவற்றின் ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டுக் கேள்வியை அதிகரிக்க வேண்டுமென்பதுடன் நடைமுறைக் கணக்கில் மிகையைக் கொண்டுள்ள பொருளாதாரங்கள் (குறிப்பாக தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள்) முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலிருந்து வரும் கேள்வியிலான தளம்பல்களுக்கு மீள்மெழுச்சியை மேம்படுத்தும் பொருட்டு உள்நாட்டுக் கேள்வி மீது கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டும்.

**எனினும், தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில் தேவைப்பட்ட மீள்சமநிலைப்படுத்தல் எறிவு செய்யப்பட்ட நடைமுறைக் கணக்கு நிலுவைகளின்படி எதிர்பார்க்கப்பட்டதை விட மெதுவாகக் காணப்படுகிறது.** குறிப்பாக, ப.நா. நிதியத்தின் பிராந்திய பொருளாதார வெளிப்பாடு (ஏப்பிறல் 2011) எடுத்துக்காட்டுகின்ற, ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தனியார் உள்நாட்டுக் கேள்வியை நோக்கிய வளர்ச்சியின் மீள்சமநிலைப்படுத்தல் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் கூடுதலாக முதலீடு செய்தல் மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்பை பலப்படுத்தல் போன்ற உள்நாட்டுக் கேள்வி மீதான அமைப்பு ரீதியிலான தடைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும். இருப்பினும், தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் நடுத்தர காலத்தில் வளர்ச்சியை தொடர்ந்து வழிநடத்திய போதிலும் அவற்றின் பொருளாதார வளர்ச்சியின் வேகம் மெதுவடைந்து நீண்ட கால இயக்க சமநிலை மட்டங்களுக்கு சீர்ப்படுத்தப்படும். குறிப்பாக, ப.நா.நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆகப் பிந்திய உலக பொருளாதாரத் தோற்றப்பாட்டின் படி பேரண்டப் பொருளாதாரக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டதன் தாக்கங்கள் காரணமாக தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களிலான வளர்ச்சி 2011இன் எதிர்வுகூறலை விட மெதுவடைந்தது.

**2011இல் பன்னாட்டுச் சந்தையில் எண்ணெய் விலைகள் உயர்வாக விளங்கிய போதும் மற்றைய பண்டங்களின் விலைகள் ஆண்டின் பிற்பகுதியில் ஓரளவிற்குக் குறைவடைந்தன.** 2010இன் இரண்டாம் அரைப் பகுதியில் ஆரம்பித்த பொருட்களின் விலைகளிலான அதிகரித்துச் செல்லும் போக்கு 2011 இலும் விரிவடைந்தது. இதன்படி, முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள்; மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள்; 2010இன் முறையே 1.6 சதவீதம் மற்றும் 6.1 சதவீதத்திலிருந்து முறையே 2011இல் 2.7 சதவீதத்திற்கும் 7.2 சதவீதத்திற்கும் அதிகரித்தன. பன்னாட்டு எண்ணெய் விலைகள் முக்கியமாக வழங்கல் பக்கத்துத் தடைகள் காரணமாக 2011இல் உயர்

2 பார்க்க, உலகப் பொருளாதார தோற்றப்பாடு, 2011 செத்தெம்பர்

மட்டத்தில் தொடர்ந்து விளங்கியதுடன் எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைவான உலகளாவிய மீட்சிக்கும் மத்தியிலும் 2012இல் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளிலான புவிசார் அரசியல் காரணிகளின் பின்னணியில் உணவு மற்றும் வலுவிலான விலை அதிகரிப்புக்கள் அண்மைய எதிர்காலத்தில் முக்கிய கரிசனைக்குரிய விடயமாக தொடர்ந்து விளங்குகிறது. இருப்பினும், நலிவடைந்த பொருளாதாரத் தோற்றப்பாடு காரணமாக 2012இல் நுகர்வோர் விலை அழுத்தம் மெதுவடையக் கூடிய அறிகுறிகள் சிலவற்றை ப.நா.நிதியத்தின் எதிர்வுகூறல்கள் காட்டுகின்றன. இங்கு முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள்; தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் முறையே 1.6 சதவீதம் மற்றும் 6.2 சதவீத சராசரி பணவீக்கத்தைப் பதிவு செய்யும்.

**2011இல் முன்னேற்றமடைந்த பல பொருளாதாரங்களில் குறுங்கால வட்டி வீதங்கள் தொடர்ந்தும் குறைவாகக் காணப்படுகையில் தோற்றம் பெற்றுவரும் சில சந்தைப் பொருளாதாரங்கள் கொடுகடன் மற்றும் சொத்து விலைகளிலான விரைந்த வளர்ச்சி காரணமாக அதிகரித்துச் செல்லும் பணவீக்க அழுத்தங்களுக்கு மத்தியிலும் கொள்கை வீதங்களை அதிகரித்தன.** நாணய நிபந்தனைகளைத் தளர்த்துவதை நோக்கி முன்னேற்றமடைந்த சில பொருளாதாரங்களால் மேலும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், சீனா, இந்தியா மற்றும் மலேசியா போன்ற தோற்றம் பெற்றுவரும் சில சந்தைப் பொருளாதாரங்கள் கொள்கையை இறுக்கமாக்குவதனூடாக பணவீக்க அழுத்தங்களை தொடர்ந்து கட்டுப்படுத்தின.

**நாணயச் சந்தைகள் 2011இல் குறிப்பிடத்தக்க தளம்பலை கொண்டிருந்தன.** ஐ.அ.டொலருக்கெதிராக அநேகமான பிரதான நாணயங்களில் 2010இல் அவதானிக்கப்பட்ட பெறுமதி உயரும் போக்கு சில விலக்களிப்புக்களுடன் 2011இல் குறிப்பிடத்தக்களவில் மாற்றமடைந்தது. 2010இன் கணிசமானளவில் பெறுமதியில் உயர்வடைந்த இசுரேலிங் பவுண் மற்றும் யூரோ யூரோப் பிரதேசத்திலான நாட்டுக்கான படுகடன் நெருக்கடி மற்றும் பரவும் அபாயம் என்பனவற்றுக்கு மத்தியில் 2011இல் பெறுமதியில் வீழச்சியடைந்தன. இதனால் 2011 இறுதியில் ஸ்டேர்லிங் பவுண் மற்றும் யூரோ முறையே 0.73 சதவீதத்தாலும் 2.29 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்து முறையே 1.54 ஐ.அ.டொலராகவும் 1.29 ஐ.அ.டொலராகவும் விளங்கின. இதேவேளை, யப்பானிய யென் 2010இன் சார்பு ரீதியிலான மெதுவான வீதத்திலென்றாலும் 2011இல் ஐ.அ.டொலருக்கெதிராக (5 சதவீதத்தால்) தொடர்ந்து உயர்வடைந்தது. இது பெரும்பாலும் அளவுகளைத் தளர்த்தல் மற்றும் நாட்டுக்கான முறிகளை வழங்கல் உள்ளிட்ட நாட்டின் நிதியை மீளமைப்பதற்கும் பொருளாதாரத்தைத் தூண்டுவதற்குமான காத்திரமான வழிமுறைகளால் ஏற்பட்டது. பொருள்களின் விலைகள் அதிகரித்துச் செல்லும் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் பொருளாதாரம் அளவுக்கு மீறிச் செல்வதைத் தவிர்ப்பதற்கும் 2011இல் மூன்று தடவைகள் மேல் நோக்கிச் சென்ற கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்ததன் காரணமாக சீனாவின் றென்மின்பி யும் ஐ.அ.டொலருக்கெதிராக கிட்டத்தட்ட 5 சதவீதத்தால் பெறுமதியில் உயர்வடைந்தது. அத்துடன் சீனாவின் மத்திய வங்கி கொடுகடனை மற்றும் பொருளாதாரத்திலான அளவுக்கதிகமான பணத்தை இறுக்குமாக்குவதற்கும் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டை அதிகரித்தது. றென்மின்பி ஆண்டிறுதியில் ஐ.அ.டொலர் ஒன்றின் 0.16 ஆக (அதாவது ஐ.அ.டொலர் ஒன்றுக்கு 6.31 றென்மின்பி) விளங்கியது. இதேவேளை, 2011இல் பிராந்திய நாணயங்கள் சில ஐ.அ.டொலருக்கெதிராக கணிசமானளவில் தேய்வடைந்தன. உதாரணமாக இந்தியா ரூபா மற்றும் வங்காளதேச றக்கா முறையே 15 சதவீதத்தாலும் 14 சதவீதத்தாலும் தேய்வடைந்தன.

**சமநிலையற்ற உலகளாவிய மீட்சி மற்றும் மோசமடைந்து செல்லும் படுகடன் நெருக்கடி காரணமாக தனியார் மூலதனப் பாய்ச்சல்கள் பாரிய தளம்பலைக் காட்டின. ஐரோப்பிய வங்கிகளுக்கிடையேயான சந்தையில் திரவத்தன்மை இறுக்கத்தை ஏற்படுத்தியது.** அலுவல்சார் அபிவிருத்தி உதவி போன்ற அலுவல்சார் உட்பாய்ச்சல்கள் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் காணப்பட்ட கடுமையான வழிமுறைகள் மற்றும் நாட்டுக்கான படுகடன் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டன. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் பலவற்றில் காணப்பட்ட விடாப்பிடியான குறைந்த வட்டி வீத அமைப்பு தொடர்ந்து காணப்பட்டமை, மூலதனப் பாய்ச்சல்களை தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களுக்கு திசை திருப்பியிருக்கலாம். இச்சந்தர்ப்பங்களின் கீழ், தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்த வரும் பொருளாதாரங்களின் ஈர்க்கும் இயலளவை விஞ்சிய மூலதனப் பாய்ச்சல்கள் அல்லது ஊக அடிப்படையிலான பாய்ச்சல்கள் செலாவணி வீத சமச்சீரற்ற தன்மை, கொடுகடன் அதிகரிப்பு மற்றும் சொத்துவிலை பெருமளவில் அதிகரிப்பதற்கு வழியமைப்பதன் மூலம் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு கணிசமான சவால்களை ஏற்படுத்துகிறது[3]. அத்தகைய கரிசனைகள் தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் பன்னாட்டு ஒதுக்குகளின் 'சுய காப்புறுதி' இருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கு வழியமைத்தன. இவை 2011இல் ஐ.அ.டொலர் 1.1 றில்லியனாக மதிப்பிடப்பட்டு ஆண்டிறுதியில் மொத்தமாக ஐ.அ.டொலர் 7 றில்லியனுக்கும் கூடுதலாக விளங்கின. எனினும், இப்பன்னாட்டு ஒதுக்குகளின் பெரும் தொகை முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் (முக்கியமாக ஐக்கிய அமெரிக்கப் பிணையங்களில்) பொருளாதாரங்களிலுள்ள குறைந்த விளைவைக் கொண்ட திறைசேரிகளில் முதலீடு செய்யப்பட்டன.

3 பார்க்க, 2012 உலகப் பொருளாதார சூழ்நிலையும் வாய்ப்புக்களும், ஐ.நாடுகள

ஏனெனில், உலகளாவிய முதலீட்டாளர்களுக்கான 'பாதுகாப்பான சொர்க்கம்' நிலையை அவை உணர்ந்தமையால் உலகளாவிய சமநிலையற்ற தன்மைக்குப் பங்களிப்புச் செய்தன[4].

**2012 இற்கான உலகளாவிய பொருளாதார தோற்றப்பாடு கலப்பாக இருக்கையில் உலகளாவிய பொருளாதார மீட்சிக்கான கீழ் நோக்கிய இடர்நேர்வுகள் தொடர்ந்து காணப்படும்.** சமநிலையற்ற உலகளாவிய பொருளாதார விரிவாக்கம் 2012 இலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. இறைக் கொள்கைத் தூண்டல், நாணய நிபந்தனைகளை உள்ளடக்கல், முதலீடு மற்றும் தனியார் நுகர்வைப் படிப்படியாக பலப்படுத்தல் என்பவற்றால் உதவப்பட்டு ஐக்கிய அமெரிக்காவில், 2012 இற்கான வளர்ச்சி வாய்ப்புக்கள் முன்னேற்றமடைகிறது. இதேவேளை, 2011 மாச்சில் யப்பானில் இடம்பெற்ற நிலநடுக்கம் மற்றும் சுனாமியின் மோசமான விளைவுகள் முன்பு எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைவான குறுக்கீடுகளையே ஏற்படுத்தியதன் மூலம் உலக மீட்சியின் மீது அழுத்தத்தைக் குறைத்தது. எனினும், நிதியியல் துறை உறுதிப்பாடு மற்றும் இறையின் நிலைத்து நீடித்திருக்கும் தன்மை தொடர்பாக வளர்ச்சியடைந்து வரும் கரிசனைக்கு மத்தியில் யூரோ பிரதேசம் 2012இல் சிறிய மந்தத்தை அனுபவிக்குமென ப.நா.நிதியத்தின் ஆகப் பிந்திய எறிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. வெளிநாட்டுச் சூழலில் ஏற்படக்கூடிய மோசமான தன்மை மற்றும் பேரண்டப் பொருளாதார கொள்கையை இறுக்கமாக்குதல் தொடர்ந்து இடம்பெற்றமையின் காரணமாக 2012இல் தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியில் பொருளாதாரங்களுக்கான வளர்ச்சி வாய்ப்புக்கள் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களிலான வளர்ச்சி பொருத்தமான கொள்கை வழிமுறைகளூடாக இன்று நலிவான வெளிநாட்டுக் கேள்வியை எதிர்கொள்ளக் கூடியதாக இருந்தமையால் 2012இல் சார்பு ரீதியில் ஆரோக்கியமானதாக தொடர்ந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், கீழ் நோக்கிய பக்கத்தில், தற்போதைய உலகப் பொருளாதாரச் சூழல் யூரோப் பிரதேசத்திலான நெருக்கடி மோசமடைவதன் காரணமாக அச்சுறுத்தலுக்குள்ளாகலாம். வலுவற்ற வங்கித்தொழில் முறைமைகள் மற்றும் படுகடன் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையுடன் முறைமை ரீதியிலான முக்கிய பொருளாதாரங்களின் நாட்டுக்கான படுகடனிலிருந்து திடீரென முதலீட்டாளர் விலகிச் செல்வதைத் தவிர்ப்பதற்கு முதலீட்டாளர் நம்பிக்கையைப் பேணுதல் முக்கிய சவாலாகும். அத்துடன், தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் பலவற்றில் உயர் கொடுகடன் மற்றும் சொத்துக்களின் விலை வளர்ச்சி தொடர்ந்தும் காணப்படுவது கரிசனைக்குரிய விடயமாக விளங்குகையில் புவிசார் அரசியல் காரணிகள் காரணமாக உலக எண்ணெய் வழங்கலுக்கான எந்தவிதமான இடையூறும் உலக முழுவதும் செயற்பாட்டை தளர்வடையச் செய்யலாம்.

4 பார்க்க, சி.கு.10, உலகளாவிய சமநிலையற்ற தன்மை, அத்தியாயம்

## 1.4 நடுத்தர கால பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடு, சவால்கள் மற்றும் கொள்கைகள்

**2012இல் இலங்கையின் பொருளாதாரம், 2011இல் பதிவு செய்யப்பட்ட 8.3 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்க வீதத்துடன் ஒப்பிடுகையில் 7.2 சதவீதமான மெதுவான வீதத்தில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.** உள்நாட்டு மற்றும் உலகளாவிய சூழ்நிலைகளில் ஏற்படக்கூடிய அபிவிருத்திகளின் தாக்கம், கூட்டுக் கேள்வியைக் கட்டுப்படுத்துவதற்காக 2012இன் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகள் மற்றும் வளர்ச்சி மீதான வெளிநாட்டுத் துறையினை வலுப்படுத்துவது என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு 2012 இற்கான ஆரம்ப வளர்ச்சி எறிவு 8.0 சதவீதத்திலிருந்து 7.2 சதவீதத்திற்குக் கீழ் நோக்கித் திருத்தப்பட்டது. கொள்கை வட்டி வீதங்களில் காணப்பட்ட அதிகரிப்பு, உள்நாட்டு கொடுகடன் விரிவாக்கம் மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் அதிகரித்துச் செல்லும் உள்நாட்டு எரிபொருள் விலைகள் என்பன நாட்டின் பொருளாதார நடவடிக்கையினை மெதுவடையச் செய்யும் போல் தெரிகிறது. செலாவணி வீதத்தில் அண்மையில் ஏற்பட்ட தேய்வு இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றதெனினும், வர்த்தகப் பங்காளர்களின் பொருளாதாரத்தில் காணப்படும் குழப்ப நிலைமைகளிலிருந்து தோன்றுகின்ற தேய்வடைந்த வெளிநாட்டுக் கேள்வியின் தாக்கத்தினை ஏற்றுமதிப் போட்டியில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பு கட்டுப்படுத்தும் போல் தெரிகிறது. மேலும், உயர்ந்த பன்னாட்டு வலுவின், குறிப்பாக பெற்றோலியத்தின் விலைகள், உலகளாவிய பொருளாதாரத்தின் மந்தமான மீட்சி மற்றும் உலகளாவிய விடயங்களில் பலயீனமான முதலீட்டாளர் மனோபாவம் என்பன 2012ஆம் ஆண்டிற்காக எதிர்வுகூறப்பட்ட வளர்ச்சியின் கீழ் நோக்கிய திருத்தங்களுக்கான காரணங்களாக விளங்கின.

**2013இல் பொருளாதாரம் ஏறத்தாழ 8 சதவீதத்தினால் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் நடுத்தர காலப்பகுதியில் உலகளாவிய பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் மீள்எழுச்சியுடன் இது ஆண்டிற்கு 8 சதவீதத்திற்கும் கூடுதலாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** உட்கட்டமைப்பு வசதிகளின் தொடர்ச்சியான அதிகரிப்பின் உதவி இயலளவுப் பயன்பாட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு, மேம்பட்ட உற்பத்தியாக்கம் மற்றும் பன்முகப்படுத்தல் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வருமான உருவாக்க நடவடிக்கைகள் தொடர்ந்தும் விரிவடைகின்றமை என்பன நடுத்தர காலப்பகுதியில் இவ்வளர்ச்சிக்கு அடித்தளமொன்றினை வழங்கும். எதிர்பார்க்கப்பட்ட இவ்வுயர்ந்த வளர்ச்சியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முதலீடுகளை நடுத்தர காலப்பகுதியில் ஏறத்தாழ 32-33 சதவீதத்திற்கு அதிகரிக்கும்

**அட்டவணை 1.5 நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு (அ)**

| குறிகாட்டிகள் | அலகு | 2010 (ஆ) | 2011 (இ) | எறிவுகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2012 | 2013 | 2014 | 2015 |
| **உண்மைத்துறை** | | | | | | | |
| சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில் | 5,604 | 6,543 | 7,504 | 8,631 | 9,909 | 11,290 |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 8.0 | 8.3 | 7.2 | 8.0 | 8.3 | 8.5 |
| மொ.உ.உ. சுருக்கி | % | 7.3 | 7.8 | 7.0 | 6.5 | 6.0 | 5.0 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 2,400 | 2,836 | 2,939 | 3,435 | 3,969 | 4,574 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 27.6 | 29.9 | 30.5 | 31.6 | 32.0 | 32.3 |
| உள்நாட்டு சேமிப்பு | மொ.உ.உ. இன் % | 19.3 | 15.4 | 18.3 | 21.9 | 23.8 | 25.0 |
| தேசிய சேமிப்பு | மொ.உ.உ. இன் % | 25.4 | 22.1 | 26.7 | 30.2 | 31.6 | 32.5 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | | | | |
| வர்த்தக இடைவெளி | ஐ.அ.டொ. மில். | -4,825 | -9,710 | -9,183 | -9,110 | -9,433 | -9,994 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ. மில். | 8,626 | 10,559 | 11,703 | 13,030 | 14,557 | 16,302 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ. மில். | 13,451 | 20,269 | 20,885 | 22,139 | 23,990 | 26,296 |
| பணிகள் (தேறிய) | ஐ.அ.டொ. மில். | 707 | 1,099 | 1,617 | 2,028 | 2,415 | 2,788 |
| பணிகள் மற்றும் சேவைகள் நிலுவை (தேறிய) | ஐ.அ.டொ. மில். | -4,118 | -8,611 | -7,566 | -7,082 | -7,018 | -7,206 |
| தொழிலாளர் வெளிநாட்டு பண அனுப்பல்கள் | ஐ.அ.டொ. மில். | 4,116 | 5,145 | 6,481 | 7,341 | 8,079 | 8,876 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | ஐ.அ.டொ. மில். | -1,075 | -4,615 | -2,325 | -995 | -336 | 168 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ. % | -2.2 | -7.8 | -3.8 | -1.4 | -0.4 | 0.2 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ. மில். | 921 | -1,061 | 1,250 | 1,700 | 2,400 | 2,500 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் (ஈ) (உ) | ஐ.அ.டொ. மில். | 6,610 | 5,958 | 7,945 | 9,157 | 10,776 | 12,823 |
| படுகடன் பண விகிதம் (ஊ) | % | 15.9 | 12.6 | 16.1 | 15.7 | 16.8 | 16.6 |
| **இறைத்துறை** | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ. இன் % | 14.9 | 14.5 | 15.0 | 15.1 | 15.6 | 15.7 |
| மொத்த அரசிறை | மொ.உ.உ. இன் % | 14.6 | 14.3 | 14.7 | 15.0 | 15.5 | 15.6 |
| கொடைகள் | மொ.உ.உ. இன் % | 0.3 | 0.2 | 0.3 | 0.1 | 0.1 | 0.1 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ. இன் % | 22.9 | 21.4 | 21.2 | 20.9 | 20.8 | 20.7 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -2.1 | -1.1 | 0.0 | 0.5 | 1.0 | 1.0 |
| திரண்ட வரவு செலவு திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ. இன் % | -8.0 | -6.9 | -6.2 | -5.8 | -5.2 | -5.0 |
| உள்நாட்டு நிதியிடல் | மொ.உ.உ. இன் % | 3.6 | 3.5 | 3.6 | 3.6 | 3.5 | 3.6 |
| அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 81.9 | 78.5 | 77.7 | 73.2 | 69.0 | 65.4 |
| **நிதியியல் துறை (எ)** | | | | | | | |
| ஒதுக்குப் பண வளர்ச்சி | % | 18.8 | 21.9 | 15.0 | 15.0 | 15.0 | 14.0 |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) | % | 15.8 | 19.1 | 15.0 | 15.0 | 15.0 | 14.0 |
| அரசுக்கான கொடுகடனின் மாற்றம் | ரூ.பில் | -13.1 | 206.4 | 64.0 | 25.0 | 15.0 | 10.0 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் மாற்றம் | ரூ.பில் | 296.9 | 514.8 | 380.4 | 334.3 | 431.9 | 456.1 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் மாற்றம் | % | 24.9 | 34.5 | 19.0 | 14.0 | 15.9 | 14.5 |

(அ) 2012 மார்ச்சு மாத நடுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பெறுகைகள் நீங்கலாக
(உ) 2009 இல் ப.நா.நிதியத்திடம் இருந்து கிடைத்த துணை நில் ஒழுங்கு வசதிகளின் பெறுகைகள் உள்ளடங்கலாக
(ஊ) பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலான வருவாயின் சதவீதமாக மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்
(எ) ஆண்டு இறுதிப் பெறுமதிகளின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி

மூலங்கள்: நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு
தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

தேவை காணப்படுகின்றதுடன் இம்முதலீட்டின் அளவு முக்கியமாக உள்நாட்டுச் சேமிப்புக்களிலிருந்தே எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, 2011இல் ஐ.அ.டொலர் 2,836 ஆகக் காணப்படும் தலைக்குரிய வருமானம் உயர்ந்த வளர்ச்சிப் பாதையுடன் இசைந்து செல்லும் விதத்தில் அதிகரித்து 'மகிந்த சிந்தனை - எதிர்காலத்திற்கான தொலைநோக்கு' இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ஐ.அ.டொலர் 4,000 இனை 2015இல் ஒரு ஆண்டிற்கு முன்னதாகவே விஞ்சும்.

2011இல் கொடுகடன் மற்றும் நாணயக் கூட்டுக்களில் அவதானிக்கப்பட்ட உத்வேகம் மிக்க வளர்ச்சியை மிதமாக்குவதற்காக கொள்கை வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டதன் மூலம் நடுத்தர காலத்தில் பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்ட நடு ஒற்றை இலாப மட்டத்தில் காணப்படுவது உறுதிப்படுத்தப்படுகிறது. வங்கித்தொழில் துறையின் உள்நாட்டுச் சொத்துக்களிடையே, அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தேறிய கடன் வரவு செலவுத்திட்ட மட்டங்களுக்குள்ளே காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களின் மீது விதிக்கப்பட்ட வரையறைகள் மற்றும் உயர்ந்த வட்டி வீதங்கள் என்பனவற்றின் விளைவாக 2012இல் தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியில் கணிசமான குறைப்பு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களை பெறுவதன் மூலம் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் நடுத்தர காலப்பகுதியில் மேம்பாடடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இறைக் கொள்கை, பொருளாதாரம் வலுவான உயர் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும் வேளையில் தொடர்ந்தும் இறைத்திரட்சி செயற்பாட்டினையும் அடையும் விதத்தில் சூழ்நிலையினை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. வரிச் சீர்திருத்தங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம்

மேம்படும் அரசிறைத் திரட்டல்களும் மீண்டெழும் செலவினத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல்களும் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2016 அளவில் மொ.உ.உற்பத்தியின் 5 சதவீதத்திற்குக் கீழே குறைக்குமெனவும் அதன் மூலம் சேமிப்புக்கள் உருவாக்கப்பட்டு மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதம் 60 சதவீதத்திற்கு மேம்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதைய வளர்ச்சி உத்வேகத்தினை தொடர்ந்து நிலைபெறச் செய்வதற்கு உயர்மட்ட முதலீடுகள் தேவை என்பதனை அங்கீகரிக்கின்ற விதத்தில் ஆற்றல் மிக்க அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமையளித்தல் வேண்டும். தனியார் துறை முதலீடுகளுக்கு தூண்டுதலளிப்பதற்கு மேம்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் எதிர்பார்க்கப்படுவதுடன் இது திரண்ட முதலீடுகளை விரும்பிய மட்டத்திற்கு உயர்த்தும்.

**2011இல் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்கிய வெளிநாட்டுத் துறை, 2012இல் மீண்டும் வளர்ச்சியொன்று நடுத்தர காலப்பகுதியில் மேலும் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** எதிர்பார்க்கப்பட்ட உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்துடன் இசைந்து செல்லும் விதத்தில், நடுத்தர காலப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தகம் அதன் வலுவான தன்மையினைத் தொடர்ந்தும் பேணும். ஏற்றுமதிகளின் விரிவாக்கத்தினை ஊக்குவிப்பதற்காக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இறைக் கொள்கை வழிமுறைகள், உற்பத்திகள் மற்றும் சந்தைகள் ஆகிய நியதிகளில் ஏற்றுமதியாளர்களினால் முயற்சிக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான பன்முகப்படுத்தல்கள், மற்றும் உற்பத்தியாக்கத்தை மேம்படுத்துவதற்காகவும் ஏற்றுமதிகளை நவீனப்படுத்துவதற்காகவும் பின்பற்றப்பட்டு வரும் விடயங்கள் என்பனவற்றின் காரணமாக ஏற்றுமதி வளர்ச்சி தொடரும். பொறிகள் மற்றும் மூலப் பொருட்களின் இறக்குமதிகளுக்காக வழங்கப்பட்ட செஸ் மற்றும் தீர்வைச் சலுகைகளிலிருந்து கைத்தொழில் ஏற்றுமதியாளர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொள்வார்களா என எதிர்பார்க்கப்படுவதுடன் இது உள்நாட்டுக் கைத்தொழில்கள் மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பெறுவதற்கு உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மை மிக்க உற்பத்திகளை வழங்குவதற்கும் இயலச் செய்யும். ஆடைக் கைத்தொழில் அதன் சிறப்பு இயலாற்றலை அதிகரித்ததன் மூலமும் உள்நாட்டுப் பெறுமதிகூட்டல்களை உயர்த்தியதன் மூலமும் பலம் பெற்றிருப்பதுடன் இது அதன் தற்போதுள்ள மற்றும் புதிய பொறிகளின் இயலாற்றலையும் கைத்தொழில் ரீதியான ஒழுக்கநிலைமைகளையும் உயர்த்திக் கொள்ளும். இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரிக்கக்கூடுமெனினும் அது நடுத்தர காலத்தில் மெதுவான வேகத்திலேயே இடம்பெறும். செழிப்புற்று வரும் சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் துறைமுகம் வானூர்தி நிலயம் என்பனவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகள் உள்ளிட்ட போக்குவரத்து என்பனவற்றின் உதவியுடன் பணிகளிலுள்ள வர்த்தகம் மிகையினை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2012இல் கணிசமாக வளர்ச்சியடையுமென மதிப்பிடப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்கள் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் நடுத்தர காலத்தில் அதன் வளர்ச்சியில் மிதமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இறுக்கமான உள்நாட்டு தொழிலாளர் சந்தை நிலமைகளின் காரணமாக வெளிநாட்டு தொழிலுக்காக புலம்பெயர்தல் படிப்படியாக வீழ்ச்சியடையுமெனவும் இதன் விளைவாக 2013இலும் அதற்குப் பின்னரும் 2009 இலிருந்து பதிவு செய்யப்பட்ட கணிசமான உயர் வளர்ச்சி வீதங்களுக்கு மாறாக தொழிலாளர் பணவனுப்பல்கள் குறைவடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தக மீதி இறக்குமதிகளுக்குச் சாதகமானதாகக் காணப்பட்ட போதும், பணிகள் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களும் தொழிலாளர் பணவனுப்பல்களும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை படிப்படியாகக் குறைத்துவிடும். செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மேலும் தளர்த்தப்பட்டமையின் காரணமாக தனியார் துறைக்கான நேரடி மற்றும் சொத்துப்பட்டியல் முதலீடுகளின் உட்பாய்ச்சலும் அரசிற்கான நிதியியல் உட்பாய்ச்சல்களும் 2012இலும் அதற்குப் பின்னரும் குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2011 இறுதியில் அரசாங்கம் அதன் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து 2010 இறுதியில் பெற்றுக் கொண்ட ஐ.அ.டொலர் 7.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 7.3 பில்லியன் கொண்ட ஒன்று சேர்ந்த நிதித் தொகையைப் பெற்றுக் கொள்ளும் கடப்பாட்டினைக் கொண்டிருந்தது. இக்கடப்பாடுகள் முக்கியமாக உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கானவையாக இருந்ததுடன் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் காலம் 2 - 5 ஆண்டு கால வீச்சினைக் கொண்டிருந்தது. இவ்வுட்பாய்ச்சல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதும் சென்மதி நிலுவை, திரண்ட நிலுவையில் மிகையைப் பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகள் நடுத்தர காலப்பகுதியில் 5 மாத கால இறக்குமதிகளுக்குச் சமமான வசதியானதொரு மட்டத்தில் பேணப்படும்.

**2012 இலங்கை எதிர்நோக்கும் முக்கியமான சவால் யாதெனில் உலகளாவிய நிகழ்வுகளிலிருந்து தோன்றுகின்ற எண்ணற்ற இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதேயாகும்.** உலகளாவிய மீட்சியின் தெளிவான அறிகுறிகளை இன்னமும் காண முடியாமலிருக்கும் வேளையில், எண்ணெய் உற்பத்தி செய்யும் சில நாடுகளில் காணப்படும் புவிசார் அரசியல் பதட்டங்கள், மோசமான வானிலை மற்றும் காலநிலை நிலமைகள் மற்றும் தோற்றம் பெற்றுவரும் நாடுகளின் உயர்ந்த கேள்வி என்பன பன்னாட்டுச் சந்தையில் வலு மற்றும் ஏனைய பண்டங்களின் விலைகளை தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்தில் வைத்திருக்கும். கடந்த இரண்டாண்டுகளில் இலங்கை, மேம்பட்ட உள்நாட்டு நிரம்பல் நிலமை, வீரியம் மிக்க உள்நாட்டுக் கேள்வி மற்றும் முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டு அதிர்வுகளை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தது. எனினும், உலகளாவிய பொருளாதாரத்தில் விடாப்பிடியாகக் காணப்படும் இந்நிச்சயமற்ற தன்மைகளை எதிர்த்து நிற்கக்கூடிய

**சிறப்புக்குறிப்பு 4**


## 2012இல் வெளிநாட்டுத் துறையிலுள்ள சவால்களும் அதிலிருந்து முன்னோக்கிப் பயணித்தலும்

இலங்கை கடந்த ஐந்து தசாப்தங்களாக வெளிநாட்டு வர்த்தகக் கணக்கு நிலுவைகள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவைகள் இரண்டிலும் பற்றாக்குறைகளை அனுபவித்து வருகிறது[1]. இப்பற்றாக்குறைகள் 1977இல் திறந்த பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றப்பட்டதிலிருந்து கணிசமானளவில் விரிவடைந்தன. வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவைகளிலான பற்றாக்குறைகளின் இந்நிகழ்ச்சி முக்கியமாக வேளாண்மைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களையும் முக்கியமான பொருட்களை இறக்குமதி செய்பவர்களையும் கொண்டுள்ள அநேகமான அபிவிருத்தி செய்யும் பொருளாதாரங்களுக்குப் பொதுவானதாகும். இலங்கையின் பொருளாதார அமைப்பு பெரும்பாலும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அதாவது எமது ஏற்றுமதிகளைக் கொண்டிருப்பதால் 1990 களின் முற்பகுதியிலிருந்து கைத்தொழில் ஏற்றுமதிகள் பெரும்பாலும் ஆடை மற்றும் புடைவைகளால் வழிநடத்தப்பட்டு செல்வாக்குமிக்கதாக வந்தன. எனினும், ஏற்றுமதி உள்ளமைப்பிலான இவ்வமைப்பு ரீதியான நகர்வுக்கு மத்தியிலும் நுகர்வுப் பொருட்கள் மட்டுமன்றி எண்ணெய் இறக்குமதிகள் உள்ளிட்ட இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களை உள்ளடக்கும் இறக்குமதிச் செலவினத்தை விஞ்ச முடியவில்லை. இதன்படி, 1977 இலிருந்து வர்த்தகப் பற்றாக்குறை சராசரியாக மொஉஉற்பத்தியின் 11 சதவீதத்திற்கு வகைகூறுகையில் இதே காலப்பகுதியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை சராசரியாக மொ.உ.உற்பத்தியின் 5 சதவீதமளவில் காணப்பட்டது (வரைபடம் சி.கு. 4.1).

2011இல், வர்த்தக நிலுவை மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை இரண்டும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த ஏற்றுமதிகளின் கவர்ச்சிகரமான வளர்ச்சிக்கு மத்தியிலும் இறக்குமதிச் செலவினத்தின் (2010 உடன் ஒப்பிடுகையில் 51 சதவீதம்) படிப்படியான வளர்ச்சி காரணமாக வரலாற்று ரீதியான உயர் பற்றாக்குறைகளைப் பதிவு செய்தன. இறக்குமதிச் செலவினத்திலான அத்தகைய வளர்ச்சி விரைந்த உட்கட்டமைப்புச் செயற்பாடுகள் காரணமாக இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான அதிகரித்த கேள்வி மற்றும் பெற்றோலிய இறக்குமதிகளின் விலை மற்றும் அளவில் ஏற்பட்ட கூர்மையான அதிகரிப்பால் ஏற்பட்டிருக்கலாம். இருந்த போதிலும், பொருட்கள், பணிகள் மாற்றும் மாற்றல்களின் மொத்த ஏற்றுமதிகளிலான விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளிலான விரிவாக்கம் விரைந்த வேகத்தில் இடம்பெற்றமையால் 2011இல் நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறையை ஏற்படுத்தியது. இது மொ.உ.உற்பத்தியின் 7.8 சதவீதமாக விளங்கியது. நடைமுறைக் கணக்கு நிலுவை சேமிப்பு - முதலீட்டு இடைவெளியைப் பிரதிபலிப்பதுடன் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள் முதலீட்டுப் பொருட்களின் உயர் இறக்குமதிகள் போன்ற சிறந்த காரணங்களுக்காக ஏற்படின் இவை சீர்கேடானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், இவை சிறந்த எதிர்கால பொருளாதார வாய்ப்புக்களை உறுதிப்படுத்தும். எனினும், பாரிய நிதியியல் இடையூறுகளின் இடர்நேர்வைத் தவிர்க்கும் பொருட்டு நடுத்தர காலத்தில் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய மட்டத்தில் நடைமுறைக் கணக்கைப் பேணுதல் முக்கியமானதாகும் (பிளான்சாட் மற்றும் மிலிசி பெறிற்றி 2011).


இலங்கைப் பொருளாதாரம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் சராசரியாக 8 சதவீதத்துக்கும் கூடுதலான வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்யத் தயாராக இருப்பதால் குறுகிய காலத்திலாயினும் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டும் மேற்கூறிய மட்டங்களை விடக் கூடியளவில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே,

**வரைபடம் சி.கு.4.1** — வர்த்தக நிலுவை மற்றும் நடைமுறை கணக்கு நிலுவை (1977-2011)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் சி.பு.4.2** — வர்த்தக நிலுவை, பணிகள் கணக்கு மற்றும் நடைமுறை மாற்றல்கள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

முதலீட்டின் தேவைப்பட்ட மட்டத்தை வசதிப்படுத்துவதற்குத் தேவையான அளவுக்கு இறக்குமதிக் கேள்விக்கு கடன் வசதி வழங்கப்பட வேண்டும். வெளிப்படையாக, எழுச்சியடைந்து வரும் ஏற்றுமதிகளும் அதிகரித்த உற்பத்தித்திறன் மற்றும் ஏற்றுமதிகளின் பல்வகைப்படுத்தல் மூலம் ஏற்படலாம். இது இடம்பெறுவதற்குச் சில காலம் எடுக்கும்.

எனவே, வர்த்தகப் பற்றாக்குறையிலான குறைப்பில் முழுமையாகத் தங்கியிருப்பதை விட ஏனைய வழிமுறைகளூடாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையிலான குறைப்புக்கு அதிகாரமளிப்பது விரும்பத்தக்கதாகும். இம்முடிவை நோக்கி, குறிப்பாக அண்மைக் காலங்களில் நடைமுறைக் கணக்கில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி இடம்பெற்றுள்ளது. வரைபடம் சி.கு 4.2இல் காட்டப்பட்டவாறு விரிவடைந்து செல்லும் வர்த்தகப் பற்றாக்குறை பணிக் கணக்கு மற்றும் நடைமுறை மாற்றல்களிலான மிகையால் கணிசமானளவில் எதிரீடு செய்யப்பட்டது. உதாரணமாக, 2011இல் வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 9.7 பில்லியனாக காணப்பட்டிருக்கையில் தேறிய பணிகள் மற்றும் தேறிய நடைமுறை மாற்றல்களின் மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 5.7 பில்லியனாக விளங்கியது. தேறிய நடைமுறை மாற்றல்கள் (முக்கியமாக தொழிலாளர் பணவனுப்பல்கள்) ஏற்கனவே வர்த்தகப் பற்றாக்குறையை எதிரீடு செய்வதில் கணிசமான பங்களிப்பை மேற்கொள்கையில் பணிகள் கணக்கு நடைமுறைக் கணக்கு நிலுவை மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான பாரிய உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ளது. எனவே, நடுத்தர கால உபாயம் பணிகள் ஏற்றுமதிகளிலான பாரிய உள்ளார்ந்த வளத்தைப் பயன்படுத்த வழிவகுக்கும்.

**அட்டவணை சி.கு. 4.1**

**பணிகள் கணக்கிலான முக்கிய கூறுகள் (ஐ.அ.டொலர் மில்லியன்)**

| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|
| போக்குவரத்து | 751 | 838 | 1000 | 865 | 1162 | 1392 |
| பயணம், மொத்தம் | 410 | 385 | 342 | 350 | 576 | 830 |
| தொடர்பூட்டல் | 68 | 72 | 81 | 80 | 83 | 85 |
| கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம் | 98 | 175 | 230 | 245 | 265 | 355 |

குறிப்பு: மொத்த எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டமையாகும்

பணிகள் கணக்கிலான முக்கிய கூறுகள் அட்டவணை சி.கு.4.1இல் தரப்பட்டுள்ளன. முக்கிய பங்களிப்பு போக்குவரத்து வகையிலிருந்து ஏற்படுகிறது. துறைமுகப் பணிகளிலான அண்மைய அபிவிருத்திகள் ஏற்றுமதி இறக்குமதி நோக்கங்களுக்கான சுங்கத் தீர்வையின்றி பொருட்களை வைத்திருக்கும் வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கு இலங்கையை இயலச் செய்தது. ஆடைக் கைத்தொழில் உயர் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களுக்கான உள்ளார்ந்த வளமுள்ள துறையாக ஏற்றுமதி இறக்குமதி நோக்கங்களுக்காக சுங்கத் தீர்வையின்றி பொருட்களை வைத்திருக்கும் வர்த்தகத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளது. மேலும், ஊர்திகளைப் பொருத்தல், வளமாக்கி கலத்தல் மற்றும் பொதியிடல் மற்றும் தேயிலை கலக்கும் கைத்தொழில்கள் இவ்வர்த்தகத்திலிருந்து நன்மை பெறும். வினைத்திறன் மிக்க போக்குவரத்து வசதிகளுக்கான கிடைப்பனவு மற்றும் சுதந்திர வர்த்தக பிரதேசத்தினுள்ளான போதியளவு உட்கட்டமைப்பு அத்தகைய பிரதேசங்களில் அமைந்த கைத்தொழில்கள் பன்னாட்டுச் சந்தையுடன் போட்டியிட்டு இலாபத்தைப் பெறக் கூடியதாக இருக்கும். மிகப் பெரிய செயற்றிட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக மட்டும் விளங்கும் அம்பாந்தோட்டையிலுள்ள மகம்புர துறைமுகம் பன்னாட்டு வானூர்தி நிலையம் மற்றும் அதைச் சுற்றிய கைத்தொழில் பேட்டையுடனான சுதந்திரமான துறைமுகத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேசிக்கப்பட்ட திருகோணமலை கைத்தொழில் பூங்கா பாரிய கைத்தொழில் அபிவிருத்திச் செயற்பாட்டுக்கான சுதந்திரமான துறைமுகத்துக்காக இலக்கிடப்பட்ட இன்னுமொரு முன்னெடுப்பாகும்.

அண்மைய ஆண்டுகளில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருக்கையில் சுற்றுலா இலங்கைக்கான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் முக்கிய மூலமாக வருவதற்கான உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ளது. சுற்றுலாவை தூண்டும் பொருட்டு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை கடற்கரைகள், மரபுரிமைச் சொத்து, வன ஜீவராசி மற்றும் விளையாட்டு மற்றும் வீரதீர சாகசங்கள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் பலவற்றின் அடிப்படையில் சுற்றுலாவைத் தூண்டுவதற்கான வழிமுறைகளை ஏற்கனவே எடுத்துள்ளது. 2012இல் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சுமெனவும் பின்பு மேலும் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இலங்கை வெளிமூலங்களிலிருந்து பணிகளை வழங்குகின்ற முன்னணி மையங்களுள் ஒன்றாக அடையாளங் காணப்பட்டிருப்பதால் வியாபாரச் செய்முறையை வெளிமூலங்களிலிருந்து பெறுதல் மற்றும் அறிவு செயல்முறையை வெளிமூலங்களிலிருந்து பெறுதல் போன்ற தகவல் தொழில்நுட்பத்தால் இயலச் செய்த பணிகளை வழங்கும் கைத்தொழில்கள் உயர் வளர்ச்சியுடைய உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருக்கும் துறைகளாக இனங்காணப்பட்டுள்ளன. இலங்கை அதன் போட்டித்தன்மை வாய்ந்த தன்மைகளை குறைந்த செலவுடனான வழங்கல்கள், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் இயலளவுகளை வைத்திருக்கும் தேர்ச்சி பெற்ற மனித வலு, ஆதிக்கம் செலுத்தும் நிபுணத்துவம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்புக்களின் அறிவு ஆகிய நியதிகளில் பயன்படுத்திக் கொள்ளமுடியும். பொறியியல், மருந்துவம், முகாமைத்துவம், கணக்கியல் போன்ற உயர் தராதரமுடைய தொழில்சார் நிபுணர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு பொறியியல், மருந்தாக்கல், நலக் கவனிப்பு, தொலைத் தொடர்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற கைத்தொழில் பிரிவுகளை ஈர்த்துக் கொள்வதற்கு இலங்கையை இயலச் செய்யும்.

மேலே கலந்துரையாடப்பட்ட காரணிகளைக் கவனத்தில் கொள்கையில் 2012இன் உந்து சக்தி மற்றும் நடுத்தர கால உபாயமானது பணிகள் கணக்கில் மிகையை முன்னேற்றுவதன் மூலம் நடுத்தர காலத்தில் நீடித்து நிலைத்திருக்கும் மட்டத்துக்கு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு இயலச் செய்யும்.

உசாத்துணை:

Blanchard , O. and Milesi-Ferretti, G.M. (2011): (Why) Should Current Account Balances Be Reduced? IMF Staff Discussion Note, SDN/11/03

இலங்கையின் ஆற்றல் 2012இலும் கடுமையான பரீட்சிப்பிற்கு உள்ளாகும் போல் தோன்றுவதுடன் உருவாகக் கூடிய குழப்ப நிலைமைகளை காத்திரமான முறையில் கட்டுப்படுத்துவதற்கு உற்பத்தியாக்கம் மற்றும் உற்பத்தித் தரத்தில் மேலும் முன்னேற்றங்கள், ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல், புதுப்பிக்கத்தக்க வலுப் பயன்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் வலுப் பாதுகாப்பு, உள்நாட்டு உணவு நிரம்பலை மேலும் முன்னேற்றுதல் என்பனவற்றுடன் கூடிய காத்திரமான கேள்வி முக்கியத்துவக் கொள்கைகள் தேவைப்படுகின்றன.

**குறிப்பாக, பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறையில் தோற்றம் பெற்றுவரும் சமநிலையற்ற தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கு 2012இன் ஆரம்பத்தில் மத்திய வங்கியும் அரசாங்கமும் திட்டவட்டமான தீர்மானங்களை மேற்கொண்டன.** உள்நாட்டு வலு விலைகளில் செய்யப்படுகின்ற சீராக்கங்கள் வெளிநாட்டுத் துறையின் சமநிலையற்ற தன்மைகளை சீர்செய்வதற்கும் அரச கூட்டுத்தாபனங்களின் ஐந்தொகையினை மேம்படுத்துவதற்கும் உதவுகின்ற போதும், அது உள்நாட்டு விலை மட்டங்களிலும் உள்நாட்டுக் கைத்தொழில்கள் மற்றும் பணிகளிலும் ஒரே தடவையில் அதிகரிப்புக்களை ஏற்படுத்தக்கூடும். செலாவணி வீதத்தின் சுதந்திரமான அசைவுகள், இறக்குமதிகளின் கட்டுப்பாடு மற்றும் பொருட்கள் மற்றும் பணிகள் இரண்டினதும் ஏற்றுமதிகளைத் தூண்டுவதன் மூலம் வர்த்தகப் பற்றாக்குறையிலுள்ள சமநிலையற்ற தன்மைகளைக் கட்டுப்படுத்த உதவும். வர்த்தக நிலுவை உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வையில் செய்யப்பட்ட அதிகரிப்பிலிருந்தும் நன்மைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளக்கூடும். வர்த்தக வங்கிகளின் உயர்ந்த வட்டி வீதங்கள் மற்றும் குறைந்தளவு

கொடுகடன் பகிர்ந்தளிப்பு என்பன வர்த்தகத்துடன் தொடர்பான கொடுகடனையும் எதிர்கால பணவீக்கத்தினையும் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்குமெனினும் அது பொருளாதார வளர்ச்சியின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். எனினும், இச்சீராக்கங்கள் உறுதியான வளர்ச்சிக்கு அவசியமான பேரண்டப் பொருளாதார சமநிலை பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு இன்றியமையாதனவாக இருந்ததுடன் ஆரம்ப நடுத்தர கால பேரண்டப் பொருளாதார இலக்குகளிலிருந்து தோன்றக்கூடிய ஏதேனும் விலகல்கள் நிரந்தரமற்றனவாகவும் இருக்கக்கூடும்.

**உள்நாட்டு வழங்கல் நிலைமைகளின் முன்னேற்றங்களில் மேலும் உறுதிப்பாட்டினை ஏற்படுத்துவதற்கும், அனைத்து மாகாணங்களிலும் பெருமளவு பங்களிப்புடன் வேளாண்மை உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் போதுமான இலாபம் அடைவதனை உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும்.** குறிப்பாக, அரிசி, உடன் காய்கறிகள் போன்ற வேளாண்மை உற்பத்திகளைப் பொறுத்தவரை வேளாண்மையாளர்கள் அபரிமித அறுவடை காணப்படும் காலங்களில் விலைகளின் மீது ஏற்படும் கீழ் நோக்கிய அழுத்தங்களினால் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதுடன் சில சமயம் உற்பத்திச் செலவிற்கும் குறைவான விலைகளைக் கூட பெற்றிருக்கின்றனர். குடித்தொகையின் கணிசமான பிரிவினரின் முக்கிய வாழ்வாதாரமாக இன்னமும் வேளாண்மையே இருந்துவருவதனால், உள்நாட்டு வேளாண்மையாளர்களின் வருமானத்தினை பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாக இருப்பதுடன் இதன் மூலம் வேளாண்மை உற்பத்திகளின் உள்நாட்டு நிரம்பல் தொடர்ந்தும் இடம்பெறுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். வேளாண்மைச் சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தக் கூடிய சில கொள்கை வழிமுறைகளாக, உற்பத்தியை பன்முகப்படுத்துவதற்கு வேளாண்மையாளர்களுக்கு கல்வியறிவூட்டுதல், உணவு பதனிடல் மற்றும் பொதியிடல் தொடர்பான ஆராய்ச்சியை ஊக்குவித்தல், அரிசி, பழவர்க்கங்கள் மற்றும் காய்கறிகளின் மிகையான இருப்புக்களை ஏற்றுமதி செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல், உள்நாட்டு முன்னோக்கிய மற்றும் எதிர்காலச் சந்தைகளை வலுப்படுத்தல், தனியார் மற்றும் அரச துறை மொத்த விற்பனையாளர்களின் களஞ்சிய வசதிகளை மேம்படுத்தல் மற்றும் வேளாண்மைச் சமூகம், அரசாங்கம் மற்றும் தனியார் துறையினருக்கிடையேயான பங்குடமையினை ஊக்குவித்தல் என்பன காணப்படுகின்றன.

**உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளுக்குப் பொருட்களை வழங்கும் முக்கிய தொழில் துறையான மீன்பிடித் துறையின் உள்ளார்ந்த வளத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு பொருத்தமான கொள்கை வழிமுறைகள் தேவைப்படுகின்றன.** காலநிலைக் காரணங்களுக்குப் புறம்பாக, பல நாள் மீன்பிடிப் படகுத் தொகுதிகளின் வசதிகள் போதாமல் இருப்பது காரணமாக ஆழ்கடல் மூலவளங்களைப் பெற்றுக்கொள்வதில் இடர்ப்பாடுகள் காணப்படுவதுடன் இது கடல் மீன் உற்பத்திக்கான உள்ளார்ந்த வளத்திலும் பார்க்கக் குறைந்தளவு மீன்பிடிக்கப்படுவதற்கும் பொறுப்பாகக் காணப்படுகின்றது. இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயம் இன்னமும் பெருமளவிற்குப் பயன்படுத்தப்படாமலிருப்பதுடன், கடந்த பல ஆண்டுகளாக பாரிய ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் ஒரு பயணத்தின் போது பிடிக்கும் மீன்களின் அளவிலும் வீழ்ச்சியடைந்து செல்லும்போக்கு காணப்படுவதனை தேசிய நீரியல் மூலவளங்கள் முகவராண்மை அவதானித்திருக்கின்றது. ஆகவே, ஏற்கனவே இருக்கின்ற படகுகளை நவீனமயப்படுத்துவதிலும் அத்துடன்/ அல்லது அவற்றிற்குப் பதிலாக புதிய படகுகளைச் சேர்ப்பதும், மீன் வளங்களைக் கண்டறிதல், செய்மதி மூலமான கடல் வழிகாட்டிகள், தனியொரு பக்கப் பிரிவு வானொலிகள், நீண்ட மீன்பிடிக் கலம்கள் போன்ற வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட கடல் நீர் முறைமைகள் மற்றும் குளிர்விக்கப்பட்ட கடல்நீர் முறைமைகள் போன்ற வசதிகளைப் பொருத்துவதும் தவிர்க்க முடியாதவையாகும். இறங்கு துறைகளுக்கு அண்மையில் புதிய ஐஸ்கட்டி தொழிற்சாலை, மீன் தகரத்திலடைக்கும் வசதிகள், புதிய தொடர்ச்சியான குளிரூட்டும் முறைமைகள் மற்றும் பல்வகை துறைமுக வசதிகள் போன்ற கரையோர உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் அபிவிருத்தி செய்வது முன்னுரிமைக்குரியதாகவுள்ளது. இது உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தும். அலங்கார மீன் வளர்ப்பு, இரு கோடுடைய சிப்பி இன வகையின் வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு, சிப்பி வளர்ப்பு, கடல் மீன்களை கொழுக்கச் செய்யும் கடல் அடைப்பு போன்ற வர்த்தக ரீதியான நீரியல் வளர்ப்பினை விரிவாக்குவது சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளின் கேள்வியைப் பூர்த்தி செய்ய உதவும்.

**பாரம்பரியமான முன்னணி வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளராக விளங்கும் இலங்கைத் தேயிலைக் கைத்தொழில் உலகளாவிய நிகழ்வுகளினாலும் அதேபோன்று உள்நாட்டுப் பிரச்சனைகளினாலும் அநேக சவால்களை எதிர்நோக்கியது.** இலங்கையின் தேயிலைத் துறையிலிருந்து சராசரி உற்பத்தியாக்கம் போட்டி நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைவாகக் காணப்படுகின்றமைக்கு குறைவடைந்த மண்ணின் வளம், வயது முதிர்ந்த தேயிலைச் செடிகள், மீள் நடுகையில் காணப்படும் காலதாமதம் என்பன காரணங்களாக அமைந்தன. பிராந்திய பெருந்தோட்டக் கட்பனிகளின் கீழுள்ள நிலப் பரப்புகளில் நாற்று நடப்பட்ட தேயிலைச் செடிகள் ஏறத்தாழ 90 சதவீதம் 60 ஆண்டுகளுக்கும் மேலான முதிர்ச்சியைக் கொண்டனவாக இருக்கின்ற வேளையில் சிறு உடமையாளரின் பதியம் வைக்கப்பட்ட தேயிலைச் செடிகளில் 53 சதவீதத்திற்கும் கூடுதலானவை 20 தொடக்கம் 40 ஆண்டுகள் பழமை வாய்ந்தவையாக இருப்பதனால் அவற்றை முழுமையாகப் பிடுங்கிவிட்டு மீள் நடுகை செய்வதனூடாக மண்ணினை மீண்டும் பண்படுத்தினாலொழிய, வளமாக்கி பாவனையை மட்டும் பயன்படுத்தி விளைச்சலை அதிகரிக்க முடியாது. தற்போதைய விலைமட்டங்களில் எக்டேயரொன்றிற்கான மீள் நடுகைச் செலவு

ஏறத்தாழ ரூ.2.0 மில்லியனாக விளங்குகிறது. புதிய தேயிலைச் செடியிலிருந்து இலாபங்களைப் பெற்றுக்கொள்ள குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் எடுக்குமென்பதனால் இது தவிர்க்கப்பட்டு வருகிறது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான திருத்தப்பட்ட கூலிப் பொறி, உயர்ந்த வலு விலைகள் மற்றும் பொதி செய்யும் பொருட்களுக்கான அதிகரித்த செலவு என்பனவற்றின் காரணமாக அதிகரித்த உற்பத்திச் செலவு உற்பத்தியாளர்களினால் எதிர்நோக்கப்படும் இன்னொரு பிரச்சனையாகும். உலகளாவிய ரீதியில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மைகள், குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்ட புவிசார் அரசியல் பதற்றம், தேயிலை தொழில் பாதிப்புக்களை மேலும் கூட்டியது. எனவே, புதிய சந்தைகளை கண்டறிவதும், ஆராய்ச்சிகளுக்கான முதலீடுகளை உயர்த்துவதும், தெரிந்தெடுக்கப்பட்ட உள்ளார்ந்த வளம் மிக்க சந்தைகளில் சுத்தமான சிலோன் தேயிலையை நுகரச் செய்வதற்கான விளம்பரங்களை மேற்கொள்ள பாரியளவிலான நிகழ்ச்சி நிரல்களை அரச தனியார் பங்குடமைகளினூடாக மேற்கொள்ளுதலும் அவசியமாகவுள்ளன. நிரம்பல் பக்க பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்ட மீளப் பயிரிடல், கழிவுத் தேயிலையின் அளவைக் குறைக்கும் பொருட்டு தயாரிப்புச் செயன்முறைகளை மேம்படுத்துதல், பெருந்தோட்டத் துறையின் எந்தவொரு கூலிச் சீர்திருத்தங்களையும் உற்பத்தியாக்கத்துடன் இணைத்தல் என்பன இன்றியமையாதனவாகும்.

**பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்தினை வலுப்படுத்தும் பொருட்டு அதற்குத் தேவையான மனித மூலதனத் தளத்தினை உருவாக்குவதற்கு இலங்கையின் கல்வி முறையினை கணிசமானளவிற்கு நவீனமயப்படுத்தும் அவசியம் நன்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.** கல்விப் பணிகள் தொழிலாளர் சந்தையின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டிருந்தால் மட்டுமே கல்வி முறைமையின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியம். எனவே, பரீட்சையை மையப்படுத்திய பாடங்களை அடிப்படையாகவுடைய பாடவிதான முறையிலிருந்து மாறும் விதத்தில் கல்வி முறைமைகளை மீள அணிப்படுத்துவது இன்றியமையாததாகும். வெறும் பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்திலிருந்து ஒட்டுமொத்த திறமையை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்திற்கு மாறுவது வாழ்க்கைத் தேர்ச்சிக்கான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சுதந்திரமான சிந்தனைகளை ஊக்குவிப்பதற்கும் உதவும். பல்கலைக்கழக முறைமையின் சீர்திருத்தங்கள் பட்டதாரிகளின் தேர்ச்சிக்கும் தொழிற்சந்தையின் தேவைப்பாட்டிற்குமிடையிலான பொருத்தப்பாட்டின்மையினை ஒழிக்கவும் இது இளைஞர் தொழில் வாய்ப்பின்மையினையும் கீழ் உழைப்பாளர்களையும் குறைக்கவும் உதவும். உயர் கல்வியில் அதிகரித்த அரச முதலீடு மட்டும் அறிவின் மையமாக இலங்கையை மாற்றுவதற்கு போதுமானதாக இல்லாதவிடத்து உயர் கல்வியில் அனைத்து விடயங்களையும் முழுமையாகக் கொண்ட தனியார் துறை முதலீடுகளை முக்கிய பங்காற்ற அனுமதிப்பது ஒரு திருப்பு முனையாக அமையும். அதிகரித்த வெப்தள பிரசன்னத்தினூடாக இலங்கைப் பல்கலைக்கழகங்களை பன்னாட்டு மயப்படுத்துவதற்காக உயர் கல்வி அதிகாரிகளினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி, மாணவர் மற்றும் அலுவலர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக புகழ் பெற்ற பன்னாட்டு பல்கலைக்கழகங்களுடனான ஒத்துழைப்பு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்காக பட்டப்பின் படிப்பு வசதிகளை வழங்கத் தொடங்கியமை என்பன வரவேற்கத்தக்க விடயங்களாகக் காணப்பட்டன. அதேவேளை, இலங்கையில் தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களின் வலையமைப்பு இளைஞர் வேலையின்மையின் மீதான அழுத்தத்தினை ஓரளவிற்குக் குறைத்ததெனினும், பல்கலைக்கழகக் கல்வி மறுக்கப்பட்ட மாணவர்கள் பள்ளிக்கூடங்களிலிருந்து வேலைக்கு மாறிச் செல்வதற்கு வசதியளிப்பதற்காக இவற்றை மிகுந்த உத்வேகத்துடன் விரிவாக்குவது அவசியமாகும். தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சிகள் மேலதிக கல்வி ஆண்டிற்குமாக ஒட்டுமொத்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுமென்பதனால் இவ்வாய்ப்புக்களை மேலும் விரிவாக்குவதனை ஊக்குவித்தல் வேண்டும்.

**இலங்கையில், தற்போதுள்ள அரச பயணிகள் போக்குவரத்து முறைமை போக்குவரத்திற்காக அதிகரித்துச் செல்லும் கேள்வியை அளவு மற்றும் தரம் ஆகிய இரண்டு நியதிகளிலும் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லாமையால் பொதுமக்கள் செலவுமிக்கதும் வினைத்திறனற்றதுமான தனியார் போக்குவரத்தினை நாட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.** நாட்டின் போக்குவரத்து விலை அமைப்பானது பொருளாதார வளர்ச்சிக்கும், நகரங்களில் வளர்ந்து வரும் குடித்தொகைக்கும், நகரம், நகர்ப்புறம் மற்றும் கிராமியத் துறைகளுக்கிடையிலான அதிகரித்த நகர்வுகளுக்கும் உதவுவதாக இருத்தல் வேண்டும். வினைத்திறனற்ற அரச பயணிகள் போக்குவரத்து முறைமையானது ஊர்தியொன்றிற்கு குறைந்த ஒரு சில பயணிகளுடன் வீதிப் போக்குவரத்திலீடுபடும் தனிப்பட்ட ஊர்திகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பினை ஏற்படுத்தி பாரிய போக்குவரத்து நெரிசலுக்கு வழிவகுக்கிறது. குடியிருப்பாளர்களுக்கும் பொருளாதாரத்திற்கும் அதிகரித்த எரிபொருள் செலவினை ஏற்படுத்துவதுடன் உற்பத்தியாக்கமற்ற மணித்தியாலங்களிலும் கணிசமான இழப்புக்களை ஏற்படுத்துகிறது. வீதிகளின் நிருமாணம், பேரூந்துகள் புதிதாகச் சேர்க்கப்பட்டமை போன்ற போக்குவரத்து உட்கட்டமைப்பு அபிவிருத்திகளில் அரசாங்கம் பாரிய முதலீடுகளை மேற்கொண்டுள்ள போதும், சிறந்த தரமானதும் நம்பகமானதுமான பொதுமக்கள் போக்குவரத்து குறைவாக உள்ளமையின் காரணமாக போக்குவரத்து நெரிசல் தொடர்ந்தும் காணப்படுகிறது. எனவே, ஏற்கனவேயுள்ள வீதி மற்றும் புகைவண்டிப் போக்குவரத்து முறைமைகளை குறிப்பாக நகரப் பகுதிகளில் மேம்படுத்துவதற்குப் பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்வது முக்கியமானதாகும். வர்த்தகப் பிரதேசங்களையும் சுற்று வட்டாரங்களிலுள்ள நகரங்களையும் ஆரம்பத்தில் குறுகிய தூரத்திற்கேனும் இணைக்கின்ற உயர்ந்த இயலளவைக் கொண்ட ஒற்றை தனிப் புகைவண்டி முறையொன்றினை உருவாக்குவது

போன்ற வழிமுறைகள் நகரப் பகுதிகளின் பாரிய நெரிசல்களைக் குறைப்பதற்கு ஆற்றல் வாய்ந்ததொரு தீர்வாக இருக்கும். ஈருருளிகளுக்காக தெளிவான எல்லை வகுக்கப்பட்ட பாதையினை உருவாக்குவது பொதுமக்களின் போக்குவரத்திற்காக தற்பொழுது புதுப்பிக்கப்பட்டு வருகின்ற கால்வாய் வலையமைப்பினை காத்திரமான முறையில் மேம்படுத்துவது என்பன போக்குவரத்து நெரிசல்களை ஓரளவிற்குக் குறைக்கும்.

**அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதியியல் ஆற்றலைப் பேணுவதற்குப் பொருத்தமான விலையிடல் பொறிமுறைகள் தேவைப்படுகின்றன.** அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளைத் சீர்திருத்துவதற்காகவும் பொருளாதார ரீதியில் சாத்தியமான செலவினைப் பிரதிபலிக்கக் கூடிய விலையிடல் அமைப்பொன்றினை அபிவிருத்தி செய்வதனூடாக முதலீடுகள் மீதான அவற்றின் வருவாயினை உயர்த்திக் கொள்ளவும், புத்தம் புதிய அரச, தனியார் பங்குடமை உபாயங்களைக் கண்டறிய அவர்களைத் தூண்டுவதற்காகவும் அபிவிருத்திச் செயன்முறைகளுக்கான ஊக்கியாகத் தொழிற்படுவதற்கு தனியார் முதலீடுகளைக் கவர்வதற்காகவும் 2011இல் அரசாங்கத்தினால் கொள்கை வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வழிமுறைகளினால் அரச தொழில்முயற்சிகளினால் உறப்பட்ட தொழிற்பாட்டு இழப்புக்களை பூர்த்தி செய்வதற்கு வங்கித்தொழில் துறையிலும் அரசின் வரவு செலவுத்திட்டத்திலும் தொடர்ந்தும் தங்கியிருந்த அத்தொழில்முயற்சிகளின் நிதியியல் நிலைமைகளை முன்னேற்ற முடியும். குறிப்பாக, அரச தொழில்முயற்சிகளில் பின்பற்றப்படுகின்ற பொருத்தமான நெகிழத்தக்க விலையிடல் கொள்கைகள் அவர்களது விலைகள் உற்பத்திகளின் உண்மையான செலவினையும் பன்னாட்டு விலை அசைவுகளையும் உறுதிப்படுத்துவனவாக இருக்க வேண்டியதுடன் பொருளாதார நடவடிக்கைகளை மோசமாகப் பாதிக்கக் கூடிய பாரிய சீராக்கங்களுக்கான தேவையினைத் தவிர்ப்பதற்கு உதவியதாகவும் இருத்தல் வேண்டும்.

**உயர்வடைந்து செல்லும் பன்னாட்டு பெற்றோலிய விலைகள், மட்டுப்படுத்தப்பட்ட குறைந்த செலவு உருவாக்க இயலளவு, பொருளாதாரத்தின் வளர்ச்சியடைந்து செல்லும் வலுத் தேவைப்பாடு என்பனவற்றைக் கருத்தில் கொள்கையில் வலுப் பாதுகாப்பினைப் பேணுவதற்கு முயற்சிகளை எடுப்பது அத்தியாவசியமானதாகவுள்ளது.** வலுப் பாதுகாப்பினை ஊக்குவிப்பதற்கு அவ்வப்போது வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்ட போதும் வலு விலையிடல் கொள்கை, வரிக் கொள்கை மற்றும் பொதுமக்கள் போக்குவரத்துக் கொள்கை என்பனவற்றைப் பண்பாகக் கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட வலுப் பாதுகாப்புக் கொள்கையினை அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகும். அதேநேரம், உயர்ந்த பன்னாட்டு பெற்றோலிய விலைகளினால் பொருளாதாரம் பாதிக்கப்படுவதனைக் குறைப்பதற்கு குறைந்த செலவினைக் கொண்ட புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை மேம்படுத்துவதும் ஊக்குவிப்பதும் அவசியமாகும்.

2011இல் இலங்கை, இப்பிராந்தியத்திலுள்ள மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் **ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் கூடுதலான வெளிநாட்டு நேரடி முதலீட்டுகளின் உட்பாய்ச்சலை கவரக் கூடியதாக இருந்த வேளையில், வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் உள்ளார்ந்த வளத்தின் மட்டத்திலும் பார்க்கக் குறைவாக இருந்ததுடன் புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான முக்கியமானதொரு நாடு என்பதனையும் இன்னமும் நிறுவ வேண்டியிருக்கிறது.** 2012இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 2 பில்லியன்களை அடைந்து அநேக முக்கிய செயற்றிட்டங்களுக்கு நிதியிடும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், இனிவரும் ஆண்டுகளில் கூடுதலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்து கொள்வதற்கு வினைத்திறன் மிக்க வியாபார வசதியளிப்புக்கள், முக்கியமான உள்ளார்ந்த வளம் மிக்க சந்தைகளில் முதலீட்டு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் உள்ளார்ந்த முதலீட்டு வாய்ப்புக்களைப் பற்றிய தகவல்களின் சரியான கிடைப்பனவு என்பனவற்றினூடாக மேற்கொள்வதற்கு பெருமளவு முயற்சிகள் தேவைப்படுகின்றன. ஒப்புதலளிக்கப்பட்ட செயன்முறையின் அனைத்துச் சட்டங்களிலும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான நிருவாக ஏற்பாட்டு உதவிகள், செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியிலும் அதேபோன்று நடைமுறைப்படுத்தல் பணிகளுக்கு பின்னைய காலப்பகுதி என்பனவற்றை உள்ளடக்கிய முதலீட்டின் அனைத்துக் கட்டங்களிலும் வியாபார வசதிப்படுத்தல் குறிப்பிடத்தக்க கொள்கை முன்னுரிமையொன்றாகப் பரிசீலிக்கப்படுதல் வேண்டும். முதலீடுகளுக்காக புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்கம், நானோ தொழில்நுட்பம், கப்பல் மற்றும் படகு கட்டுதல், சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளிமூலங்களுக்குப் பணிகளை வழங்கும் துறை, கல்வியிலுள்ள பணிகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், நலம் மற்றும் நிதியியல் பணிகள் போன்ற உள்ளார்ந்த வளம் கொண்ட வளர்ந்து வரும் துறைகளின் இற்றைப்படுத்தலை தொடர்ச்சியாக மேற்கொள்வது புதிய முதலீடுகளைக் கவர்வதற்கு இன்றியமையாதனவாகும். அத்தகைய வழிமுறைகள் "வியாபாரம் செய்தல்" சூழலை மேம்படுத்தல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஒப்புதல்களின் நிருவாகத்தில் "ஒரு கூரையின் கீழான அலகு" ஒன்றினை உருவாக்குதல் என்பனவற்றை உள்ளடக்கிய அரசாங்கத்தின் தற்போதைய முயற்சிகளுடன் சேர்ந்து வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களை மேலும் கவர்வதில் நன்மையளிப்பதாக இருக்கும்.

**நடுத்தரத்திலிருந்து நீண்ட காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாட்டுத் துறை குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுவதனால், வெளிநாட்டுச் செலாவணியினை உழைக்கும் கைத்தொழில்களுக்கான இயலுமைப்படுத்தும் சூழலை உருவாக்குவதன் முக்கிய கவனத்தில் கொண்ட உபாயங்களை பின்பற்றுவது இன்றியமையாததாகும்.** இலங்கை இன்னமும் ஆரம்ப உற்பத்திகள் அல்லது குறைந்தளவில் பெறுமதிகூட்டப்பட்ட கைத்தொழில்

உற்பத்திகளையே ஏற்றுமதி செய்து வருவதுடன் இதனை தொழில்நுட்ப ரீதியில் நவீனத்துவம் மிக்க கைத்தொழில்களுக்கு இலக்கிடப்பட்ட தேசிய கைத்தொழில் உபாயங்களின் மூலம் கூடியளவு மூலவளங்களை வழிப்படுத்துவதனூடாக அதிகரித்த ஏற்றுமதி நவீனத்துவத்தினூடாக இதனைக் கட்டுப்படுத்தும் அவசியம் காணப்படுகின்றது. ஏற்றுமதிகளுக்கான பெறுமதிகூட்டல்களுக்கு சந்தைப் பன்முகப்படுத்தலினூடாக உதவி வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதற்கான சில மேலதிக உபாயங்கள் உயர் வருவாய் தரும் உற்பத்திகளினூடாக நிறுவப்பட்ட சந்தைக்குள் அதிகரித்த அளவில் நுழைதல், சந்தைப் பங்குகளை அதிகரிப்பதற்கு இச்சந்தைகளுக்குள் காணப்படும் பயன்படுத்தப்படாத வாய்ப்புக்களைப் பயன்படுத்தல், முன்னுரிமை மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளிலுள்ள வர்த்தக வாய்ப்புக்களை அடையாளம் காணவும் பயன்படுத்தவும் உள்நாட்டு தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் உற்பத்தி மற்றும் செயன்முறைப் புதுமைகளுக்கு உதவும் விதத்தில் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் முதலீடு செய்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. கவனத்தினை வேண்டி நிற்கும் இன்னொரு துறை இறக்குமதி, பதனிட்டு மீண்டும் ஏற்றுமதி செய்தல், கப்பல் மாற்றி ஏற்றல். ஆரம்பம் முதல் முடிவு வரையான பணிகளை வழங்குதல் மற்றும் இலங்கையில் பிராந்திய தொழிற்பாட்டு நிலையங்களை நிறுவுவதற்கு முன்னணி வாங்குநர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல் போன்றவற்றுடன் தொடர்பான தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களுக்காக வரி செலுத்தாது துறைமுகங்களில் பொருட்களை களஞ்சியப்படுத்தும் வரித் தரத்தினை ஊக்குவிப்பதற்காக சுதந்திர வர்த்தக பிரதேசமொன்றினை நிறுவுவதற்கான எல்லைகளை விரைந்து நிர்ணயம் செய்வதாகும்.

**இலங்கையின் சுற்றுலாத் துறை, அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகளினாலும் விரைந்து வளர்ச்சி கண்டு வரும் சுற்றுலா உட்கட்டமைப்புகளினாலும் முக்கியமான கட்டமொன்றில் காணப்படுகின்றது.** 2011இல் சுற்றுலாத் தொழில் துறை, வருகைகள் மற்றும் வருவாய்கள் ஆகிய நியதிகளில் கணிசமாக விரிவடைந்துள்ளதுடன் முக்கியமான பன்னாட்டு சுற்றுலா விடுதிகள் தொடர் சங்கிலிகளாக இலங்கையில் நிறுவப்பட்டு வருகின்ற வேளையில் பிரபல்யம் மிக்க பல வானூர்தி நிறுவனங்கள் அவற்றின் பறப்புக்கான நாடுகளிலொன்றாக இலங்கையையும் சேர்த்திருக்கின்றன. நடுத்தர காலப்பகுதியில், இத்தொழில் துறையானது 2016 அளவில் 2.5 மில்லியனுக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதுடன் வசதி படைத்த உயர்தர சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குவதன் மூலம் 2016 அளவில் சுற்றுலாப் பயணிகளின் ஓரிரவிற்கான செலவிடலை ஐ.அ.டொலர் 150 இற்கு அதிகரிப்பதற்கும் இலக்கிடப்பட்டது. தொழில் துறையில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியை நிலை நிறுத்திக் கொள்வதற்கும் பாரம்பரியம், விழாக்கள், இயற்கைக் காட்சிகள், தனிச் சிறப்பு சாரம்சங்கள், கிளிர்ச்சியூட்டல்கள், ஆனந்தம், பண்டைக்கால நகரங்கள் மற்றும் வன விலங்குகள் என்ற எட்டுத் தனிச் சிறப்பு வாய்ந்த தொனிப் பொருட்களின் கீழ் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கு வசதிகளை வழங்குவதற்கும் இத்தொழில் துறையானது தொடர்ந்தும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை, முக்கியமாக ஏற்கனவேயுள்ள பன்னாட்டு வானூர்தியின் போக்குவரத்தினை அதிகரிப்பதற்கு உதவுதல், புதிதாகக் கட்டப்பட்டு வரும் மத்தள பன்னாட்டு வானூர்தி நிலையத்திற்கு போக்குவரத்துக்களைத் திருப்பி விடுதல் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களிடையே மேம்பட்ட போக்குவரத்துக்களை இணைத்தல் என்பனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும் இத்தொழில் துறைக்கு அறைகளின் இயலளவை விரைந்து விரிவாக்குவதும் தற்போதுள்ள வசதிகளைத் தரமுயர்த்துவதும் விருந்தோம்பல் துறையில் தொழில்சார் நிபுணத்துவப் பயிற்சிகளை வழங்குவதும் தேவையான விடயங்களாகவுள்ளன. உள்நாட்டுக் கேள்வியின் மீது சுற்றுலாவின் தாக்கமும் அதற்காக நுகர்வோர் செலுத்தும் விலைகளும் அதேபோன்று இத்தொழில் சுற்றுலாச் சூழலின் மீது கொண்டிருக்கின்ற தாக்கங்களும் அதிகாரிகளினால் பரிசீலனைக்குக் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகவுள்ளன.

**இறைத் துறையின் முக்கியமான சவால், உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் விதத்தில் அவசியமான இறை வசதிகளை உருவாக்குவதன் நிமித்தம் அரசிறை வருமானம் மற்றும் செலவினங்களை தொடர்ந்தும் சீரமைப்பதாகவே இருக்கும்.** அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய வரிச் சீர்திருத்தங்களின் முழு உள்ளார்ந்த வளமும் நடுத்தர காலப்பகுதியிலேயே பெற்றுக் கொள்ளப்பட முடியும் போல் தெரிகிறது. தாழ்ந்த வரி வீதங்கள், இலகுபடுத்தப்பட்ட வரி முறைமை, அதேபோன்று வரித் தளத்தினை விரிவுபடுத்தல் என்பன அரசிறைத் திரட்டலை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரிச் சீர்திருத்தங்கள் வரி செலுத்தப் பொறுப்படைய அனைவரையும் அவ்வலையமைப்பின் கீழ் கொண்டு வரும் வழிமுறைகளின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டிய அதேவேளையில் வரி செலுத்துபவருடன் சிநேகபூர்வ சூழலொன்றை உருவாக்கும் விதத்தில் வரி நடைமுறைகள் ஒழுங்குமுறைப்படுத்தப்படுதலும் வேண்டும். இது பாரிய வரி இணங்குவிப்புக்களை ஊக்குவிக்கும். எனினும், வரிச் சீர்திருத்தங்கள் செலவினை சிக்கனப்படுத்தும் வழிமுறைகளினூடாகவும் ஆதரவளிக்கப்படுதல் வேண்டும். மீண்டெழும் செலவினங்களைக் குறைப்பதற்கு உதவுதொகைகளை மேம்பட்ட முறையில் இலக்கிடுவதும் செலவினைப் பிரதிபலிக்கும் விதத்தில் விலையிடல்களை மேற்கொள்வதும் மீண்டெழும் செலவினத்தினைக் குறைப்பதற்கு தீவிரமாகப் பின்பற்றப்பட வேண்டிய விடயங்களாகவுள்ளன. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் உயர் வளர்ச்சிப் பொருளாதாரத்திற்கு வலுவளிப்பதற்கு இன்றியமைந்த உட்கட்டமைப்பிற்கான முதலீடுகளுக்குத் தேவையான மூலவளங்களை கூடுதலாகப் பெற்றுக் கொள்ளமுடியும். மேலும் எஞ்சியுள்ள கடப்பாடான இறைத்திரட்சி செயற்பாட்டினை மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதத்தின் உறுதியானதொரு மட்டத்தில் பேணுவதும் இன்றியமையாததாகும்.

**அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகள் தொழிலாளர் சந்தையின் பெரும் பங்கினை ஈர்த்துக் கொண்டமையின் மூலம் தொடர்ச்சியாக தாழ்ந்த வீத தொழிலின்மையினை தோற்றுவித்ததுடன், இது தொழிற்சந்தை நிலமைகளை மேலும் இறுக்கமாக்குவது பொருளாதாரத்திலும் விலை உறுதிப்பாட்டிலும் அதேபோன்று சமூக உறுதிப்பாட்டிலும் சவால்களை தோற்றுவிக்கக்கூடும்.** 2010ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து ஒவ்வொரு காலாண்டிலும் இலங்கையின் தொழிலின்மை வீதம் 5 சதவீதத்திற்கும் குறைவாகவே இருப்பதும், மோசமான உலகளாவிய பொருளாதார நிலமைகளுக்கிடையிலும் பெருமளவு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் காணப்படுவதும் தொழிலாளர் சந்தை நிலமைகளை மேலும் இறுக்கமாக்கும். இது, கடந்த மூன்றாண்டுகளாகவுள்ள இலக்க மட்டத்தில் தொடர்ந்து காணப்படும் தாழ்ந்த நுகர்வோர் விலைப் பணவீக்கம் தளர்த்தும் காரணியாகக் காணப்பட்ட போதும் கூலி - விலை மட்டத்தினை படிப்படியாக அதிகரித்து கூலி அழுத்தங்களை தோற்றுவித்து விலை மீதான மேல் நோக்கிய அழுத்தங்களுக்கும் வழியமைக்கலாம். எனவே, பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்தின வலுப்படுத்துவதற்கு தொழிலாளர் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்கும் மூலதனச் செலவினை அதிகரிப்பதற்கும் உதவியளிப்பது இன்றியமையாததாகும். 2011இல் 48.2 சதவீதமாக இருந்த தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தினை மேலும் மேம்படுத்த வாய்ப்புக்களை கொண்டிருப்பதுடன் தற்பொழுது தொழிற்படையிலில்லாத குடித்தொகையினரை சந்தைக்குள் ஈர்த்துக் கொள்வதன் மூலம் தொழிற்சந்தையின் அழுத்தங்களைக் குறைக்கலாம். ஆகவே, சிறந்த தரமான அரச போக்குவரத்து, நகர வீடமைப்பு, குழந்தைகள் நல வசதிகள் உள்ளிட்ட பௌதீக உட்கட்டமைப்புக்களையும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளையும் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்வது தொழிலாளர் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்தவும் தொழிலாளர் பங்கேற்பினை அதிகரிப்பதற்கும் அவசியமானவையாகும். இலங்கை தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தில் அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறிப்பிட்ட சில வகைத் தொழில்களுக்கான மாற்று நெகிழ்ச்சித்தன்மை பொருந்திய ஏற்பாடுகளை வழங்கும். இது தொழிலாளர் செலவினைக் குறைக்கும் அதேவேளையில் தொழிற்படையில்லாதவர்களையும் தொழிற் சந்தைக்குள் கொண்டு வர உதவும்.

**நாட்டில் விரைவாக அதிகரித்து வரும் வயது முதிர்ந்தோர் குடித்தோகை அண்மைய எதிர்காலத்தில் பல பொருளாதார சமூகத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். எனவே, அத்தகைய குடித்தொகை மாற்றங்களின் தாக்கத்தினைக் குறைப்பதற்கு வழிமுறைகள் தேவைப்படுகின்றன.** தற்பொழுது இடம்பெற்று வரும் குடித்தொகைப் பரம்பல் மாற்றங்களின் காரணமாக, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிடையே இலங்கை வயது முதிர்ந்தோர் குடித்தொகை விரைந்து வளர்ந்து வரும் நாடொன்றாகக் காணப்படுகின்றது. முக்கியமாக உயர்வடைந்த வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலம் காரணமாக நாட்டில் 60 வயதிற்கு மேற்பட்டோரின் குடித்தொகை வளர்ச்சியடைந்து வரும் நிலை காணப்படுகின்றது. 2030 அளவில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களின் குடித்தொகை மொத்தக் குடித்தொகையின் விகிதத்தில் 25 சதவீதமாகவிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புரட்டிப் போடப்பட்டுள்ள இக்குடித்தொகைக் கூம்பு, தொழிலாளர் கிடைப்பனவு, தொழிற்படையின் அமைப்பு, உற்பத்தியாக்கம், முதலீடு, நுகர்வு, சேமிப்பு மற்றும் வயது முதிர்ந்தோர் நலப் பணி மீதான நலன்புரிச் செலவின் மீதான கணிசமான அதிகரிப்பு ஆகிய நியதிகளில் பல பொருளாதார சமூக விளைவுகளுக்கு வழியமைத்திருக்கிறது. வயது முதிர்ந்தவர்களின் நுகர்வு மற்றும் சேமிப்பு மாதிரிகளில் காணப்படும் மாற்றல்கள் மொத்த நுகர்விலும் அதேபோன்று சேமிப்பிலும் தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும். நலக் கவனிப்பிற்கான அதிகரித்த கேள்வி நலப் பணி மீதான அரச செலவினத்தினை அதிகரிக்கின்ற வேளையில் அதிகரிக்கின்ற ஓய்வூதியச் செலவுகள் அரசாங்கத்தின் செலவினை மோசமாகப் பாதிக்கக்கூடும். எனவே, தொழிலாளர் ஒழுங்குவிதிகளுக்கு அவசியமான திருத்தங்கள், ஓய்வூதிய நிதியத்தின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துதல் போன்ற பொருத்தமான கொள்கைகளை வடிவமைப்பதும் நடைமுறைப்படுத்துவதும் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியனவாகவுள்ள வேளையில் வயது முதிர்ந்தோரின் நல வசதிகளை மேம்படுத்துவதுடன் சேமிப்பின் உண்மைப் பெறுமதியினையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**கடந்த இரண்டாண்டுகளில் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகளைத் தொடர்ந்து 2012இல் இலங்கையின் பொருளாதாரம் மிதமும் திரட்சியுமடைந்த தன்மையினைக் கொண்டிருக்கும் போல் தெரிகின்றது.** வெளிநாட்டுத் துறையிலும் நாணயத் துறையிலும் தோற்றம் பெற்ற பிரச்சனைகள் 2012இன் ஆரம்ப பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வலுவான கொள்கைப் பிரதிபலிப்புக்களின் மூலமாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, இக்கொள்கை வழிமுறைகள் நிச்சயமற்ற உலகளாவிய நிகழ்வுகளுடன் சேர்ந்து 2012இன் பொருளாதார வளர்ச்சியின் மீதும் நுகர்வோர் விலைப் பணவீக்கத்தின் மீதும் மோசமான நிலையற்ற தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும் போல் தோற்றுகின்றதெனினுல், அதன் பின்னர் பொருளாதாரம் 8 சதவீதத்திற்கும் கூடுதலான வலுவான வளர்ச்சி வீதத்தினைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பேரண்டப் பொருளாதார அடிப்படைகளை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் ஒன்று சேர்ந்து மேலே குறிப்பிடப்பட்ட அமைப்பியல் தடைகளைக் காத்திரமான முறையில் கட்டுப்படுத்துவதன் மூலம் வெளிநாடு மற்றும் உள்நாட்டிலிருந்தும் ஏற்படுகின்ற மோசமான தாக்கங்களை பொருளாதாரம் எதிர்த்து நிற்கக் கூடியதாகவுள்ள வேளையில் தாழ்ந்த பணவீக்க சூழலில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியின் உறுதித்தன்மையினையும் உறுதிப்படுத்துகின்றது.